வடக்கின் முதல் நாளிதழ் - Estd 1959

Reg. No. : P. 1632

விலை ரூ. 30/=

# ஈழநாடு

Eelanadu ඊළනාඩු




Email : news@eelanadu.lk | மலர் : 03 | 20.10.2022 வியாழக்கிழமை | இதழ் : 315 | பக்கங்கள் : 16

## எரிபொருளுக்கு நீண்டகால கடன்!

மொஸ்கோ, ஒக். 20

எரிபொருளை பெற்றுக் கொள்வதற்காக நீண்டகாலக் கடனுதவியைப் பெறுவதற்கான சாத்தியக்கூறுகள் குறித்து ரஷ்ய அரசாங்கத்துடன் ஆக்கபூர்வமான கலந்துரையாடல் இடம்பெற்றுள்ளதாக மொஸ்கோவிலுள்ள இலங்கைத் தூதரகம் தெரிவித்துள்ளது.

15

## தமிழ் அரசியல் கைதிகள் 8 பேருக்கு பொது மன்னிப்பு

### பெயர் விவரங்களும் வெளியீடு

கொழும்பு, ஒக். 20

நீண்டகாலமாகத் தடுத்து வைக்கப்பட்டிருந்த தமிழ் அரசியல் கைதிகள் 8 பேர் ஜனாதிபதியின் பொது மன்னிப்பின் கீழ் விடுதலை செய்யப்படவுள்ளனர். இவர்கள் அனைவரும் தீபாவளி தினத்தன்று விடுதலையாவர்.

ரகுபதி சர்மா, வரதராஜன், இலங்கேஸ்வரன், நவதீபன், ராகுலன், காந்தன், சுதா, ஜெபநேசன் ஆகியோரே பொதுமன்னிப்பின் கீழ் இவ்வாறு விடுதலை செய்யப்படவுள்ளனர் என்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர் சார்ள்ஸ் நிர்மலநாதன் தெரிவித்துள்ளார்.

அத்துடன், இவர்களை விடுதலை செய்வதற்காக ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கும் நீதி அமைச்சர் விஜயதாஸ ராஜபக்ஷவுக்கும் நேற்று பாராளுமன்றத்தில் அவர் நன்றிகளை தெரிவித்

15

## கடனை மறுசீரமைப்பதற்கு அமெரிக்கா ஆதரவளிக்கும்!

### ஜனாதிபதியிடம் டொனால்ட் லு உறுதி

கொழும்பு, ஒக். 20

கடன் மறுசீரமைப்பு தொடர்பாக சர்வதேச நாணய நிதியத்துடனான பேச்சுக்களில் இலங்கைக்கு அமெரிக்கா தொடர்ந்து ஆதரவளிக்கும் என்று அமெரிக்காவின் தெற்கு மற்றும் மத்திய ஆசிய பிராந்தியங்களுக்கான உதவி இராஜாங்க செயலாளர் டொனால்ட் லு தெரிவித்தார்.

ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவை ஜனாதிபதியின் செயலகத்தில் சந்தித்து உரையாடிய போதே அவர் மேற்கண்டவாறு உறுதியளித்தார்.

15

## 22ஆம் திருத்தத்தை ஆதரிக்க மாட்டோம்!

### ஆளும் கட்சி எம். பிக்கள் உறுதி

கொழும்பு, ஒக். 20

பாராளுமன்றத்தில் இன்று வியாழக்கிழமையும் நாளை வெள்ளிக்கிழமையும் 22ஆம் திருத்தச் சட்டமூலம் விவாதிக்கப் படவுள்ளது. இந்நிலையில், இந்த சட்டமூலத்துக்கு ஆதரவளிக்கப் போவதில்லை என்று நேற்று நடந்த ஆளும் கட்சி கூட்டத்தில் சிறீலங்கா பொதுஜன பெரமுன கட்சியினர் தெரிவித்தனர்.

15

# பல தரப்பு பங்களிப்புடன் உள்நாட்டுப் பொறிமுறை!

### சகல கட்சிகளுக்கும் அரசு அழைப்பு!



கொழும்பு, ஒக்ரோபர் 20

பாராளுமன்றத்தை பிரதிநிதித்துவப்படுத்தும் அனைத்து தரப்பினரையும் உள்ளடக்கி பொதுவான பொறிமுறை ஒன்றை ஏற்றுக் கொள்ளுமாறு அழைப்பு விடுக்கிறேன் என்று வெளிவிவகார அமைச்சர் அலி சப்ரி தெரிவித்துள்ளார்.

15

## புலிகள் மீதான தடையை இந்தியா நீக்க வேண்டும்!

### நேரில் கோரியது ஜனநாயக போராளிகள்



யாழ்ப்பாணம், ஒக். 20

தென்னாசிய பிராந்தியத்தில் முக்கிய வல்லரசான இந்தியா விடுதலைப் புலிகள் மீதான தடையை நீக்க வேண்டும். புலிகள், தேர்தல் ஜனநாயக வழிமுறைகளை ஏற்று அரசியலுக்கு வந்துள்ளனர். எனவே, அவர்கள்மீதான தடையை நீக்க வேண்

15

## இலங்கை தொடர்பாக நாணய நிதியம் கவலை!

நியூயோர்க், ஒக். 20

இலங்கை நிலவரம் தொடர்பில் ஆழ்ந்த கவலை கொண்டிருப்பதாக சர்வதேச நாணய நிதியம் தெரிவித்துள்ளது. அதன், இலங்கைக்கான முக்கிய அதிகாரிகளான பீற்றர் ப்ருயர், மசாஹிரோ நோஷகி ஆகியோரே இதனை தெரிவித்துள்ளனர்.

இலங்கை நெருக்கடி மக்கள் மீது ஏற்படுத்தும் தாக்கம் குறித்து ஆழ்ந்த கவலை கொண்டுள்

15

## கடன் மறுசீரமைப்பை வெற்றியாக்கி விவேகமான பொருளாதார திட்டம்!

### அரசு தயாராக உள்ளது என்கிறார் ஜனாதிபதி!

கொழும்பு, ஒக். 20

கடன் மறுசீரமைப்பை வெற்றிகரமாக முன்னெடுத்து முறையாக பொருளாதாரத்தை நிர்வகிக்க அரசாங்கம் தயாராக உள்ளது. நேரடிவரி வருமானம் 20 வீதத்தைவிட அதிகமாக இருக்க வேண்டுமென சர்வதேச நாணய நிதியம் குறிப்பிட்டதால் புதிய வரிகொள்கை அமுல்படுத்தப் பட்டது.

வரி அறவீட்டு முறையொன்று இல்லாவிட்டால் இலக்கை அடைய முடியாதென்பதோடு சர்வதேச நாணய நிதியத்தின் உதவிகளையும்

15

## பலாலி விமான நிலையத்தை விரிவாக்க இந்தியாவுடன் பேச்சு!

### விமான சேவைகள் அமைச்சர் நிமல்

கொழும்பு, ஒக். 20

பலாலி விமான நிலையத்தில் பெரிய விமானங்களை தரையிறக்கக்கூடிய வகையில் ஓடு பாதைகளை விரிவாக்கம் செய்ய எதிர்பார்த்துள்ளோம். இது தொடர்பில் இந்திய அரசாங்கத்துடன் பேச்சு இடம்பெறுகிறது என்று துறைமுகங்கள், கப்பல் மற்றும் விமான சேவைகள் அமைச்சர் நிமல் சிறீபால டி சில்வா தெரிவித்துள்ளார்.

“யாழ்ப்பாணம் விமான நிலையம், நாட்டுக்கு மிகவும் முக்கியமானது. இங்கிருந்து தொடர்ந்து சேவைகள் முன்னெடுக்கப்

15

## பரந்தன் தொழில்சாலையை உடன் ஆரம்பிக்க நடவடிக்கை



### அமைச்சர் ரமேஷ் பத்திரண

கிளிநொச்சி, ஒக். 20

பரந்தன் இரசாயன தொழில்சாலையின் செயல்பாடுகளை அரசாங்கம் உடனடியாக ஆரம்பிக்க நடவடிக்கை எடுக்கப்படுகிறது என்று பெருந்தோட்டம் மற்றும் கைத்தொழில் அமைச்சர் ரமேஷ் பத்திரண தெரிவித்துள்ளார்.

தொழில்சாலை அமைந்துள்ள இடத்துக்கு ஆய்வுக்கு வருகை

15

**உண்மைகள் புனிதமானவை; கருத்துக்கள் சுதந்திரமானவை**

## இப்படியும் நடக்கிறது...!

ஈழத்தில் யுத்தம் நடந்துகொண்டிருந்த காலத்தில் மாத்திரமல்ல, அதற்குப் பின்னரும்கூட தமிழகத்தில் நின்று ஈழத்தைப் பற்றிக் கதைத்தால், அங்கே சிங்கள இராணுவம் தமிழ் பெண்களை கொடுமைப்படுத்துகின்றது. தமிழர்கள் அங்கு வாழவே முடியாது. இந்து ஆலயங்களை இராணுவம் இடிக்கின்றது.

இப்படித்தான் சொல்வார்கள்.

அப்படிச் சொல்லிக் கொண்டிருக்க வேண்டிய தேவை ஏன் அவர்களுக்கு இப்போதும் இருக்கின்றது என்பது தெரிவில்லை. ஆனால், அதுபோலவே இப்போது பல்வேறு விடயங்களை தொடர்ந்து கூறிக் கொண்டிருக்கின்றார்கள்.

அண்மைக் காலமாக தமிழக செய்திகளை அலங்கரிக்கின்ற முக்கிய செய்தி, சீன இராணுவத்தின் பிரசன்னம் வடக்கில் அதிகரித்திருக்கின்றது. அது இந்தியப் பாதுகாப்புக்கு அச்சுறுத்தலானது என்று பரவலாக தொடர்ச்சியாக கூறப்பட்டு வருவதை அவதானிக்க முடிகின்றது.

கடலட்டை பண்ணைகள் என்ற பெயரில் இப்போது வடக்கில் சீனர்களின் நடமாட்டம் அதிகரித்திருப்பதாகவும் கடலட்டை பண்ணைகள் என்ற பெயரில் சீன இராணுவம் வடக்கில் பாரிய அளவில் நடமாடுவதாகவும் அது இந்தியாவின் பாதுகாப்புக்கு அச்சுறுத்தலானது என்றும் தமிழகத்தில் பரபரப்பு செய்திகள் வெளிவருகின்றன.

வடக்கில் இப்போது கடலட்டை பண்ணைகள் அமைப்பதில் பலரும் ஆர்வம் காட்டிவருவது சரியானதுதான்.

அவ்வாறு அமைக்கப்படும் பண்ணைகளில் உருவாகும் கடலட்டைகள் சீனர்களுக்காகவே அதிகம் வளர்க்கப்படுகின்றன என்பதும் உண்மையானதுதான். அதனை இங்கே யார் வளர்த்தாலும் அதற்கான சந்தை சீனாவிலும் இந்தோனேசியாவிலும் தாய்லாந்திலும்தான் இருக்கின்றது.

ஆனால், அதற்காக வடக்கில் இப்போது சீனர்களே வந்து கடலட்டை பண்ணகளை ஆரம்பிப்பது போலவும் அந்த கடலட்டை பண்ணைகள் என்ற போர்வையில் சீன இராணுவம் வடக்கில் நடமாடுவதாகவும் தமிழக ஊடகங்கள் செய்திகளை வெளியிடுகின்றபோது, நமது ஊடகங்கள் அதனை அப்படியே பிரதி எடுத்து மீள்பிரசுரிக்கின்றன.

வடக்கில் நல்லாட்சி காலத்தில்- மறவன்புலவில் கடலட்டை குஞ்சுகளை உற்பத்திசெய்யும் நிறுவனம் ஒன்றை ஒரு சீனர் தனி நபராக ஆரம்பித்திருந்தார். அதற்கு உள்ளூர் பிரதேச சபை உறுப்பினரின் ஆதரவும் இருந்தது.

அது ஆரம்பிக்கப்பட்ட காலத்தில் இந்த ஊர்க்குருவியும் அதனை சென்று பார்த்திருந்தது ஞாபகத்துக்கு வருகின்றது.

அதன் பின்னர் மற்றுமாரு சீனர் அரியாலையில் கடலட்டை வளர்க்கும் பண்ணை ஒன்றை அதுவும் நல்லாட்சி அரசின் காலத்தில் அனுமதி பெற்று தொடங்கியிருந்தார்.

ஆனால், இப்போது பரவலாக பலரும் அதுபற்றி கதைக்க தொடங்கியிருக்கின்றனர். அதனால்தான் நம்மவர்கள் பலரும் அவ்வாறு கடலட்டை வளர்க்கும் பண்ணைகளை ஆரம்பிக்கத் தொடங்கியிருக்கின்றனர்.

நாம் இங்கே சொல்ல வருவது, கடலட்டை பண்ணைகளை சீனர்கள் தொடங்கவில்லை என்பதும் இங்கு கடலட்டை பண்ணைகள் என்ற பெயரில் சீன இராணுவம் நடமாடவில்லை என்பதும் இந்திய ஊடகங்களுக்கு தெரியாமல் இருக்கலாம். ஆனால், அதுபற்றிய தகவல்கள் நமது ஊடகங்களுக்கும் தெரியாதா என்பதே.

அண்மைக்காலமாக சீன தூதரகத்தின் நடவடிக்கைகள் வடக்கிலும் கிழக்கிலும் அதிகரித்திருப்பது இரகசியமானதல்ல.

வடக்கில் இந்திய இராணுவத்தினரிடம் ஐந்து கோரிக்கைகளை முன்வைத்து உண்ணாவிரதமிருந்து உயிர்நீத்த தியாகி திலீபனின் நினைவேந்தல் நிகழ்வை சிலர் பரபரப்பாக்கியதும் இந்திய இராணுவத்தினர் தமது தாக்குதலை ஆரம்பித்தபோது முதல் பலியான தமிழ் மக்களின் நினைவுகூரலை முதல் தடவையாக யாழ்ப்பாணத்தில் நடத்தியதும் பல கேள்விகளை எழுப்பியிருந்தாலும் அதற்காக இந்த கடலட்டை பண்ணையை பேசு பொருளாக்கியிருப்பது எதற்காக என்பதை புரிந்து கொள்ளமுடியவில்லை.

வடக்கில் கடல்வளம் இந்திய இழுவைப் படகுகளால் சூறையாடப்பட்டுக் கொண்டிருக்க, நமது மீனவர்கள் கடலுக்கு செல்வதற்கே தயக்கம் காட்டிவருகின்றனர்.

இதேவேளை கடலணவுக்கு தேவை அதிகரிக்க கடலில் மீன்வளம் குறைய நமது மீனவர்கள் தமது வாழ்வாதாரத்துக்காக இதுபோன்ற மாற்று வழிகளை நாடுவதைத் தவிர வேறு மார்க்கம் இல்லை. அது கடலட்டை வளர்ப்போடு மாத்திரமல்ல, கடல் சார்ந்த இடங்களில் நன்னீர் மீன் வளர்ப்பிலும் அதிக கவனம் செலுத்தவேண்டிய தேவை ஏற்பட்டிருக்கின்றது என்கிறார் இந்தத் துறைசார்ந்த அறிவுள்ள புத்திஜீவி ஒருவர்.

நமது அரசியல் ஆய்வாளர்கள் சொல்வதுபோல இந்த புவிசார் அரசியலில் சிக்குண்டு நமது வடக்கு - கிழக்கு அல்லோலகல்லோலப்படத்தான் போகிறதோ என்று கேட்காமல் இருக்க முடியவில்லை.!

- ஊர்க்குருவி

# சோழரின் ஆட்சியிலேயே தமிழரின் தனி அடையாளங்கள் நிறுவப்பட்டன

## சிறீதரன் எம். பி.

சென்னை, ஒக். 20

தமிழர்களுக்கான மாபெரும் அடையாளமான தஞ்சைப் பெருங்கோயில் உள்ளிட்ட பல அடையாளங்களை நிறுவிய சிறப்பு மிக்க சோழர்களின் ஆட்சிமுறையும், வீரமும், விவேகமும் தமிழர்கள் மார்தட்டிப் பெருமிதம் கொள்ளத்தக்க வரலாறுடையவர்கள் என்பதை எண்பிக்கும் சாட்சியங்கள் என்று பாராளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறீதரன் தெரிவித்துள்ளார்.

ருத்ரக்ஷா அறக்கட்டளையின் ஏற்பாட்டில் நேற்று முன்தினம் சென்னை ஆயிரம் விளக்குப் பகுதியில் அமைந்துள்ள இராணி சீதை திரையரங்கில் நடைபெற்ற இராஜராஜசோழன் விருது வழங்கும் விழாவில் சிறப்பு அழைப்பாளராகக் பங்கேற்று உரையாற்றும் போதே பாராளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறீதரன் மேற்கண்டவாறு தெரிவித்தார்.




மேலும், சோழர்களின் ஆட்சிக்காலம் என்பது தமிழக வரலாற்றின் பொற்காலம் என்றே போற்றப்படுகிறது. அதிலும் குறிப்பாக இராஜராஜ சோழன் காலத்தே தமிழும், சைவமும் செழிப்புற்றிருந்ததை வரலாறு சொல்கிறது.

தமிழ்நாடு, கர்நாடகா, இலங்கை, மலேசியா என்று நாடுகடந்த ரீதியில் மொழிக்கும்,கலைக்கும், இனத்துக்குமாக தத்தம் துறைசார்ந்து அளப்பெரும் பணியாற்றிய பல ஆளுமைகள் இந்நிகழ்வில் இராஜராஜசோழன் விருது வழங்கி கௌரவிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (ஐ)

# கிராம, சமுர்த்தி அலுவலர்களுக்கு இடையூறு ஏற்படுத்த வேண்டாம்!

## கல்மடுநகர் மக்கள் போராட்டம்

கிளிநொச்சி, ஒக். 20

கண்டாவளை கல்மடு கிராம மக்கள் தங்கள் கிராம அலுவலர் மற்றும் சமுர்த்தி உத்தியோகத்தரின் கடமைகளுக்கு இடையூறு ஏற்படுத்த வேண்டாம் என்றும் இடமாற்றம் செய்ய வேண்டாம் எனவும், அரசியல் தரப்பு ஒன்றின் தேவையற்ற அரசியல் தலையீடுகள் தவிர்க்கப்படல் வேண்டும் என்றும் வலியுறுத்தியே பொது மக்கள்இந்தப் போராட்டத்தை மேற்கொண்டிருந்தனர்.



கூடிய பொதுமக்கள் பொது மக்கள் ஒன்றுதிரண்டு “எங்களுடைய அதிகாரிகள் எங்களுக்கு வேண்டும், நேர்மையாக செயல்படும் அதிகாகரிகளுக்கு மன உளைச்சலை ஏற்படுத்தாதே, உங்களின் சுயநலன்களுக்காக அதிகாரிகளின் சுதந்ததிரத்தில் தலையிடாதே, அரசியல் நோக்கங்களுக்காக அதிகாரிகளை அசௌகரியங்களுக்கு உள்ளாக்காதே, மக்கள் சேவையாளர்களின் மனங்களை நோகடிக்காதே போன்ற வாசகங்கள் எழுதப்பட்ட பதாதைகளை ஏந்தியிருந்தனர். அத்துடன், 200 இற்கும் மேற்பட்டவர்கள் ஒப்பமிட்டு பிரதேச செயலாளாருக்கு மகஜர் ஒன்றையும் கையளித்திருந்திருந்தனர்.

கடந்தவாரம் குறித்த அலுவலர்களுக்கு எதிராக எமது கிராமத்தைச் சேர்ந்த சிலர் போராட்டம் ஒன்றை முன்னெடுத்திருந்தனர். இவர்கள் கிராம அலுவலர் மற்றும் சமுர்த்தி உத்தியோகத்தர் ஊழல் செய்கின்றனர் என்றும், நேர்மையாக செயல்படவில்லை என்றும் தெரிவித்திருந்தனர். இந்தக் கருத்து, உண்மைக்கு புறம்பானது இந்த இரு அலுவலர்களுக்கும் எங்கள் கிராமத்திற்காக நேரம் காலம் பாராது நியாயமாக செயல்படுகின்றவர்கள். எனவே அதிகாரிகளின் நேர்மையான செயற்பாடுகாரணமாக தங்கள் சுயநலன்கள் பூர்த்தி செய்யப்படவில்லை என கருதும் சிலர் இவர்களுக்கு எதிராக போராட்டம் ஒன்றை மேற்கொண்டிருந்தனர். இதன்காரணமாகதான் பெரும்பாலான கிராம மக்களாகிய நாம் நேர்மையாக செயற்படும் அதிகாரிகள் பாதிக்கப்படக் கூடாது என்பதற்காக இப் போராட்டத்தை முன்னெடுத்துள்ளோம் என்று நேற்று போராட்டத்தை நடத்தியவர்கள் தெரிவித்தனர். (ஐ)

# நெடுங்கேணி பகுதியில் யுவதி சுட்டுக் கொலை!

வவுனியா, ஒக். 20

வவுனியா - நெடுங்கேணி சிவாநகர் பகுதியில் யுவதி ஒருவர் சுட்டுக் கொலை செய்யப்பட்டுள்ளார்.

நெடுங்கேணி - சிவாநகர் பகுதியைச் சேர்ந்த 21 வயதான யுவதி ஒருவரே இவ்வாறு சுட்டுக் கொலை செய்யப்பட்டுள்ளதாக பொலிஸார் கூறினர்.

நேற்று முன் தினம் இரவு குறித்த யுவதி வீட்டின் பின்புற வாசலுக்கு சென்றபோது, மறைந்திருந்து துப்பாக்கிப் பிரயோகத்தை மேற்கொண்ட நபர் அங்கிருந்து தப்பிச் சென்றுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

சம்பவத்தில் உயிரிழந்த யுவதியின் சடலம் வவு னியா பொது வைத்தியசாலைக்கு கொண்டு செல்லப் பட்டது.

நெடுங்கேணி பொலிஸார் சம்பவம் தொடர்பில் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர். (அ)

ஈழநாடு
Eelanadu
20.10.2022 வியாழக்கிழமை
பிலவ வருடம், ஐப்பசி 03

**“ஏசுவார்கள், எரிப்பார்கள், அஞ்சவேண்டாம்
உண்மையை எழுதுங்கள்; உண்மையாய் எழுதுங்கள்”**
- யோகர் சுவாமிகள்.

E-mail: eelanaduweekly@gmail.com
**தொலைபேசி : 021 730 1370**

## உண்மையறிவதில் முஸ்லிம் நோக்கு?

அடுத்த ஆண்டு தாம் உண்மையறியும் ஆணைக்குழுவை நியமிக்கப் போவதாக வெளிவிவகார அமைச்சர் அலி சப்ரி தெரிவித்திருக்கின்றார். இது தொடர்பில் தமிழ் மக்களின் எதிர்பார்ப்பை சுமந்திரன் வெளிப்படுத்தியிருக்கின்றார். அதாவது, உண்மையறியும் பொறிமுறையானது சர்வதேச பங்குபற்றலுடன் இடம்பெற வேண்டும். அது வெறுமனே அரசாங்கத்தால் தீர்மானிக்கப்படும் உள்நாட்டு பொறிமுறையாக மட்டுமே இருக்க முடியாதென்று அவர் குறிப்பிட்டிருக்கின்றார். ஆனால், முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் ரவூப் ஹக்கீம் உள்நாட்டு பொறிமுறையே சரியானதென்றும் வெளியார் இந்த விடயத்தில் நேர்மையான முகவர்களாக இருக்கமாட்டார்கள் - அதேவேளை, சிங்கள தேசியவாத சக்திகள் வெளியில் அணிதிரளுவதற்கும் இது வழி வகுக்குமென்றும் தெரிவித்திருக்கின்றார். அதாவது, முஸ்லிம்கள் உள்நாட்டு பொறிமுறையை விரும்புகின்றார்கள் என்பதே ஹக்கீமின் நிலைப்பாடாகும்.

கோட்டாபய ராஜபக்ஷ அதிகாரத்தில் இருக்கின்றபோது முஸ்லிம் அரசியல்வாதிகள் முற்றிலுமாக செயலிழந்திருந்தனர். இந்தக் காலத்தில் முஸ்லிம்களின் நலன் கருதி, முஸ்லிம் அரசியல்வாதிகள் பேசாதளவுக்கு மட்டக்களப்பு மாவட்ட கூட்டமைப்பு பாராளுமன்ற உறுப்பினர் சாணக்கியன் பேசியிருந்தார். இதனால் அவர் முஸ்லிம்கள் மத்தியில் பிரபலமான தமிழ் அரசியல்வாதியாகவும் இருந்தார். முஸ்லிம்களுக்கு ஆதரவாக குரல் கொடுத்தற்காக கனடாவாழ் முஸ்லிம்கள் சாணக்கியனுக்கு அவர்களின் புனித நூலான அல் குர்ஆனையும் அன்பளிப்பு செய்திருந்தனர். ஆனால், இன்றோ தமிழ் மக்களின் எதிர்பார்ப்புக்கு முற்றிலும் மாறான நிலைப்பாட்டை ஹக்கீம் வெளிப்படுத்தியிருக்கின்றார். தமிழர்களோடு நின்றால், சிங்கள கடும்போக்குவாதிகளின் கோபத்துக்கு ஆளாக நேரிடுமென்று ஹக்கீம் சிந்திக்கின்றார். இதே போன்றுதான் இந்திய பிரதமருக்கு அனுப்பப்பட்ட கடித முயற்சியின்போதும் தன்மீது கேள்விகள் வந்துவிடக்கூடாதென்னும் அடிப்படையில் இறுதி நேரத்தில் நழுவிக் கொண்டார்.

முஸ்லிம்கள் நெருக்கடிகளை சந்திக்கும்போதெல்லாம் தமிழர்கள் கைகொடுக்கின்றனர். ஆனால், தமிழர்களுக்கு ஆதரவாக ஓரிடத்தில்கூட முஸ்லிம்கள் நிற்பதாகத் தெரியவில்லை. தமிழ்த் தேசிய அரசியல் பரப்பில் முஸ்லிம்களுக்கு ஆதரவான நிலைப்பாட்டை அதிகம் வெளிப்படுத்தும் அரசியல்வாதிகளில் சுமந்திரன் முதன்மையானவர். ஆனால், அவரைப் போன்றவர்களால் தமிழ் மக்களின் நலன் தொடர்பான விடயங்களில் முஸ்லிம்களின் ஆதரவை பெற்றுக்கொள்ள முடியவில்லை. அவ்வாறாயின் முஸ்லிம்களுக்கு ஆதரவான நிலைப்பாட்டால் விளைந்த - விளையும் பயன்தான் என்ன?

அரசியல் தீர்மானங்கள் என்று வருகின்றபோது எந்தவொரு சந்தர்ப்பத்திலும் நியாயத்தின் பக்கமாக முஸ்லிம் அரசியல்வாதிகள் நிற்பதில்லை. தங்களின் நலனை நிறுத்துப் பார்த்துத்தான் ஒவ்வொரு விடயங்களையும் நோக்குகின்றனர்.

உள்நாட்டு பொறிமுறை தொடர்பில் போதிய அனுபங்கள் இருக்கின்றபோது உள்நாட்டு பொறிமுறையை கண்ணை மூடிக்கொண்டு தமிழர்களால் ஆதரிக்க முடியாது. தவிர, உள்நாட்டு பொறிமுறையை தீர்மானிக்கும் முழு அதிகாரமும் கொழும்பு மைய சிங்கள ஆளும் வர்க்கத்திடம்தான் உண்டு. தென்னாபிரிக்க நடைமுறை முற்றிலும் வேறானது.

தென்னாபிரிக்க போராட்டத்தில் கறுப்பின மக்களே வெற்றிபெற்றனர். வெற்றிபெற்றவர்கள் தங்களுக்கு எதிராக செயல்பட்ட சிறுபான்மை வெள்ளை இனத்துடன் நல்லிணக்கத்தை ஏற்படுத்திக் கொள்ளும் நோக்கில் உண்மையை கண்டறியும் பொறிமுறையை ஏற்படுத்தினர். அந்தப் பொறிமுறையை பாதிக்கப்பட்ட கறுப்பின மக்களே தீர்மானித்தனர். ஆனால், இங்கு நிலைமை தலைகீழானது. யுத்தத்தில் வெற்றிபெற்ற தரப்பு, பாதிக்கப்பட்ட மக்களுக்கு எவ்வாறான பொறிமுறை வேண்டுமென்று தீர்மானிக்கின்றது. இந்த இடத்தில் பாதிக்கப்பட்ட மக்களிடம் பதிலளிப்பதற்கு எவ்விதமான அதிகார கட்டமைப்பும் இல்லை. இதன் காரணமாகவே, சர்வதேச பங்களிப்புடன்கூடிய பொறிமுறையை தமிழ் மக்கள் கோருகின்றனர். உண்மையில் நியாயத்தின் பக்கமாக நிற்க வேண்டுமென்றால் முஸ்லிம்கள் தமிழ் மக்களின் கோரிக்கைக்கு ஆதரவாகவே கைகோக்க வேண்டும் - ஆனால், அவர்களோ பாதிப்பை ஏற்படுத்திய அரசின் பக்கமாகவே நிற்கின்றனர்.

# சீனர்களின் நடமாட்டத்தைக் குறைத்துவிட்டு இந்திய முதலீட்டாளர்களை பயன்படுத்துக!

### *பாராளுமன்றத்தில் கோவிந்தன் கருணாகரம் கோரிக்கை*

*கொழும்பு, ஒக். 20*

*கடந்த பொருளாதார நெருக்கடி நிலையில் இந்தியா நான்கு பில்லியன் டொலருக்கும் அதிகமான தொகையினை உதவியாகத் தந்திருந்தது. அப்படியானவர்களைப் பகைத்துக் கொள்ளாமல், வடக்கில் சீனர்கள் நடமாடுவதைக் குறைத்துக் கொண்டு, இந்திய முதலீட்டாளர்களை பயன்படுத்தவேண்டும் என்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினரும் தமிழ் ஈழ விடுதலை இயக்கத்தின் செயலாளர் நாயகமுமான கோவிந்தன் கருணாகரம் (ஜனா) பாராளுமன்றத்தில் தெரிவித்தார்.*

*பெற்றோலியப் பொருட்கள் (விசேட ஏற்பாடுகள்) (திருத்தம்) சட்டமூலத்தின் இரண்டாம் வாசிப்பு மீதான விவாதத்தில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே பாராளுமன்ற உறுப்பினர் கோவிந்தன் கருணாகரம் இவ்வாறு தெரிவித்தார்.*

*தொடர்ந்து உரையாற்றிய அவர்,*

*உண்மையிலேயே என்னுடைய மட்டக்களப்பு மாவட்டம் குறிப்பாக, மீன்பிடி, விவசாயம், கால்நடை போன்றவற்றை கூடுதலாக செய்து அவைகளில் தங்கிவாழும் மாவட்டம். முதலாவதாக அமைச்சர் அவர்களுக்கு நன்றி கூற வேண்டும். விவசாயத்துக்குத் தேவையான டீசல் எந்தவித பிரச்சினையும் இல்லாமல் விநியோகிக்கப்பட்டுக் கொண்டு வருகிறது. கடந்த போகத்தில் கூட விவசாயிகள் பெருமளவில் நஸ்டமடைந்திருந்தாலும், அந்த அறுவடைக்குத் தேவையான டீசல் கூட சிரமம் இல்லாமல் பெற்றுக் கொள்ளக் கூடியதாக இருந்ததாக விவசாயிகள் கூறுகிறார்கள்.*


*நீண்ட நெடிய கடல் பரப்பைக் கொண்ட எங்களது மாவட்டத்தில் மீன்பிடிக்குச் செல்லும் எங்களது மீனவர்கள் மண்ணெண்ணெய் இல்லாத காரணத்தினால் மிகவும் கஸ்டமான சூழ்நிலையில் வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள். அவர்களுக்குக் கிடைக்கும் மண்ணெண்ணெய் கோட்டாவின் அடிப்படையினால் ஒரு வாரத்தில் இரண்டு நாள், அல்லது மூன்று நாட்களுக்கு மேல் தொழிலைச் செய்யமுடியாத நிலையில் இருக்கிறார்கள். அங்கு மண்ணெண்ணெய், எரிபொருள் நிரப்பு நிலையங்கள் ஊடாக செய்யக் கூடியதாக இல்லாத நிலையில் வாழைச்சேனை மீன்பிடித் துறைமுகம், களுவன்கேணி மீன்பிடி சங்கங்களின் ஊடாக விநியோகிக்கப்பட்டாலும் போதுமான அளவு அங்கு விநியோகம் இடம்பெறாமலிருப்பதை அமைச்சர் கவனத்திலெடுத்து சீராக மண்ணெண்ணெய் விநியோகத்தைச் செய்வதற்கு முயற்சி எடுக்கவேண்டுமென்று கேட்டுக் கொள்கின்றேன்.*

*கடந்த பாராளுமன்ற அமர்வுகளில் எமது மட்டக்களப்பு அமைச்சர் நசீர் அகமட் உட்பட இராஜாங்க அமைச்சர் வியாழேந்திரன் உட்பட விவசாய அமைச்சில் அமைச்சர், அமைச்சின் செயலாளர்கள், மட்டக்களப்பிலிருந்து வருகைதந்த விவசாயிகளுடன் யூரியா விநியோகம் தொடர்பில் பேசியிருந்தோம். அதன்போது 2500 மெற்றிக் தொன் தருவதாக கூறியிருந்தார்கள், ஆனால் விவசாயிகள் 5000 மெற்றிக் தொன் கோரியிருந்தார்கள். இடையில் 4000 மெற்றிக் தொன் உடனடியாக விநியோகிப்பதாக ஒரு உடன்பாடு வந்தது. ஆனால், இதுவரை 1840 மெற்றிக் தொன் மட்டக்களப்பு வந்திருக்கிறது. அதற்குக் கூறும் காரணம் என்னவென்றால் முதல் தடவை பாவிப்பதற்குரிய யூரியா 1943 மெற்றிக் தொன். ஆனால், 1840 மெற்றிக் தொன் தான் இதுவரை கிடைத்திருக்கிறது. 70 வீதம் யூரியாவும், 30 வீதம் சேதனப்பசளையும் வயல்களுக்கு இடவேண்டும் என்று கூறிக் கொண்டிருக்கும் போது அந்த 70 வீதமே மட்டக்களப்பு மாவட்டத்திற்கு 9785 மெற்றிக் தொன் தேவையாக இருக்கிறது. ஆனால் காலையில் விவசாய இராஜாங்க அமைச்சர் கூறும் போது ஒருலட்சத்து 20 ஆயிரம் மெற்றிக் தொன் யூரியா நவம்பர் மற்றும் டிசெம்பரில் வர இருப்பதாகக் கூறுகின்றார். ஆனால் நான் வேண்டிக் கொள்வது மட்டக்களப்பு, அம்பாறை-கிழக்கு விவசாயிகள் பொலநறுவை, அனுராதபுரம் குருநாகல் விசாயிகளை விட ஒரு மாதம் முன்னதாக விதைப்பைத் தொடங்குவதனால் டிசெம்பரில் வர இருக்கும் யூரியா அவர்களுக்குப் பிரயோசனமற்றதாக இருக்கும். எனவே நவம்பரில் வர இருக்கும் யூரியாவில் தேவையான யூரியாவை மட்டக்களப்பு மாவட்டத்திற்குக் கொடுக்க வேண்டுமென்று நான் கேட்டுக் கொள்கின்றேன்.*

*வடக்கில் இந்தியாவுக்கெதிராக சீனர்கள் களம் இறங்கியிருக்கிறார்கள். ஊர்காவல் துறையில் பருத்தித் தீவு என்னும் இடத்தில் சட்ட விரோதமாக கடலட்டைப் பண்ணை சீனர்களால் நடைமுறைப்படுத்தப்பட்டிருப்பதாக வடக்கு மீனவர் சங்கத் தலைவர் கூறியிருக்கின்றார். இது இந்தியாவுக்கு ஆபத்து என்று தமிழ்நாட்டுப் புலனாய்வுத் துறையினர் கூறியிருக்கின்றனர். சீனர்கள் செய்யும் கடலட்டைப் பண்ணைகளுக்கு யாரிடம் அனுமதி பெற்றார்கள். கடந்த வாரம் கடற்தொழில் அமைச்சர் டக்ளஸ் தவானந்தா அவர்கள் இந்திய தமிழ் நாட்டு முதலீட்டாளர்களை அழைத்துவந்து அங்கு கடலட்டைப் பண்ணைகளைச் செய்ய முதலீடுகளைக் கொண்டு வருவதற்கு பேச்சுவார்த்தைகளை செய்திருந்தார். ஆனால் தற்போது அனுமதியில்லாமல் சீனர்கள் அங்கு நிரம்பி வழிவதாகவும், புதிய புதிய தொழில்நுட்பங்களை அவர்கள் பயன்படுத்துவதாகவும் கூறுகின்றார்கள். கடந்த பொருளாதார நெருக்கடி நிலையில் இந்தியா நான்கு பில்லியன் டொலருக்கும் அதிகமான தொகையினை உதவியாகத் தந்திருந்தார்கள். அப்படியானவர்களைப் பகைத்து கொள்ளாமல், சீனர்கள் அங்கு நடமாடுவதைக் குறைத்துக் கொண்டு, இந்திய முதலீட்டாளர்களை பயன்படுத்தவேண்டும் என்று கேட்டுக் கொள்கின்றேன் - என்றார்.*

*(அ-06)*

## அப்புக்குட்டி அண்ணையின் ‘டவுட்’






**மேடம்**

கூட்டாளிகளால் உண்டான பிரச்னைகளை உங்கள் புத்திசாலித்தனத்தால் சரி செய்வீர்கள். உறவினர் ஒருவரால் சில நெருக்கடிகளை சந்திப்பீர்கள். வழக்கின் முடிவு தள்ளிப்போகும்.

**இடபம்**

வேலை செய்யும் இடத்தில் உங்கள் திறமை வெளிப் படும். உறவினர்கள் வீடு தேடி வருவார்கள். நேற்றைய எண்ணம் ஒன்று நிறை வேறும். அரசு வழியிலான செயலில் முன்னேற்றம் ஏற்படும். நிதிநிலை சீராகும்.

**மிதுனம்**

உற்சாகமாக செயல்பட்டு நீங்கள் நினைத்ததை அடை வீர்கள். நிதிநிலை உயரும். வியாபாரத்தில் நீங்கள் எதிர்பார்த்த லாபம் வரும். பழைய கடன்களை அடைப் பீர்கள். கொடுத்த வாக்கை நிறைவேற்றுவீர்கள்.

**கடகம்**

கவனக்குறைவால் செயல்களில் தடுமாற்றம் ஏற்படும். வேலைபளு அதிகரிக்கும். அதிகாரியின் கோபத்திற்கு ஆளாவீர்கள். நீங்கள் மேற்கொள்ளும் முயற்சியில் எதிர்பார்த்த நன்மையை எட்ட முடியாமல் போகும்.

**சிம்மம்**

பண பரிவர்த்தனையில் கவனம் தேவை. குழந்தை களில் நலனில் அக்கறை செலுத்துவீர்கள். விழிப்புடன் செயல்படுவதால் விரயங்களைத் தவிர்ப்பீர். பயணங் களை ஒத்தி வைப்பீர்கள்.

**கன்னி**

நீங்கள் எதிர்பார்த்த வருமானம் இன்று வந்து சேரும். கடன்களை அடைப்பீர்கள். பழைய முதலீடு ஒன்றிலி ருந்து எதிர்பாராத லாபம் காண்பீர்கள். சிந்தித்து செயல்படுவீர்கள். முயற்சியில் ஆதாயம் காண்பீர்கள்.

**துலாம்**

வியாபாரத்தில் நீங்கள் மேற்கொள்ளும் அணுகுமுறை லாபத்தை உண்டாக்கும் நேற்றைய எண்ணம் ஒன்று நிறை வேறும். பிறருடன் அனுசரித்துச் செல்வதால் நீங்கள் நினைத்ததை சாதிப்பீர்கள்.

**விருட்சிகம்**

உங்கள் திறமையால் குடும்பத்திற்கு பெருமை சேரும். பகைவர்களும் இணைந்து செயல்படுவர். எதிரிகளால் ஏற்பட்ட சங்கடம் விலகும். கேட்ட இடத்தில் உதவி கிடைக்கும். இழுபறியாக இருந்த வேலை முடியும்.

**தனுசு**

முன்னேற்றத்தில் தடை ஏற்பட்டு பின்னர் நடைபெறும். பயம் விலகும். தைரியம் பிறக்கும். உதவி செய்வதாக சொன்னவர்கள் கடைசி நேரத்தில் காணாமல் போவார் கள். உத்தியோகத்தில் எதிர்ப்பு வலுக்கும்.

**மகரம்**

புதிய நண்பர் ஒருவரால் உங்கள் எண்ணம் ஒன்று நிறைவேறும். குடும்பத்தில் எதிர்பாராமல் ஏற்பட்ட பிரச்னை விலகும். உங்கள் மனம் மகிழ்ச்சியில் திளைக்கும். வரவேண்டிய பணம் வந்து சேரும்.

**கும்பம்**

உங்களுக்கு மறைமுகமாக தொல்லை கொடுத்தவர் களிடமிருந்து விலக்குவீர்கள். பகைவரால் உண்டான பிரச்னைக்கு தீரும். உங்கள் எண்ணம் நிறைவேறும் வியாபாரத்தில் ஏற்பட்ட தடை விலகும்.

**மீனம்**

வேலை செய்யும் இடத்தில் செல்வாக்கு உயரும். மற்றவர்களால் பாராட்டப் படுவீர்கள். வியா பாரத்தில் உங்கள் முயற்சி இரட்டிப்பு பலனைக் கொடுக்கும். எதிர்பார்த்த பெரும்பணம் வந்து சேரும்.

# தூத்துக்குடி துப்பாக்கிச் சூடு; 21 பேர்மீது நடவடிக்கை தேவை!

## ஜெகதீசன் விசாரணை ஆணையம் சிபாரிசு

சென்னை, ஒக். 20

தூத்துக்குடி துப்பாக்கி சூட்டில் 13 பேர் உயிரிழந்த சம்பவம் தொடர்பான அருணா ஜெகதீசன் விசாரணை ஆணையத்தின் பரிந் துரையின்படி மாவட்ட ஆட்சியர், 17 பொலி ஸார் உட்பட 21 பேர்மீது தமிழக அரசு நட வடிக்கை மேற்கொண்டுள்ளது.

தூத்துக்குடியில் 2018ஆம் ஆண்டு ஸ்டெர் லைட் ஆலைக்கு எதிராக பொதுமக்கள் போராட்டம் நடந்தது. மே 22ஆம் திகதி போராட்டம் கலவரமாக மாறியதால், பொலி ஸார் நடத்திய துப்பாக்கிச் சூட்டில் 13 பேர் உயிரிழந்தனர்.

இந்த துப்பாக்கி சூடு சம்பவம் தொடர்பாக சென்னை உயர் நீதிமன்றத்தின் ஓய்வுபெற்ற நீதிபதி அருணா ஜெகதீசன் தலைமையில் விசாரணை ஆணையம் அமைக்கப்பட்டது. விசாரணை ஆணையம் பல்வேறு தரப்பின ரிடம் விசாரணை நடத்தி வாக்குமூலங்களைப் பதிவு செய்தது. ஆணையத்தின் இறுதி அறிக்கை கடந்த மே மாதம் 18ஆம் திகதி தமிழக அரசிடம் சமர்ப்பிக்கப்பட்டது.

அதைத்தொடர்ந்து தமிழக சட்டப்பேரவை யில் ஆணையத்தின் அறிக்கை 4 பகுதிகளாக நேற்று தாக்கல் செய்யப்பட்டது.

இந்த அறிக்கையின்படி போராட்டத்தில் வன்முறை இடம்பெறும் என்று முன்னெச்ச ரிக்கை செய்யப்பட்டும் நட வடிக்கை எடுக்கப் படவில்லை.

குழப்பம் விளைவிக்கும் நபர்களை அடை யாளம் கண்டு முன்கூட்டியே கைது செய்தி ருந்தால் போராட்டம் கலவரமாக மாறியதைத் தடுத்திருக்க முடியும். ஆனால், அதற்கான நடவடிக்கைகளை எடுக்கவில்லை.

பொலிஸாரை அடியாள் போன்று பயன் படுத்தி துப்பாக்கிச்சூடு நடத்தப்பட்டது. துப் பாக்கிச் சூட்டில் உயிரிழந்தவர்களின் பின்னந் தலை மற்றும் முதுகு பகுதியின் வழியாக குண்டு துளைத்து, முன் வழியாக உள்ளுறுப்பு களை சிதைத்து வெளியே வந்திருக்கிறது. இடுப்புக்கு கீழே யாரையும் சுடவில்லை. துப்பாக்கிச்சூடு நடைபெறும் போது கடைபிடிக்க வேண்டிய அணுகுமுறை கள் பின்பற்றப்படவில்லை என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# ஈழத் தமிழருக்கு குடியுரிமை நீதிமன்ற தீர்ப்புக்கு வரவேற்பு

மதுரை, ஒக். 20

இந்திய குடியுரிமை சட் டத் திருத்தம் இலங்கை தமி ழர்களுக்கும் பொருந்தும் என்ற உயர் நீதிமன்றக் கிளை உத்தரவால் தமிழகத்தில் வசிக்கும் இலங்கை அகதிகள் மகிழ்ச்சி அடைந்துள்ளனர்.

இலங்கையில் 1980களில் தொடங்கி பல்வேறு காலகட் டங்களில் நடைபெற்ற உள் நாட்டுப் போர் காரணமாக பல்லாயிரக்கணக்கான இலங்கை தமிழர்கள் தமி ழகத்துக்கு அகதிகளாக வந் துள்ளனர். தமிழகத்தில் 29 மாவட்டங்களில் 108 அகதி கள் முகாம்களில் 30 ஆயிரத் துக்கும் மேற்பட்டவர்கள் தங்கியுள்ளனர்.

இலங்கை அகதிகள் முகாமில் தங்கியிருப்பவர்க ளுக்கு பல்வேறு கட்டுப்பாடு கள் உள்ளன. அவர்கள் இந் திய குடியுரிமை கேட்டு போராடி வருகின்றனர். இதனிடையே இந்தியாவில் 2020 ஜனவரி 10 முதல் குடியுரிமை சட்டம் அமு லுக்கு வந்துள்ளது. இந்தச் சட்டம் பாகிஸ்தான், பங்க ளாதேஷ், ஆப்கானிஸ்தான் ஆகிய அயல் நாடுகளைச் சேர்ந்த மத சிறுபான்மையின ருக்கு இந்திய குடியுரிமை வழங்க வழிவகை செய்கிறது.

இலங்கை உள்நாட்டுப் போரினால் பாதிக்கப்பட்ட தமிழர்கள், மலையக இந்திய வம்சாவளித் தமிழர்கள், இலங்கையில் சிறுபான்மை மதமாக உள்ள இந்து மதத்தி னர் சேர்க்கப்படவில்லை. இவர்களையும் இச்சட்டத்தில் சேர்க்க வேண்டும் என கோரிக்கை வைக்கப்பட் டது.

இந்நிலையில், இந்திய குடியுரிமை சட்டத் திருத்தம் இலங்கை தமிழர்களுக்கும் பொருந்தும் என உயர் நீதி மன்ற மதுரை கிளை தீர்ப்பு வழங்கியுள்ளது. இதனால் தமிழகத்தில் வசிக்கும் இலங்கை அகதிகள் தங் களுக்கு இந்திய குடியுரிமை கிடைக்கும் காலம் கனிந் துள்ளதாக மகிழ்ச்சி அடைந் துள்ளனர். (ஐ)

### தூத்துக்குடி துப்பாக்கி சூடு:

# பழனிசாமி அப்பாவிபோல் நடித்து தமிழக மக்களை ஏமாற்றியுள்ளார்!

## சி. பி. எம். கட்சி அறிக்கை

சென்னை, ஒக். 20

தூத்துக்குடி துப்பாக்கி சூடு தொடர்பாக எந்தவித குற்ற உணர்வும் இல்லாத எடப்பாடி பழனிசாமியை மக்கள் மன்னிக்கவே மாட் டார்கள் என்று சி. பி. எம். கே.பாலகிருஷ்ணன் தெரிவித் துள்ளார்.

தூத்துக்குடி துப்பாக்கிச் சூடு தொடர்பாக வெளியான அறிக்கை குறித்து கருத்து வெளியிட்ட அவர், "தூத் துக்குடி, ஸ்டெர்லைட் போராட்டத்தில் நிகழ்த்தப் பட்ட துப்பாக்கிச் சூடு படு கொலைகள் தொடர்பான அறிக்கை பல்வேறு உண்மை களை அம்பலப்படுத்தியுள் ளது. அன்றைய முதல்வர் எடப் பாடி பழனிசாமிதான், அனைத்துக்கும் பொறுப் பேற்க வேண்டும். ஆனால், இதுவரையிலும் ஏதோ அப் பாவி போல ஊடகங்களிடம் நடித்து வந்தார்.


இப்போதும், துப்பாக்கிச் சூட்டின் கொடூரம் தொடர் பாக கள்ள மௌனம் சாதிப்ப துடன், சபாநாயகரை கண் டித்து உண்ணாவிரதம் என்ற பெயரால் திசைதிருப்பும் நோக்கத்துடன் ஒரு நாட கத்தை அரங்கேற்றியுள்ளார். தனது ஆட்சிக்காலத்தில் நடைபெற்ற பெரும் தவறு குறித்த எந்தவித குற்ற உணர்வும் இல்லாத இந்தப் போக்கு குற்றத்தனமான ஒன்று - என்றார். (ஐ)

# தமிழக கடலோரத்தில் பாதுகாப்பு அதிகரிப்பு!

நாகர்கோவில், ஒக். 19

இந்தியாவின் எதிர்ப்பை யும் மீறி சீன உளவுக் கப்பல் இலங்கை கடலில் முகாமிட் டுள்ளது. மேலும் அங்கு சீன இராணுவத்தினரின் நடமாட் டம் பரவலாக உள்ளது. இத னால் இந்தியாவின் கடலோர பகுதிகளை துல்லியமாகவும் தீவிரமாகவும் கண்காணிக்கு மாறும் பாதுகாப்பை அதிகரிக் குமாறும் உளவுத்துறை எச்ச ரிக்கை விடுத்துள்ளது.

இதைத்தொடர்ந்து தமிழக கடலோர பகுதிகளில் பாது காப்பு பலப்படுத்தப்பட்டுள் ளது. சந்தேகத்துக்கிடமாக கடலில் சுற்றும் படகுகள் சோதனையிடப்படுகின்றன. கடலுக்கு செல்லும் மீனவர் களிடமும் கடலுக்குள் வழக் கத்தைவிட வித்தியாசமாக தென்படும் படகு, நபர்கள் குறித்து பொலிஸாருக்கு அறி விக்க அறிவுறுத்தப்பட்டுள்ளது.




## புக்கர் மேடையில் ஒலித்த தமிழ்!

கொழும்பு, ஒக். 20

புக்கர் பரிசை வென்ற இலங்கையரான ஷெஹான் கருணாதிலக விழா மேடையில் சிங்களம், தமிழ் ஆகிய இரண்டு மொழிகளிலும் உரையாற்றியுள்ளார்.

இது குறித்து கவிஞர் இளவாலை விஜயேந்திரன் தனது முகப்புத்தகத்தில் பதிவொன்றை இட்டுள்ளார்.

அதில், உலகின் மிகச்சிறந்த இலக்கிய விருதுகளில் ஒன்றான ஹபுக்கர்ஹ விருது மேடையில் நேற்றுத் தமிழ் ஒலித்தது. இலங்கையரான ஷெஹான் கருணாதிலக இம்முறை இந்த விருதுக்குத் தெரிவாகியிருந்தார். அவரது உரையின் இறுதி வரிகளில் “இலங்கை சொந்தங்களே, நாம் எமது கதைகளைக் கூறுவோம். கூறிக்கொண்டே இருப்போம்” எனத் தமிழிற் கூறி முடித்தார்.

அதற்கு முன்னர் சிங்களத்தில் சில வரிகளை அவர் தனது உரையில் சேர்த்திருந்தார். அவரது நன்றியுரை ஆங்கிலத்தில் அமைந்திருந்தது.

நோபல் பரிசுக்கு அடுத்ததாக உயர்ந்த இலக்கிய விருது எனக் கணிக்கப்படும் புக்கர் பரிசு பெறும் முதலாவது இலங்கையர் ஷெஹான் கருணாதிலக. இலங்கையில் பிறந்த மைக்கல் ஒண்டாச்சி முப்பது வருடங்களுக்கு முன்னர் இவ்விருதை வென்றிருந்தாராயினும் அவர் கனேடியப் பிரஜையாகவே கணிக்கப்படுகிறார்.

ஹசெவன் மூன்ஸ் ஒப் மாலி அல்மாயிடா ஹ என்ற நாவலுக்காக ஷெஹான் வென்ற விருது, 50000 பிரிட்டிஷ் பவுண்ஸ்களைக் கொண்டது. 1969முதல் இப்பரிசு ஒரு சிறந்த படைப்புக்கு (நாவல்ஃ சிறுகதை ) வழங்கப்பட்டு வருகிறது. அருந்ததி ராய், சல்மான் ருஷ்டி போன்றோரும் இவ்விருதை வென்றவர்களின் பட்டியலில் இருக்கிறார்கள்.

பிறப்பால் சிங்களவராய் இருந்தபோதிலும் உலகின் மிகப்பெரிய விருதொன்றை வென்ற மேடையில், இலங்கையின் இரு மொழிகளிலும் உரையாற்றியதன் மூலம் ஷெஹான் பல செய்திகளைப் பலருக்குச் சொல்லியிருக்கிறார். புரிந்தவர்களுக்குப் புரியவேண்டிய செய்தி புரிந்திருக்கும் என குறிப்பிடப்பட்டுள்ளது. (அ)

# ‘22’ ஐ கடுமையாக எதிர்க்கும் மொட்டு!

### இரட்டை குடியுரிமையைக் காக்க வியூகம்

கொழும்பு, ஒக். 20

**“தனிநபர்களை இலக்கு வைத்து முன்வைக்கப்படும் அரசமைப்பு திருத்தங்களுக்கு தமது கட்சி ஆதரவு வழங்காது. மக்களுக்கும் நன்மை பயக்ககூடிய புதியதொரு அரசமைப்பே நாட்டுக்கு தேவை.” - என்று ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன கட்சியின் பொதுச் செயலாளர் சாகர காரியவசம் தெரிவித்தார்.**

ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன கட்சியின் ஊடக சந்திப்பு அக்கட்சியின் தலைமையகத்தில் நடைபெற்றது.

இதன்போது அரசியலமைப்பிற்கான 22 ஆவது திருத்தச்சட்டமூலம் தொடர்பில் எழுப்பட்ட கேள்வியொன்றுக்கு பதிலளிக்கையிலேயே அவர் இவ்வாறு கூறினார்.

இது தொடர்பில் அவர் மேலும் கூறியவை வருமாறு-

தனிநபர்களை இலக்கு வைத்து கொண்டுவரப்படும் அரசமைப்பு திருத்தங்களுக்கு எதிர்ப்பு என்பதை எமது கட்சி தொடர்ச்சியாக வலியுறுத்தி வருகின்றது. எமது நாட்டில் ஒரு மதக்குழு, இனம் மற்றும் நபர்களை இலக்குவைத்தே அரசமைப்பு மறுசீரமைப்பு மேற்கொள்ளப்பட்டுள்ளது. இனியும் அத்தகைய நடவடிக்கை ஏற்புடையதாக இருக்காது.

ஒரு நாடாக முன்னோக்கி பயணிக்கவேண்டும். எனவே, தனிநபர் மற்றும் அரசியல் கட்சிகளை இலக்கு வைத்தும், மக்களுக்கு நன்மை பயக்காத விதத்திலும் கொண்டுவரப்



படும் அரசமைப்பு திருத்தங்களுக்கு எமது கட்சி இணங்காது. ஜனாதிபதியிடமும் இந்த விடயத்தை எடுத்துரைத்துள்ளோம்.

புதியதொரு அரசமைப்பு இயற்றப்படும் என்ற உறுதிமொழியை நாட்டு மக்களுக்கு எமது கட்சி வழங்கியது. அந்த உறுதிமொழியை நிறைவேற்றுவதற்காக, புதிய அரசமைப்புக்கான சட்டமூலத்தை தயாரிப்பதற்கு விசேட நிபுணர்கள் குழுவொன்று அமைக்கப்பட்டது. அனைத்து தரப்புகளினதும் கருத்துகளை உள் வாங்கிய பின்னர், சட்டமூலம் தயாரிக்கப்பட்டு, அது ஜனாதிபதியிடம் கையளிக்கப்பட்டது.

ஆகவே, தற்போதுள்ள அரசமைப்பில் திருத்தங்களை செய்து கொண்டிருக்காமல், புதிய அரசமைப்பை நிறை வேற்றுவதற்கு விரைவில் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் என்பதையே நாம் வலியுறுத்தி வருகின்றோம். புதிய அரசமைப்புக்கான தேவைப்பாடே உள்ளது.

பாராளுமன்ற தெரிவுக் குழுவொன்றை அமைத்து, மக்கள் மத்தியில் கருத்தாடலை உருவாக்கி 6 மாதங்களுக்குள் இதற்கான பணியை நிறைவுசெய்ய முடியும்.

சிலருக்கு பஸில் ராஜபக்ஷ அரசியலில் இருப்பது அச்சுறுத்தலாக உள்ளது. அதனால் தான் இரட்டை குடியுரிமை உடையவர்களுக்கு தடை விதிக்கப்பட வேண்டும் என கூறுகின்றனர். பஸில் என்ற தனிநபர் இங்கு முக்கியமில்லை. போர் உட்பட பல காரணங்களால் நாட்டை விட்டு வெளியேறியவர்கள் உள்ளனர், எனவே, அவ்வாறானவர்கள் நாட்டுக்காக சேவையாற்ற முன்வந்தால் அதற்கான வாய்ப்பு மறுக்கப்படும். இது ஏற்புடைய நடவடிக்கை அல்ல - என்றார். (அ)

## ஜனாதிபதி செயலகத்துக்குள் நுழைந்த மேலும் 9 பேர் கைது

கொழும்பு, ஒக். 20

கோட்டை ஜனாதிபதி செயலகத்திற்குள் அத்துமீறி நுழைந்து சேதப்படுத்திய குற்றச்சாட்டில் 9 பேர் கைது செய்யப்பட்டுள்ளதாக கொழும்பு வடக்குப் பிரிவு குற்றப் புலனாய்வுப் பிரிவு தெரிவித்துள்ளது.

ஜூலை 9 ஆம் திகதி நடந்த வன்முறைச் சம்பவங்களில் சந்தேக நபர்களால் அரச சொத்துக்களுக்கு சேதம் ஏற்படுத்தப்பட்டது.

இது தொடர்பாக மேற்கொள்ளப்பட்டு வரும் விசாரணைகளுக்கு அமைய கொழும்பு வடக்கு குற்றப் புலனாய்வு பிரிவினரால் சந்தேகநபர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கைது செய்யப்பட்ட சந்தேக நபர்கள் 22 மற்றும் 43 வயதுக்கு இடைப்பட்டவர்கள் மற்றும் நிகந்தலுபொத்த, குருநாகல் மற்றும் கொழும்பு 10, கோணாகம ஆகிய இடங்களில் வசிப்பவர்கள் என கூறப்படுகிறது. இதனையடுத்து, சந்தேக நபர்கள் நீதிமன்றில் முன்னிலைப் படுத்தப்படவுள்ளனர்.கொழும்பு வடக்குப் பிரிவு குற்றப் புலனாய்வுப் பிரிவினர் விசாரணைகளை மேற் கொண்டு வருகின்றனர். (அ)

## யானை-மொட்டு கூட்டு; இன்னும் முடிவு இல்லை

கொழும்பு, ஒக். 20

“ஐக்கிய தேசியக் கட்சியுடன் தேர்தல் கூட்டணி தொடர்பில் இன்னும் எவ்வித இணக்கப்பாடும் ஏற்படுத்திக் கொள்ளப்படவில்லை.” - என்று அரசாங்கத்தின் பிரதான பங்காளிக்கட்சியான ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன அறிவித்துள்ளது.

ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன கட்சியின் ஊடக சந்திப்பு நேற்றுமுன்தினம் நடைபெற்றது.

இதன்போது ஐக்கிய தேசியக் கட்சியும், ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவும் இணைந்து தேர்தலில் போட்டியிடுமா, அதற்கான இணக்கப்பாடு ஏற்பட்டுள்ளதா என எழுப்பட்ட கேள்விக்கு பதிலளிக்கையிலேயே மொட்டு கட்சி செயலாளர் சாகர காரியவசம் மேற்கண்டவாறு கூறினார்.

இது தொடர்பில் அவர் மேலும் கூறியவை வருமாறு,

ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவுக்கென கொள்கையொன்று உள்ளது. அந்த கொள்கையின் அடிப்படையில் எமது பயணம் தொடரும். எமது பொருளாதாரக் கொள்கையுடன் உடன்படக்கூடிய கட்சிகளுடன் இணைந்து செயற்படலாம். மாறாக காலைவார முற்படும் கட்சிகளுடன் கூட்டு பயணத்துக்கு இனி தயாரில்லை.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கு நாட்டை நிர்வகிப்பதற்கு நாம் ஆதரவு வழங்கிவருகின்றோம். அவரின் தற்போதைய நிலைப்பாடுகளை நாம் ஆதரிக்கின்றோம். பொருளாதாரக் கொள்கை தொடர்பில் வேறுபாடு உள்ளது. அதில் இணக்கம் காணப்பட்டால் இணைந்து பயணிப்பதில் சிக்கல் இருக்காது-என்றார். (அ)

## வயது மூப்பின் காரணமாகவே சந்திரா சாப்டர் கூட்டணி செயலர் பதவி இருந்து விலகினாராம்!

கொழும்பு, ஒக். 20

தமிழ் முற்போக்குக் கூட்டணியின் பொதுச்செயலாளர் சந்திரா சாப்டர் வயது மூப்பின் காரணமாகப் பொதுச் செயலாளர் பதவியிலிருந்து சுயமாக விலகியுள்ளார் என்று கூட்டணி தலைவர் மனோ கணேசன் தெரிவித்துள்ளார்.

“தமிழ் முற்போக்குக் கூட்டணியின் நிலைபேறு மற்றும் வளர்ச்சிக்கு கணிசமாகப் பங்களித்துள்ள சாப்டரின் இடை விலகலை நாம் கனத்த இதயத்துடன் புரிந்து கொள்கின்றோம்” என்றும் மனோ கணேசன் கூறியுள்ளார்.

கூட்டணியின் அரசியல் குழு விரைவில் கூடி, கூட்டணி யாப்புக்கு இணங்க புதிய பொதுச்செயலாளரைத் தெரிவு செய்யும் என்றும் மனோ கணேசன் மேலும் குறிப்பிட்டுள்ளார். (அ)

## மஹாபொல அதிகரிக்கப்படும்

கொழும்பு, ஒக். 20

மஹாபொல உதவித் தொகையை அதிகரிக்க திட்டமிடப்பட்டுள்ளதாக உயர் கல்வி இராஜாங்க அமைச்சர் கலாநிதி சுரேன் ராகவன் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் வர்த்தக அமைச்சு மற்றும் மஹாபொல நம்பிக்கை நிதியத்துடன் கலந்துரையாடி வருவதாக அவர் குறிப்பிட்டார்.

எதிர்வரும் ஜனவரி மாதம் முதல் கல்வி உதவித்தொகையை அதிகரிக்க திட்டமிடப்பட்டுள்ளதாக சுரேன் ராகவன் கூறினார். மஹாபொலவில் சராசரி மாதாந்த உதவித் தொகை 5000 ரூபா என உயர் கல்வி இரா ஜாங்க அமைச்சு தெரிவித்துள்ளது.

எனினும் நாட்டின் தற்போதைய சூழலை அடிப்படையாக கொண்டு இந்த தொகை 50 வீதம் அதிகரிக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது. (அ)

யாழ்.மாநகரசபை உறுப்பினர்கள் கொடுப்பனவு தடை;

## மணியிடம் விளக்கம் கோருகிறது மனித உரிமைகள் ஆணைக்குழு!

யாழ்ப்பாணம், ஒக். 20

யாழ் மாநகரசபையின் உறுப்பினர்கள் சிலருக்கான செப்ரெம்பர் மாத கொடுப்பனவைத் தடுத்து வைத்துள்ள சம்பவம் பற்றி இலங்கை மனித உரிமைகள் ஆணைக் குழுவின் யாழ்ப்பாண பிராந்திய அலுவலகம் விசாரணையை ஆரம்பித்துள்ளது.

இந்த விவகாரம் தொடர்பில் ஒக்ரோபர் 19ஆம் திகதிக்கு முன்னதாக விளக்கமளிக்குமாறு யாழ்.மாநகரசபை முதல்வர் வி.மணிவண்ணனுக்கு எழுத்து மூலமாக மனித உரிமைகள் ஆணைக்குழு அறிவித்துள்ளது. (அ)

## 13 வயது சிறுமி தொடர்ந்து பாலியல் துஷ்பிரயோகம்

### சந்தேக நபர் ஒருவர் கைது

யாழ்ப்பாணம், ஒக். 20

மானிப்பாய் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட கல்லுண்டாய் - நவாலிப் பகுதியில் 13 வயதுச் சிறுமி ஒருவரை 41 வயதுடைய சந்தேகநபர் ஒருவர் தொடர்ந்து துஷ்பிரயோகம் செய்து வந்துள்ளார்.

இது தொடர்பில் அப்பகுதி மக்களால் மானிப்பாய் பொலிஸாருக்கு தகவல் வழங்கப்பட்டதையடுத்து 41 வயதுடைய சந்தேகநபரை பொலிஸார் நேற்று கைது செய்துள்ளனர்.

குறித்த நபருக்கும் சிறுமியின் தாயாருக்கும் இடையே தவறான உறவு காணப்பட்டது. இந்நிலையில் சந்தேகநபர் சிறுமியுடனும் தவறாக நடந்துகொண்டுள்ளார்.

மானிப்பாய் பொலிஸாரால் சிறுமி மருத்துவ பரிசோதனைகளுக்காக அனுப்பி வைக்கப்பட்டுள்ளார். (அ)

# கோட்டா அரசை கவிழ்க்கும் சூழ்ச்சியை பஸிலே செய்தார்

### விமல் வீரவன்ஸ குற்றச்சாட்டு

கொழும்பு, ஒக். 20

**கோட்டாபய தலைமையிலான அரசைக் கவிழ்க்கும் சூழ்ச்சியை பஸில் ராஜபக்ஷதான் மேற்கொண்டார் என பாராளுமன்ற உறுப்பினர் விமல் வீரவன்ஸ தெரிவித்துள்ளார்.**

ஒன்றிணைந்து செயற்படுவது தொடர்பில் டலஸ் அணியுடன் அடுத்த வாரம் பேச்சு நடத்தப்படும் என அவர் குறிப்பிட்டார்.

நாட்டுக்கு அவசியமான அரசியல் கூட்டணியொன்றை கட்டியெழுப்பும் நோக்கிலேயே இதற்கான நகர்வு



முன்னெடுக்கப்படுவதாக அவர் கூறினார்.

அதேவேளை, கோட்டாபய ராஜபக்ஷ தலைமையிலான அரசு கவிழ்வதற்கு தாங்கள் சூழ்ச்சி செய்யவில்லை எனவும்,

பஸிலே அதற்கான சூழ்ச்சித் திட்டத்தை முன்னெடுத்தார் எனவும் விமல் குறிப்பிட்டுள்ளார். (அ)

## சுதேச மருத்துவ சட்டமூலத்துக்கு அமைச்சர் டக்ளஸ் ஆட்சேபனை

கொழும்பு, ஒக். 20

சுதேச மருத்துவ திருத்த சட்டமூலங்களுக்கு ஆட்சேபனை தெரிவித்துள்ள அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, யாழ்ப்பாணம் மற்றும் கிழக்கு பல்கலைக்கழகங்களின் கீழ் செயற்பட்டு வருகின்ற சுதேச மருத்துவ கற்கைநெறிகள் தொடர்ந்து தனித்துவமாக செயற்படுவதே ஆரோக்கியமானது எனவும் வலியுறுத்தியுள்ளார்.

அதாவது, சுதேச மருத்தவம் தொடர்பான சட்ட ஒழுங்குகளில் கால மாற்றத்திற்கு தேவையான திருத்தங்களை மேற்கொள்ளும் வகையில் 8 திருத்தச் சட்ட மூலங்கள் அமைச்சரவையில் சமர்ப்பிக்கப்பட்டிருந்தது.

அவற்றுள் ஒரு திருத்தச் சட்டமூலம், கொழும்பு பல்கலைக்கழகத்தில் சுதேச மருத்து கற்கைநெறிகளுக்கான பிரதான நிறுவனம் ஒன்றினை ஸ்தாபித்து, அதன் கீழ் யாழ் மற்றும் கிழக்கு பல்கலைக்கழகங்களின் கீழ் செயற்படுகின்ற சுதேச மருத்துவ கற்கைநெறிகள் பிரிவு உட்பட பல்வேறு பிரதேசங்களிலும் மேற்கொள்ளப்பட்டு வருகின்ற சுதேச மருத்துவ கற்கைநெறி நிறுவனங்களையும் உள்ளடக்கி செயற்படுத்தும் நோக்கில் முன்மொழியப்பட்டிருந்தது.

குறித்த சட்டமூலம் தொடர்பாக தனது ஆட்சேபனையை அமைச்சரவையில் தெரிவித்த அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, சுதேச மருத்தவம் என்பது ஒவ்வொரு பிரதேசத்தின் சூழலமைவிற்கு ஏற்ப சில வித்தியாசங்களையும் வெவ்வேறான சிறப்புக்களையும் கொண்டிருப்பதால், அதனை கொழும்பை மையமாகக் கொண்ட கட்டமைப்பின் கீழ் கொண்டு வருவது ஆரோக்கியமாக இருக்காது எனவும் தெரிவித்தார்.

அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவின் இந்தக் கருத்தினை ஏனைய சில அமைச்சர்களும் ஏற்றுக்கொண்ட நிலையில், இதுதொடர்பான சட்ட திருத்த மூலத்தினை கைவிடுவதற்கு அமைச்சரவை தீர்மானித்துள்ளது.

யாழ். பல்கலைக் கழகத்தின் சித்த மருத்தவ கற்கைநெறி பிரிவை, சித்த மருத்துவ கற்கைகள் பீடமாக தரமுயர்த்துவதற்கான முயற்சிகள் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவினால் மேற்கொள்ளப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (அ)

## 2 மனித உரிமை ஆர்வலர்கள் கடத்தல் கோட்டாவுக்கு மீண்டும் அழைப்பாணை

கொழும்பு, ஒக். 20

மனித உரிமை செயற்பாட்டாளர்கள் இருவர் கடத்தப்பட்டமை தொடர்பான வழக்கில் பிரதிவாதியாக குறிப்பிடப்பட்டுள்ள முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவுக்கு அழைப்பாணை அனுப்புமாறு உயர் நீதிமன்றம் அறிவித்துள்ளது.

முன்னாள் ஜனாதிபதிக்கு எதிரான மனுவை நேற்று புதன்கிழமை விசாரித்த காமினி அமரசேகர, யசந்த கோதாகொட மற்றும் ஏ. எச். எம். டி. நவாஸ் அடங்கிய உயர்நீதிமன்ற அமர்வு இந்த உத்தரவை பிறப்பித்துள்ளது.

மனுதாரர் சார்பில் ஆஜரான சட்டத்தரணி நுவான் போபப்கே, நீதிமன்றத்தில் உண்மைகளை முன்வைத்ததுடன் மனுவில் பிரதிவாதியாக குறிப்பிடப்பட்டுள்ள முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவுக்கு அழைப்பாணை அனுப்பப்பட்டுள்ளதாகவும் தெரிவித்தார்.

எனினும் கோட்டாபய சார்பாக சட்டத்தரணி எவரும் நீதிமன்றில் ஆஜராகவில்லை.

இதன்படி, கோட்டாபயவுக்கு மீண்டும் அழைப்பாணை அனுப்புமாறு மனுதாரரின் சட்டத்தரணிக்கு அறிவித்த உயர்நீதிமன்றம், மனுவை எதிர்வரும் டிசெம்பர் 15ஆம் திகதி மீண்டும் அழைக்குமாறு உத்தரவிட்டுள்ளது.

லலித் வீரராஜ் மற்றும் குகன் முருகானந்தன் ஆகியோர் காணாமல் போனமை தொடர்பில் அவர்களது உறவினர்களால் தாக்கல் செய்யப்பட்ட ஆட்கொணர்வு மனு தொடர்பில் சாட்சியமளிக்க 2019 செப்டெம்பர் 27ஆம் திகதி ஆஜராகுமாறு அப்போதைய பாதுகாப்புச் செயலாளராக இருந்த கோட்டாபயவுக்கு யாழ்ப்பாணம் நீதிவான் நீதிமன்றம் அழைப்பாணை அனுப்பியது.

இதனையடுத்து, உயிருக்கு அச்சுறுத்தல் உள்ளதால் யாழ். நீதிவான் நீதிமன்றத்திற்குச் சென்று சாட்சியமளிக்க முடியாது எனவும் எனவே, யாழ். நீதவானின் தீர்ப்பை இடைநிறுத்தி உத்தரவு பிறப்பிக்குமாறு கோரி கோட்டாபய மேன்முறையீட்டு நீதிமன்றில் மனுவொன்றை தாக்கல் செய்தார்.

அதனை விசாரித்த மேன்முறையீட்டு நீதிமன்றம் தனது முடிவை அறிவித்தபோது கோட்டாபய ஜனாதிபதியாக இருந்ததால் சாட்சியமளிக்க அழைக்க முடியாது என தீர்ப்பளித்தது.

இதனையடுத்து, மேன்முறையீட்டு நீதிமன்றத்தின் தீர்ப்பு சட்டத்திற்கு முரணானது எனவும் கோட்டாபய ராஜபக்ஷ ஜனாதிபதிப் பதவியில் இல்லாத நிலையில், தற்போது அதற்கான உத்தரவை பிறப்பிக்க வேண்டும் எனவும் கோரி காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவினர்களால் உயர் நீதிமன்றில் மேன்முறையீட்டு மனு தாக்கல் செய்யப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (அ)

## தங்களது உணவில் இறைச்சி, மீன்களை கைவிட்டுள்ள 50 வீதமான குடும்பங்கள்!

கொழும்பு, ஒக். 20

இலங்கையிலுள்ள அதிகளவான குடும்பங்கள் தமது உணவிலிருந்து இறைச்சி வகைகளை குறைத்துள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

இலங்கை செஞ்சிலுவைச் சங்கம் மற்றும் சர்வதேச செஞ்சிலுவைச் சங்கம் ஆகியன முன்னெடுத்திருந்த ஆய்வின் நிறைவிலேயே இந்த விடயம் தெரியவந்துள்ளது.

இலங்கை சுதந்திரத்தின் பின்னர் பாரிய பொருளாதார நெருக்கடியை சந்தித்துள்ள நிலையில், நோயாளர்களும் குறைந்தளவிலான மருந்துகளையே பயன்படுத்தி வருகின்றமையும் குறித்த ஆய்வின் ஊடாக தெரியவந்துள்ளது.

டொலருக்கு எதிராக ரூபாவின் பெறுமதி 2022ஆம் ஆண்டு 200 ரூபாவிலிருந்து 360 ரூபாவாக வீழ்ச்சியடைந்த நிலையில் உணவு பொருட்களின் விலை 50 வீதத்தாலும், ஏனைய பொருட்களின் விலை 70 வீதத்தாலும் உயர்ந்துள்ளன.

இந்தநிலையில் 50 வீதமான குடும்பங்கள் தமது உணவில் இறைச்சி மற்றும் மீன்களை கைவிட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

அத்துடன், 11 வீதமானோர் புரத உணவை முற்றிலும் தவிர்த்துள்ளனர் எனவும் குறிப்பிடப்படுகின்றது.

இதில் பெருந்தோட்டத்துறையினர் முழுமையான பாதிப்புக்கு உள்ளாகியுள்ளதுடன், கடற்றொழில் சமூகமும் மோசமாக பாதிக்கப்பட்டுள்ளது. (அ)

# இந்தியாவில் தடை செய்யப்பட்ட மீன்பிடி தொழில்நுட்பமுறைகள் வடக்கில் அமுல்!

*யாழ்.மாவட்ட கடற்றொழிலாளர் சம்மேளனம் குற்றச்சாட்டு*

**யாழ்ப்பாணம், ஒக். 20**

**இந்தியாவில் தடை செய்யப்பட்ட கடலட்டை தொழிலுக்கு இலங்கையின் வடபகுதியில் இந்திய முதலீட்டாளர்கள் தொழில்நுட்ப உதவிகளை வழங்குவது கவலையளிப்பதாக யாழ்.மாவட்ட கடற்றொழிலாளர் கூட்டுறவுச்சங்க சமாசங்களின் சம்மேளனத் தலைவர் அ.அன்னராசா தெரிவித்தார்.**

யாழ்.ஊடக அமையத்தில் நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை இடம்பெற்ற ஊடக சந்திப்பிலேயே இதனை தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

இந்திய அரசாங்கம் சுற்றுச் சூழலை கருத்திற்கொண்டு இந்தியாவில் கடலட்டை பிடிப்பதற்கும், வளர்ப்பதற்கும் தடை விதித்துள்ளது.

ஆனால் கடந்த வாரம் மன்னார் ஒலைத்தொடுவாய் பகுதியிலுள்ள கடலட்டை உற்பத்திக் குஞ்சு நிலையத்தில் இந்திய முதலீட்டாளர்கள் தொழில்நுட்ப உதவிக்காக வருகை தந்துள்ளனர்.

இந்தியாவில் தடைசெய்யப்பட்ட கடலட்டை தொழிலுக்கு இலங்கையின் வடபகுதியில் இந்திய முதலீட்டாளர்கள் தொழில்நுட்ப உதவிகளை வழங்குவது கவலையளிக்கிறது.

இந்தியாவில் தடைசெய்யப்பட்ட தொழில்நூட்ப முறைகளை இலங்கையின் வடபகுதியில் அமல்படுத்துவதை வடபகுதி மீனவர்கள் விரும்பவில்லை.

இந்திய அரசு மற்றும் இந்திய துணைத் தூதரகம் என்பன இதனை கருத்தில் கொண்டு கடலட்டை சார்ந்த தொழில்நுட்பங்களை அமுல்படுத்துவதை தவிர்க்கவேண்டும் .

ஏனைய கடல்வாழ் உயிரினங்களின் வளர்ப்பு சார் தொழில்நுட்பங்களை அறிமுகப்படுத்தலாம்-என்றார். (அ)



# இந்திய துணைத்தூதர் நெடுந்தீவுக்கு விஜயம்!

யாழ்ப்பாணம், ஒக். 20

யாழ்ப்பாணத்துக்கான இந்திய துணைத் தூதுவர் ராகேஷ் நட்ராஜ் ஜெயபாஸ்கரன் நேற்றுமுன்தினம் செவ்வாய்க்கிழமை நெடுந்தீவுக்கு விஜயம் மேற்கொண்டார்.

அதன்போது, கல்வி, பொது உள்கட்டமைப்பு மற்றும் சுகாதாரம் தொடர்பான வளர்ச்சிப் பிரச்னைகள் குறித்து நெடுந்தீவு பிரதேச செயலர் மற்றும் அரச அதிகாரிகளுடன் சிவில் சமூக உறுப்பினர்களுடன் இந்திய துணைத் தூதுவர் கலந்துரையாடினார்.

நெடுந்தீவு மகா வித்தியாலயத்தில் இடம்பெற்ற நிகழ்வில் இந்திய துணைத் தூதுவர், இந்திய புலமைப்பரிசில் பற்றி விளக்கமளித்ததோடு அங்கு மாணவர்களுக்கு பணப் பரிசுகளையும் வழங்கினார்.

தீவகப் பகுதிகளில் சீன நாட்டின் ஆக்கிரமிப்பு தொடர்பாக பேசப்படும் நிலையில் இந்தியத் துணைத் தூதரின் நெடுந்தீவுக்கு விஜயம் மேற்கொண்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (அ)

# யாழில் சர்வதேச கிரிக்கெட் மைதானம் அமைப்பதற்கு மாநகர சபையில் எதிர்ப்பு

யாழ்ப்பாணம், ஒக். 20

கோண்டாவிலில் சர்வதேச கிரிக்கெட் மைதானம் அமைக்கும் யாழ்.மாநகர முதல்வரின் முயற்சியை நேற்று முன் தினம் யாழ்.மாநகர சபை அமர்வில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பும் ஈழ மக்கள் ஜனநாயக கட்சியும் கூட்டாக நிராகரித்துள்ளன.

யாழ்.மாநகரசபைக்கு சொந்தமான 11 ஏக்கர் நிலப்பரப்பு கோண்டாவில் பகுதியில் உள்ளது. குறித்த நிலமானது தற்போது எத்தகைய பயன்பாட்டுக்கும் உட்படுத்தப்படாத நிலையில் உள்ளது.

குறித்த ஆதனத்தில் யாழ். மாநகரசபை எல்லைக்குள் உள்ள பொதுமக்களுக்கு நீர் விநியோகம் செய்கின்ற கிணறுகள் அமைந்துள்ளன.

எதிர்வரும் காலங்களில் நீர் வழங்கல் வடிகாலமைப்புச் சபையினால் யாழ்.மாநகர சபைக்குட்பட்ட பகுதிகளுக்கு நீர் விநியோகப் பணி ஆரம்பிக்கப்பட இருப்பதைக் கருத்திற் கொண்டு குறித்த நீர் விநியோகத்துக்கு எவ்வித பங்கமேற்படாதவாறு சர்வதேச துடுப்பாட்ட மைதானம் ஒன்றை அங்கு அமைப்பதற்கு நடவடிக்கை எடுப்பதற்காக சபையின் அனுமதியையினை மாநகர முதல்வர் கோரியிருந்தார்.

குறித்த அனுமதியை வழங்க தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு மற்றும் ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சி ஆகியன கூட்டாக இணைந்து மறுத்துவிட்டன. (அ)

## பல்கலை மாணவர் 8 பேர் கைது

கொழும்பு, ஒக். 20

பல்கலைக்கழகங்களுக்கு இடையிலான மாணவர் ஒன்றியத்தினால் களனி பல்கலைக்கழகத்திற்கு முன்பாக இடம்பெற்ற ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்ட 8 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

ஆறு மணித்தியாலங்களுக்கு முன்னர் போராட்டத்திற்கு அனுமதி பெறவில்லை என்ற குற்றச்சாட்டின் பேரில் இவர்கள் கைது செய்யப்பட்டதாக பொலிஸ் ஊடகப் பேச்சாளர் சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் நிஹால் தல்துவ தெரிவித்தார்.

போராட்டத்தில் கைது செய்யப்பட்டவர்களில் தேரர் ஒருவரும் அடங்குவார்.

அரசின் அடக்குமுறைக்கு எதிராக போராட்டம் நடத்தியதற்காக பயங்கரவாத தடுப்புச் சட்டத்தின் கீழ் தடுத்து வைக்கப்பட்டுள்ள உறுப்பினரை உடனடியாக விடுவிக்கக் கோரி இந்தப் போராட்டம் நடத்தப்பட்டது.

போராட்டத்திற்கு முன் அனுமதி பெறாததால், போராட்டக்காரர்களுக்கு பொலிஸார் நோட்டீஸ் கொடுத்ததால் பரபரப்பு ஏற்பட்டது. (அ)



# இலங்கை வந்த டொனால்ட் லூவை வரவேற்றார் அமெரிக்கத் தூதுவர்!

கொழும்பு, ஒக். 20

தெற்கு மற்றும் மத்திய ஆசிய விவகாரங்களுக்கான அமெரிக்க உதவி இராஜாங்க செயலாளர் டொனால்ட் லூ நேற்று இலங்கை வந்தடைந்தார்.

இலங்கை வந்திறங்கிய டொனால்ட் லுவை இலங்கைக்கான அமெரிக்கத் தூதுவர் ஜூலி சுங் வரவேற்றுள்ளார். இதனை அமெரிக்கத் தூதுவர் டுவிட்டரில் தெரிவித்துள்ளார்.

அமெரிக்க-இலங்கை உறவுகள் மற்றும் இலங்கையின் பொருளாதார நிலைமை குறித்து கலந்துரையாடுவதற்காக அவர் இந்த விஜயத்தை மேற்கொண்டுள்ளார்.

மேலும் பிராந்திய பாதுகாப்பு, மனித உரிமைகள் தொடர்பாக டொனால்ட் லூ ஜனாதிபதி உள்ளிட்ட முக்கிய அதிகாரிகளைச் சந்தித்து கலந்துரையாடுவர் என எதிர்பார்க்கப்படுகின்றது. (அ)

# வல்வெட்டித்துறையில் அதிகாலை வாள்வெட்டில் ஒருவர் படுகாயம்!

யாழ்ப்பாணம், ஒக். 20

வல்வெட்டித்துறைப் பகுதியில் உள்ள வீடொன்றினுள் புகுந்த இருவர், வீட்டில் இருந்த முதியவர் மீது வாள்வெட்டுத் தாக்குதலை மேற்கொண்டதில் முதியவர் படுகாயங்களுக்கு உள்ளான நிலையில் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

இந்த சம்பவத்தில் தேவமயில் முருகவேள் (வயது 65) எனும் முதியவரே படுகாயங்களுக்கு உள்ளான நிலையில் ஊறணி வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டார்.

வல்வெட்டித்துறை, நாவலடி , ஊரிக்காடுப் பகுதியில் உள்ள வீடொன்றினுள்ளேயே நேற்று புதன்கிழமை அதிகாலை 2 மணியளவில், வாள் மற்றும் கோடரியுடன் புகுந்த இருவர் வீட்டில் இருந்த முதியவர் மீது தாக்குதலை மேற்கொண்டனர்.

தாக்குதலுக்கு இலக்கான முதியவரின் அவலக் குரலைக் கேட்டு , அயலவர்கள் ஒன்று கூடியவேளை தாக்குதலாளிகள் வீட்டை விட்டு தப்பியோடியுள்ளனர்.

தப்பியோடிய இருவரையும் அயலவர்கள் விரட்டிய போது , ஒருவர் அயலவர்களினால் மடக்கிப் பிடிக்கப்பட்டார். இருந்த போதிலும் மற்றையவர் தப்பியோடிவிட்டார்.

அயலவர்களால் மடக்கிப் பிடிக்கப்பட்டவர் வல்வெட்டித்துறை பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்ட நிலையில் பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர். (அ- 2)

# தரம் ஒன்றிலிருந்து ஆங்கில கல்வி அடுத்த ஆண்டு முதல் நடைமுறை

கொழும்பு, ஒக். 20

அடுத்த ஆண்டு முதல், தரம் ஒன்றிலிருந்து உயர் வகுப்புகளில் ஆங்கில வழிக் கல்வியை அறிமுகப்படுத்த அரசு பரிசீலித்து வருவதாக கல்வியமைச்சர் சுசில் பிரேமஜயந்த தெரிவித்துள்ளார்.

பாராளுமன்றில் உரையாற்றும்போதே அவர் இதனை கூறினார்.

மேலும், தற்போது இந்த வசதி ஆறாம் தரத்துக்கு மேல் உள்ளதாகவும் கல்வியமைச்சர் இதன்போது சுட்டிக்காட்டினார். (அ)



# உலகளாவிய நியாயாதிக்கம்: சர்வதேச குற்றங்களுக்கு சட்ட நடவடிக்கை எடுப்பதற்கான இறுதி வழியா?

**நிலுஷி தேவப்புர**

அரச அதிகாரிகள் மற்றும் எதிர் ஆயுதக் குழுக்களால் மேற்கொள்ளப்படும் சர்வதேச சட்டத்தின் கீழ் வரும் குற்றங்கள், மனித உரிமை மீறல்கள் மற்றும் துஷ்பிரயோகங்கள் என்பவற்றுக்கான நீதி, உண்மையைக் கண்டறிதல் மற்றும் நட்டஈடுகளைப் பெற்றுக் கொள்வதற்கான தேவைகள் பல சந்தர்ப்பங்களில் மூடி மறைக்கப்படுகின்றன. விசாரணை செய்து சட்ட நடவடிக்கை கள் மூலம் நீதியான வழக்கு விசாரணை களுக்கு உட்படுத்துவதற்கு விருப்பு அற்ற நிலை காணப்படல், முறைமைகள் ஏற்படுத்தும் தடைகள் என்பன அதிகாரத்தை மீறி எதுவும் செய்ய முடியாது என்ற தோற்றப்பாட்டை ஏற்படுத்தி குறித்த குற்றங்களுக்குப் பொறுப்பானவர்கள் மற்றும் அரச அதிகாரிகள் தாம் இழைத்த குற்றங்களுக்கு வகை கூற வைக்கப்பட முடி யாத நிலையை ஏற்படுத்துகின்றது.

அரச அதிகாரிகளால் நாட்டுக்குள் இழைக்கப்பட்ட கொடூரங்களுக்கு அவர்கள் மீது சட்ட நடவடிக்கைகளை மேற்கொண்டு தண்டனை பெற்றுக் கொடுப்பது சாத்திய மற்ற விடயம் எனக் கடந்த காலத்தில் கருதப்பட்ட போதும், சட்டத்தில் அண்மையில் ஏற்படுத்தப்பட்ட விருத்திகள் இந்நிலையை மாற்றியமைத்துள்ளது. நீதி, உண்மை மற்றும் நட்டஈடுகளுக்கான கோரல்கள் கடந்த சில வருடங்களாக அதிகரித்து வருகின்ற நிலையில் அவ்வாறான கோரல்களை பூர்த்தி செய்வதற்கு சர்வதேச பொறிமுறைகளை அமுல்படுத்த வேண்டிய தேவையை ஏற்படுத்தியுள்ளது.

**குற்றவியல் வழக்கு நடவடிக்கைகளின் வரலாறு**

மனித குலத்துக்கு எதிரான குற்றங் கள் மற்றும் யுத்தக் குற்றங்களை இழைத்தவர்களுக்கு எதிரான வழக்கு நடவடிக்கைகளை மேற்கொள்வதற்காக சர்வதேச நியாய சபைகள் ஏற்படுத்தப் பட்டுள்ளன. இவ்வகை வழக்குகளை விசாரிக்க ஏற்படுத்தப்பட்ட முதலாவது நியாய சபையாக நுரம்பேர்க்கில் ஏற்படுத்தப்பட்ட நியாய சபை அமை வதுடன் அதில் சர்வதேச இராணுவ நியாய சபையினால் 1945 தொடக்கம் 1946 வரை மேற்கொள்ளப்பட்ட வழக்கு விசாரணைகளில் நாஸி தலை வர்கள் யுத்தக் குற்றவாளிகளாக நிறுத்தப்பட்டு விசாரிக்கப்பட்டனர். நுரம்பேர்க் நியாய சபையின் பின்னர் ஏனைய வடிவங்களில் அமைந்த நியாய சபைகள் யூகோஸ்லாவியா மற்றும் ருவாண்டா ஆகிய நாடுகளில் யுத்தக் குற்றங்கள், படுகொலை மற்றும் மனித குலத்துக்கு எதிரான குற்றங்களை இழைத்ததாகக் குற்றம் சாட்டப்பட்ட நபர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கைகளை மேற்கொள்ள உருவாக்கப்பட்டன.

இவ்வாறாக தேவைக்கேற்ப உருவாக் கப்படும் நியாய சபைகளின் தோற்றம் சர்வதேச குற்றவியல் சட்ட நடைமுறை களில் மாற்றத்தை உருவாக்கியதுடன் இவற்றின் தோற்றம் ஜூலை 01, 2002 அன்று சர்வதேச குற்றவியல் நீதிமன்றத்தின் (ICC) உருவாக்கத்துக்கு வழிகோலியது. 2002ஆம் ஆண்டு சர்வதேச குற்றவியல் நீதிமன்றத்தினை உருவாக்கிய ரோம் நியதிச் சட்டத்துக்கு கையொப்பமிட்ட நாடுகளைச் சேர்ந்த தனிநபர்களால் இழைக்கப்பட்ட குற்றங்களை மாத்திரமே அந்நீதிமன்றம் விசாரித்து தண்டனை வழங்கும் சக்தி வாய்ந்ததாகக் காணப்படுகின்றது. துரதிர்ஷ்டவசமாக, இலங்கை ரோம் நியதிச் சட்டத்தில் கையொப்பமிடாத தரப்பொன்றாகக் காணப்படுவதால் இலங்கையை சேர்ந்த குற்றவாளி களை ஐக்கிய நாடுகள் சபையின் பாதுகாப்புச் சபையின் ஊடாகவே முன்னிறுத்த இயலுமாக உள்ளது. ஐக்கிய நாடுகள் பாதுகாப்பு சபையில் வீட்டோ அதிகாரம் கொண்டு உறுப்பு நாடுகளின் உலக அரசியல் நலன்கள் இவ்வாறான ஒரு செயன் முறைக்குத் தடையாக அமைகின்றது.

சர்வதேச வழக்கு நடைமுறைகளுக்கான வாய்ப்புகள் குறைவாகக் காணப்பட்ட போதும், முன்னாள் சிலி நாட்டின் ஜனாதிபதியும் சிலி நாட்டின் ஆயுதப் படைகளின் பிரதானியுமான அகஸ்டோ பினோச்சேவின் கைது உலகளாவிய வழக்கு விசாரணைகள் மீள இடம்பெறும் என்ற நம்பிக்கையை புதுப்பிக்கும் விடயமாக அமைந்துள்ளது. அவர் 1973ஆம் ஆண்டு அதிகாரத்தைக் கைப்பற்றிய பின்னர் தன்னை எதிர்ப்பவர்களை கொலை மற்றும் சித்திரவதை செய்தல், வலிந்து காணாமலாக்குதல் போன்ற விடயங்களை மேற்கொள்ளும் ஒருவராக அறியப்பட்டிருந்தார். தனது பதவிக்காலம் முடிவடைந்த பின்னர், அவர் ஐக்கிய இராச்சியத்துக்கு பயணம் ஒன்றை மேற்கொண்டிருந்த வேளை கைது செய்யப்பட்டு தனது பதவிக்காலத்தில் அவர் இழைத்த மனித உரிமை மீறல்களுக்கான வழக்கு விசாரணைகளுக்கு முன்னிலைப்படுத்தப்பட நாடு கடத்தல் உத்தரவு ஒன்று பிறப்பிக்கப்பட்டது. மார்ச் 24, 1999 அன்று பிரபுக்கள் சபை பினோச்சே ஸ்பெயின் நாட்டுக்கு நாடு கடத்தப்பட வேண்டும் என்ற தீர்மானத்துக்கு வந்திருந்தது. வெளிநாடு ஒன்றில் அவர் கைதுசெய்யப்பட்டமை சர்வதேச சட்டங்களின் கீழ் அரச அதிகாரிகளுக்கு தண்டனை வழங்கப்பட முடியாது என்று கட்டியெழுப்பப்பட்டிருந்த மாயையை தகர்த்திருந்தது. இவ்வழக்கானது தெளிவற்றதாகவும் மட்டுப்படுத்தப்பட்ட பயன்பாடு மிக்கதாகவும் காணப்பட்ட சட்டத்தின் கிளையொன்றான உலகளாவிய நியாயாதிக்க வரம்பு என்ற கொள்கையின் மீது ஒளிக்கீற்றை பாய்ச்சியது.

**அரச அதிகாரிகளால் நாட்டுக்குள் இழைக்கப்பட்ட கொடூரங்களுக்கு அவர்கள் மீது சட்ட நடவடிக்கைகளை மேற்கொண்டு தண்டனை பெற்றுக்கொடுப்பது சாத்தியமற்ற விடயம் எனக் கடந்த காலத்தில் கருதப்பட்ட போதும், சட்டத்தில் அண்மையில் ஏற்படுத்தப்பட்ட விருத்திகள் இந்நிலையை மாற்றியமைத்துள்ளது.**

**உலகளாவிய நியாயாதிக்கம்: ஓர் அறிமுகம்**

உலகளாவிய நியாயாதிக்கம் என்ற கொள்கை “சர்வதேச சட்டத்துக்கு எதிரான குற்றங்கள் ஒரு நாட்டின் எல்லைக்குள் இடம்பெறாத வேளையில் கூட, அத்துடன் குற்றமிழைத்தவர் மற்றும் பாதிக்கப்பட்டவர் அந்நாட்டின் குடிமகனாக இல்லாத வேளையில் கூட குறித்த நாட்டுக்கு அக்குற்றங்களின் மேலான நியாயாதிக்க எல்லையை வழங்குகின்றது. மேலும், வெளிநாடுகளில் இடம்பெறும் சர்வதேச குற்றங்களுக்கான தீர்வுகளைப் பெறுவதற்கும், குற்றவாளிகளை குற்றவியல் பொறுப்புக்கு உட்படுத்துவதற்கும், தண்டனையிலிருந்து விலக்களிக்கப்படுவதைத் தடுப்பதற்கும் மூன்றாம் உலக நாடுகளில் உள்ள நீதிமன்றங்களுக்கு இக்கொள்கை அனுமதி வழங்குகின்றது.”

சர்வதேச சட்டத்தின் கீழ் கொடூரமான குற்றங்கள் என வகைப்படுத்தப்படும் குற்றங்களை இழைப்பவர்கள் “முழு மனித குலத்தினதும் எதிரிகள்” எனக்கருதப்பட்டு அவர்களுக்கு எதிராக உலகளாவிய நியாயாதிக்கத்தின் கீழ் சட்ட நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கான வழியை இக்கொள்கை வழங்குகின்றது. இதன் மூலம், குற்றமிழைத்தவர் மற்றும் பாதிக்கப்பட்டவர் எத்தேசியத்தை சேர்ந்தவராக இருப்பினும் அத்துடன் குற்றம் எவ்விடத்தில் இழைக்கப்பட்டாலும் குற்ற மிழைத்தவர்களை அக்குற்றங்களுக்குப் பொறுப்பான வர்களாக்கும் அதிகாரத்தை அந்நாடு இக்கொள்கை மூலம் பெற்றுக்கொள்கின்றது.

சர்வதேச உலகளாவிய நியாயாதிக்கத்தின் வரு டாந்த மீளாய்வின் பிரகாரம், உலகளாவிய நியாயாதிக் கத்தின் கீழ் மொத்தமாக 125 சர்வதேசக் குற்றங்கள் கொண்டுவரப்பட்டுள்ளன. இதில் யுத்தக் குற்றங்களுக் காக 34 குற்றச்சாட்டுகளும், படுகொலை களுக்காக 25 குற்றச்சாட்டுகளும், மனித குலத்துக்கு எதிரான குற்றங்களுக்காக 66 குற்றச்சாட்டுகளும் முரண்பாடுகளுடன் தொடர்புபட்ட பாலியல் வன்முறைகளுக்காக 17 குற்றச்சாட்டுகளும் உள்ளடங்குகின்றன.

உலகளாவிய நியாயாதிக்கம் என்பது தனித்துவம் மிக்க குற்றங்களின் தொகுதி ஒன்றைச் சூழக் காணப்படும் பொதுவான சர்வதேச விதிகளின் விதிவிலக்கு ஒன்றாக அமையவில்லை. மாறாக, அது புராதன காலம் தொடக்கம் வழமையான சர்வதேச சட்டத்தின் பகுதியொன்றாகவே அமைகின்றது. எவ்வாறாயினும், அநேகமாக அரசாங்கங்கள் தமது எல்லைகளுக்கு அப்பால் நியாயாதிக்கத்தை நிலைநாட்ட குறித்த புவியியல் எல்லைகளுடன், தேசியத்துடன் இணைப்பைக் கொண்டதாக அமைந்திருக்க வேண்டும் அல்லது குறித்த விடயம் அந்நாட்டின் தேசிய பாதுகாப்புடன் தொடர்பு பட்டதாக அமைந்திருக்க வேண்டும். இது ஒரு தவறான வரம்பாக அமைவதுடன் அது இறையாண்மை, சமத்துவம் மற்றும் ஏனைய இறையாண்மை மிக்க நாடுகளின் உள்ளூர் விவகாரங்களில் தலையிடாதிருத்தல் என்ற கொள்கைகளின் அடிப்படையில் ஏற்படுத்தப்பட்டதாகக் காணப்படுகின்றது.

உலகளாவிய நியாயாதிக்கத்துக்கான சட்ட அடிப்படை நடுத்தர காலம் தொடக்கம் காணப்படுகின்றது, எனினும், இது கடந்த நூற்றாண்டிலேயே அதிகம் பிரயோகிக்கப்பட்டதாகக் காணப்படுகின்றது. 1949ஆம் ஆண்டின் யுத்தங்கள் பற்றிய சட்டங்களின் ஜெனிவா ஒப்பந்தம் யுத்தக் குற்றங்களை இழைத்ததாக சந்தேகிக்கப்படும் நபர்களை ஒப்பந்தத்தின் தரப்புகளாக அமையும் அரசாங்கங்கள் சட்டத்தின் முன் நிறுத்த அல்லது நாடுகடத்த வேண்டும் என்ற ஏற்பாட்டை உருவாக்கியுள்ளது. மேலும், வழமையான சர்வதேச சட்டம் யுத்தக் குற்றங்கள், சித்திரவதை, மனித குலத்துக்கு எதிரான குற்றங்கள், படுகொலை, கடற்கொள்ளை, கடத்தல், பயங்கரவாத நடவடிக்கைகள் மற்றும் ஐக்கியநாடுகள் சபையைச் சேர்ந்த நபர்கள் மீது தாக்குதல் மேற்கொள்ளல் போன்ற சர்வதேச சமூகத்தினால் கொடூரமானவை எனக் கருதப்படும் குற்றங்கள் தொடர்பில் உலகளாவிய நியாயாதிக்கத்தை பிரயோகிக்க அனுமதிக்கும் பொதுவான உடன்பாட்டைக் கொண்டுள்ளதுடன் அது சட்ட அமுலாக்கத்துக்கு அத்தியாவசியமானதாகக் காணப்படுகின்றது. அரச தரப்புகள் உலகளாவிய நியாயாதிக்கத்தை அமுல்படுத்த வேண்டியதன் சட்ட ரீதியான கடப்பாடு 1949ஆம் ஆண்டின் ஜெனிவா ஒப்பந்தங்கள், இன ஒதுக்கலுக்கு எதிரான 1973ஆம் ஆண்டின் ஒப்பந்தம், 1984ஆம் ஆண்டின் சித்திரவதைக்கு எதிரான ஒப்பந்தம் மற்றும் 2006ஆம் ஆண்டின் வலிந்து காணாமலாக்கப்படுவதற்கு எதிரான ஒப்பந்தம் என்பவற்றில் மேலும் ஏற்படுத்தப்பட்டுள்ளது.

உலகளாவிய நியாயாதிக்கத்தின் தேவை பிரதானமாக நீதியைப் பெற்றுக் கொள்வதற்காகவே காணப்படுகின்றது. தாம் தமது நாட்டில் இழைத்த கொடூரமான குற்றங்களுக்கு சொந்த நாட்டில் நீதியின்

(09ஆம் பக்கம் பார்க்க)

# உலகளாவிய நியாயாதிக்கத்தின் குறைபாடுகள் மற்றும் அதன் மீது காணப்படும் தடைகள்

(08ஆம் பக்கத் தொடர்ச்சி)

பிடியில் இருந்து தப்பியவர்களுக்கு உரிய தண்டனையை நீதியின் மூலம் வழங்குவதற்கான இயங்குதளம் ஒன்றாகவே அது செயற்படுகின்றது. குற்றவாளிகள் மீது சர்வதேசத்தால் நீதி நடவடிக்கைகளை மேற்கொள்வதற்குரிய பொறிமுறையொன்றாக சர்வதேச நியாயாதிக்கம் பயன்படுத்தப்படும் நிலையில் அது எதிர்காலத்தில் அவ்வாறான உரிமை மீறல்கள் இடம்பெறுவதை தடுக்கும் வழிமுறையொன்றாகவும் காணப்படுகின்றது. குற்றங்களை மேற்கொண்டோர் வெளிநாடுகளில் தண்டிக்கப்படுவது குறித்த நாட்டில் பாதிக்கப்பட்ட நபர்கள் மற்றும் அவர்களின் குடும்பங்கள் சமூக சுகப்படுத்தலை அடைவதை ஊக்குவிப்பதால் உலகளாவிய நியாயாதிக்கம் சமூக நல்லிணக்கத்தை தூண்டும் ஓர் அம்சமாகவும் காணப்படுகின்றது. சம்பவம் தொடர்பான உண்மைகளை வெளிப்படுத்தும் மற்றும் உத்தியோகபூர்வ பதிவுகளை உருவாக்கும் அத்தியாவசிய கருவியொன்றாக உலகளாவிய நியாயாதிக்கம் அமைகின்றது, இது குற்றவாளிகளை சட்டத்தின் முன் நிறுத்தாமல் விடுவதால் சட்டத்தின் மேலாதிக்கத்தின் மீது ஏற்படும் தடைகளை அகற்றும் ஒரு வழிமுறையாக அமைந்து சட்ட ஆட்சியை நிலை நிறுத்தும் பொறிமுறையாகவும் அமைகின்றது.

**உலகளாவிய நியாயாதிக்கத்தின் கீழ் சட்ட நடவடிக்கைகளை மேற்கொள்ளல்**

அரச அதிகாரிகளுக்கு எதிராக உலகளாவிய நியாயாதிக்கம் பயன்படுத்தப்பட்ட சம்பவங்களை நோக்கும் வேளை, கடந்த 2017ஆம் ஆண்டு தொடக்கம் மியன்மாரின் ரோஹிங்கியா மக்கள் மீது படுகொலை மற்றும் மனித குலத்துக்கு எதிரான குற்றங்களை இழைத்தமைக்காக அந்நாட்டின் அரச தலைவர் ஆங்சாங் சூகி மற்றும் இராணுவத் தளபதி மிங் ஆங் ஹிலைங் போன்றோருக்கு எதிராக ஆர்ஜன்ரீனா நாட்டின் கீழ் நீதிமன்றத்தில் வழக்கொன்று தாக்கல் செய்யப்பட்டது. ஆர்ஜென்ரீனாவின் பெடரல் நீதிமன்றம் ரோஹிங்கியா மக்களுக்கு எதிராக இழைக்கப்பட்டதாகக் கூறப்படும் படுகொலை மற்றும் மனித குலத்துக்கு எதிரான குற்றங்களை விசாரணை செய்யுமாறு நீதித்துறை அதிகாரத் தரப்புகளுக்கு பணிப்புரை விடுக்கும் வரலாற்றுச் சிறப்பு மிக்க தீர்ப்பொன்றை இவ்வழக்குக்கு வழங்கியது.

மேலும், சிரிய யுத்தத்தின் போது 2013ஆம் ஆண்டு இரண்டு இடங்களில் இரசாயன ஆயுதங்கள் பயன்படுத்தப்பட்டமை, படுகொலை, யுத்தக் குற்றங்கள், மனித குலத்துக்கு எதிரான குற்றங்கள், சித்திரவதை போன்ற குற்றங்களுக்காக சிரிய நாட்டின் அரச தலைவர்கள் மற்றும் இராணுவ அதிகாரிகளுக்கு எதிராக விசேட பிரெஞ்சு அலகின் முன்னிலையில் வழக்கு நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டதன் மூலம் உலகளாவிய நியாயாதிக்கத்தின் செயற்பாடுகள் அண்மைய வருடங்களில் ஐரோப்பாவிலும் மீள ஆரம்பிக்கப்பட்டன. சிரிய ஜனாதிபதி பஷர் அல் அசாத் உள்ளடங்கலாக அந்நாட்டின் தலைவர்களுக்கு எதிரான வழக்கு நடவடிக்கைகள் சுவீடன் நாட்டிலும் ஆரம்பிக்கப்பட்டது.

இவ்விடயம் தொடர்பில் இலங்கையின் சூழமைவு மற்றும் உலகளாவிய நியாயாதிக்கத்தின் கீழ் தாக்கல் செய்யப்பட்ட வழக்குகளை நோக்கும் வேளை, சிவில் யுத்தத்தின் போது முன்னாள் ஜனாதிபதி கோட்டபாய ராஜபக்ஷ யுத்தக் குற்றங்கள் இழைத்தார் எனவும் சர்வதேச மனித நேயச் சட்டம் மற்றும் சர்வதேச குற்றவியல் சட்டம் என்பவற்றை மீறினார் எனவும் அவற்றுக்காக அவர் உடனடியாகக் கைதுசெய்யப்பட வேண்டும் என சர்வதேச உண்மை மற்றும் நீதிக்கான திட்டம் சிங்கப்பூர் சட்டமா அதிபரிடம் குற்றவியல் முறைப்பாடு ஒன்றை மேற்கொண்டிருந்தது. 2009ஆம் ஆண்டு அவர் பாதுகாப்பு செயலாளராக கடமையாற்றிய போது அவர் ஜெனீவா ஒப்பந்தங்களை மீறி செயற்பட்டிருந்தார் எனவும் அவற்றுக்காக அவர் சிங்கப்பூர் நாட்டில் உலகளாவிய நியாயாதிக்கத்தின் கீழ் அந்நாட்டில் சட்ட நடவடிக்கைகளுக்கு உட்படுத்தப்பட வேண்டும் என அந்த முறைப்பாட்டில் எடுத்துக் கூறப்பட்டிருந்தது. 2019ஆம் ஆண்டு சித்திரவதையால் பாதிக்கப்பட்ட 11 நபர்கள் ராஜபக்ஷவுக்கு எதிராக சிவில் வழக்கொன்றை கலிபோர்னியாவில் தாக்கல் செய்திருந்தனர். எவ்வாறாயினும், இவ்வழக்கு அவர் ஜனாதிபதியாக தெரிவு செய்யப்பட்டதன் பின்னர் வாபஸ் பெறப்பட்டது.

ஐக்கிய அமெரிக்க அரசாங்கம் 2019ஆம் ஆண்டு இடம்பெற்ற 268 உயிர்களைக் காவு கொண்ட கொடூரமான குற்றமான உயிர்த்த ஞாயிறு தாக்குதல்களுக்கு பொறுப்பான ஐஎஸ்ஐஎஸ் அமைப்பின் பிரிவுக்கு ஆதரவளித்தனர் என்ற குற்றச்சாட்டை மூன்று இலங்கையர்கள் மீது முன்வைத்தது. அவர்கள் மீது 2020ஆம் ஆண்டு லொஸ் ஏன்ஜல்ஸ் பெடரல் நீதிமன்றம் இக்குற்றச்சாட்டை சுமத்தியுள்ளது. தற்பொழுது அவர்கள் இலங்கை அதிகாரத் தரப்புகளின் தடுப்புக் காவலில் உள்ளனர். எவ்வாறாயினும், அவர்கள் ஐக்கிய அமெரிக்காவுக்கு நாடுகடத்தப்பட வேண்டியுள்ளதுடன் அதற்கான தொடர்பாடல் இலங்கை அதிகார தரப்புகளினால் இன்னும் மேற்கொள்ளப்படவில்லை.

உலகளாவிய நியாயாதிக்கத்தின் கீழ் மேற்கொள்ளப்படும் சட்ட நடவடிக்கைகளில் இருந்து நழுவிக்கொள்வதற்காக பல நாடுகள் தமது சட்டங்களில் தேசிய மன்னிப்பை உள்ளடக்க முயற்சிக்கின்றன. 2021ஆம் ஆண்டு சிறிலங்கா பொதுஜன பெரமுனவின் தவிசாளரான ஜி.எல். பீரிஸ் சாத்தியமான யுத்தக் குற்ற வழக்கு நடவடிக்கைகளில் இருந்து தமது ஆயுதப் படைகளை பாதுகாக்க அரசியலமைப்பின் ஊடான பாதுகாப்பை அவர்களுக்கு வழங்க தேவையான



நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் எனத் தெரிவித்திருந்தார். எவ்வாறாயினும், உலகளாவிய நியாயாதிக்க வரம்புகளினுள் சட்ட பூர்வமாக தங்கியிருக்கும் வழக்குகளை தேசிய பொது மன்னிப்பினால் தடுக்க முடியாது என்பது இங்கு கவனிக்கத்தக்க விடயமாகும்.

**உலகளாவிய நியாயாதிக்கத்தின் குறைபாடுகள் மற்றும் அதன் மீது காணப்படும் தடைகள்**

உலகளாவிய நியாயாதிக்கத்தின் கீழ் மேற்கொள்ளப்படும் சட்ட நடவடிக்கைகள் அதற்கேயுரிய தடைகள் மற்றும் குறைபாடுகளைக் கொண்டனவாகக் காணப்படுகின்றன. உதாரணமாக, உலகளாவிய நியாயாதிக்க கொள்கை காலவோட்டத்தில் விருத்தி செய்யப்பட்ட நிலையில், அதன் அடிப்படையில் பல தெளிவற்ற விடயங்கள் காணப்படுவதன் காரணமாக உலகளாவிய நியாயாதிக்கத்தின் அடித்தளம் ஸ்திரமற்றதாக அமைந்துள்ளது, அது நீதியின் அமுல்படுத்தலுக்கு தடையாக அமைந்துள்ளது. மேலும், உலகளாவிய நியாயாதிக்கத்தின் கீழ் வழக்கு நடவடிக்கைகளை முன்னெடுக்க முனையும் நாடுகளின் சட்டத்தின் சட்டக வடிவமைப்பின் உருவாக்கம் மோசமாக அமைந்துள்ளதுடன் உலகளாவிய நியாயாதிக்கம் மற்றும் சர்வதேச சட்டங்களைப் பிரயோகிக்க அவசியமான தொடர்புடைய தேசிய சட்டங்கள் அந்நாடுகளில் காணப்படுவதில்லை.

உலகளாவிய நியாயாதிக்கம் தொடர்பான புரிதல் மற்றும் அறிவு உள்ளூர் நீதிமன்றங்களில் காணப்படாமை அத்துடன் உள்ளூர் சட்டங்களை சர்வதேச சட்டத்துடன் இணைத்தல் ஆகிய நடைமுறை அம்சங்களைப் பிரதிபலிக்கும் வேளை, நாடுகள் சர்வதேச சட்டங்களை தமது உள்ளூர் சட்டக வடிவமைப்புக்குள் உள்வாங்கும் தேவை காணப்படுகின்றது.

சான்றுகளை சேகரிப்பதுடன் தொடர்புடைய நடைமுறை அம்சங்கள் பிரதான தடையாக அமைகின்றன. இச்சான்றுகள் முதன்மையாக குற்றம் இடம்பெற்ற நாடுகளில் காணப்படுமேயன்றி வழக்கு நடவடிக்கைகள் இடம் பெறும் நாடுகளில் அல்ல. விசாரணை, ஆவணங்கள், சாட்சிகள் மற்றும் பாதிக்கப்பட்டோரை அடையாளம் காணல் அத்துடன்

**உலகளாவிய நியாயாதிக்கம் குறைபாடுகள் உள்ளதாகக் காணப்பட்ட போதும், அதிகாரிகள் தமது நாடுகளில் மேற்கொள்ளும் வன்முறை மற்றும் சர்வாதிகார நடவடிக்கைகளுக்கு நீதியில் இருந்து தப்பிக்கும் நிலையில், அவர்களை அந்நடவடிக்கைகளுக்கு வகைகூற வைப்பதற்கு காணப்படும் சாத்தியமான தீர்வுகளில் ஒன்றாகவே கருதப்படுகின்றது.**

அவர்களைப் பாதுகாத்தல் போன்ற அம்சங்களில் சான்றுகள் தொடர்பான பிரச்சினைகள் எழுகின்றன.

2005ஆம் ஆண்டு நேபாளத்தில் மாவோ கிளர்ச்சி ஏற்பட்ட போது சித்திரவதைகளை மேற்கொண்டதாகக் குற்றம்சாட்டப்பட்ட கேணல் குமார் லாமா 2013ஆம் ஆண்டு ஐக்கிய இராச்சியத்தில் வைத்து கைது செய்யப்பட்டார். வழக்கு நடவடிக்கைகளின் போது தேவையான சான்றுகளைப் பெறுவதில் காணப்பட்ட சிரமங்கள் மற்றும் அவற்றைப் பெறுவதற்குத் தேவையான தொழில்நுட்ப அறிவு இன்மை என்பவற்றால் யதார்த்தங்களை நியாயமான சந்தேகத்துக்கு இடமின்றி நிறுவுவதற்கு வழக்கு தொடர்ந்த தரப்பினரால் முடியாமல் போது. எவ்வாறாயினும், தொழில்நுட்ப முன்னேற்றத்துடன், வழக்கு நடவடிக்கைகளை மேற்கொள்வோர் தகவல்களை எளிதாகப் பெறவும், சந்தேகத்துக்குரிய ஒருவர் எல்லைக்குள் நுழையும் வேளை விழிப்புடன் இருக்கவும் வழிகள் காணப்படுவதால், கடந்த ஆண்டுகளில் வினைத்திறன் மிக்க சட்ட நடவடிக்கைகளை தடுக்கும் நடைமுறைக் கட்டுப்பாடுகள் குறைந்துள்ளன.

குற்றம்சாட்டப்பட்ட தரப்புகள் தாம் தங்கியிருக்கும் வெளிநாட்டில் தமக்கு எதிரான சட்ட நடவடிக்கைகள் ஆரம்பமாகின்றன என்ற விடயத்தை அறிந்தவுடன் விரைவாக அந்நாட்டை விட்டு வெளியேறுவது உலகளாவிய நியாயாதிக்க செயற்பாடுகளை மேலும் தடுக்கின்றது. அவ்வாறான நிலையொன்று இராணுவத்தின் 57ஆவது படைப்பிரிவின் கட்டளைத் தளபதியாக செயற்பட்ட ஜகத் டயஸ் என்பவரின் விடயத்தில் இடம்பெற்றது. அவர் ஜேர்மனியில் இலங்கைத் தூதுவராக செயற்பட்ட வேளை செப்டெம்பர் 2011ஆம் ஆண்டு அரசியலமைப்பு மற்றும் மனித உரிமைகளுக்கான ஐரோப்பிய நிலையத்தினால் மற்றும் TRIAL International ஆகிய அமைப்புகளினால் அவருக்கு எதிராக வழக்கு தாக்கல் செய்யப்பட்ட வேளை அவர் அங்கிருந்து திருப்பி அழைக்கப்பட்டார்.


சர்வதேச ரீதியாகக் காணப்படும் தண்டனை விலக்கும் உலகளாவிய நியாயாதிக்கத்தின் கீழ் மேற்கொள்ளப்படும் வழக்கு நடவடிக்கைகளுக்குத் தடையாக அமைகின்றது. எவ்வாறாயினும், சர்வதேச நீதிக்கான நீதிமன்றத்தில் கொங்கோ நாட்டின் முன்னாள் வெளிவிவகார அமைச்சர் தொடர்பில் கொங்கோ எதிர் பெல்ஜியம் (2022) வழக்கில் வழங்கப்பட்ட தீர்ப்பின் மூலம் உருவாக்கப்பட்ட சட்டத்தினால் இந்நிலை மாற்றமடைந்தது. அதிகாரி ஒருவர் தனது தனிப்பட்ட முறையில் மேற்கொண்ட குற்றம் ஒன்று யுத்தக் குற்றமாக அல்லது மனித குலத்துக்கு எதிரான குற்றமாக இருப்பினும் அதற்கு குறித்த அதிகாரி பொறுப்புக்கூற வேண்டிய நிலையை இவ்வழக்கில் வழங்கப்பட்ட தீர்ப்பு எடுத்துரைத்தது.

உலகளாவிய நியாயாதிக்கம் குறைபாடுகள் உள்ளதாகக் காணப்பட்ட போதும், அதிகாரிகள் தமது நாடுகளில் மேற்கொள்ளும் வன்முறை மற்றும் சர்வாதிகார நடவடிக்கைகளுக்கு நீதியில் இருந்து தப்பிக்கும் நிலையில், அவர்களை அந்நடவடிக்கைகளுக்கு வகைகூற வைப்பதற்கு காணப்படும் சாத்தியமான தீர்வுகளில் ஒன்றாகவே கருதப்படுகின்றது. ●

# புலமைச் சிகரம்

## தரம் 5 புலமைப் பரிசில் மாணவர்களுக்கான வழிகாட்டி

மாதிரிப் பரீட்சை வினாத்தாள்

18) 

i) இத் திண்ம உருவில் எத்தனை முகங்கள் உள்ளன? ...............................

ii) இத் திண்ம உருவில் எத்தனை உச்சிகள் உள்ளன? ...............................

19)  நிறந் தீட்டப்பட்ட பகுதியைப் பின்னமாக எழுதுக.

........................................

20) தரப்பட்ட எண் கோலங்களில் அடுத்துவரும் எண்ணை எழுதுக.

i) 122, 124, 126, .............., ............ ii) 18, 15, 12, .............., ............

21)

| | | |
|---|---|---|
| 3, | 9, | |
| | 6, | 14, |
| 10, | | 12, |

பெட்டிக்குள் உள்ள எண்களில் மூன்றின் மடங்குகளைத் தெரிவு செய்து ஒழுங்கு முறையில் எழுதுக.

.................................................................

22) ஒரு பழக்கூடையில் 620 அப்பிள் பழங்களும் 125 மாம்பழங்களும் உண்டு. கூடையில் உள்ள மொத்தப் பழங்களின் எண்ணிக்கையை எழுதுக.

.........................................................................

23) ஒரு கிளையில் 480 பூக்கள் மலர்ந்திருந்தன. அவற்றில் 25 பூக்களைப் பறித்தெடுத்தால் கிளையில் எஞ்சியிருக்கும் பூக்களின் எண்ணிக்கை யாது?

.................................................................

24) பழப்பாகுப் போத்தல் ஒன்றில் 3l 300ml பானம் அடங்கியுள்ளது. அதனை 3 மாணவர்களிடையே சமமாகப் பகிரப்பட்டதெனின் ஒருவருக்குக் கிடைத்த பான அளவு யாது?

.................................................................

25) 500g சீனியின் விலை ரூபா 48.00 எனின் 1500g சீனியின் விலை யாது? ..................................................

26) **பின்வரும் சிட்டையைப் பூரணப்படுத்துக.**

| பொருள் | வாங்கிய அளவு | ஒரு கிலோகிராமின் விலை | | | பெறுமதி | |
|---|---|---|---|---|---|---|
| | | ரூபா | சதம் | | ரூபா | சதம் |
| பருப்பு | 2kg | 95 | 00 | i) | ............ | ......... |
| தேயிலை | 500g | 200 | 00 | ii) | ............ | ......... |
| | | மொத்தப்பணம் | | | ............ | ......... |

27) கடிகார முகத்தில் பி.ப. 3.30 மணி காட்டுகின்றது. கடிகாரம் காட்டும் நேரத்தை நியம நேரத்தில் எழுதுக.

.......................................................

28) 8m 50cm நீளமான துணியில் 3m துணி வெட்டி எடுக்கப்பட்டது எனின் எஞ்சியிருக்கும் துணியின் நீளம் யாது?

28) 8m 50cm நீளமான துணியில் 3m துணி வெட்டி எடுக்கப்பட்டது எனின் எஞ்சியிருக்கும் துணியின் நீளம் யாது?

.......................................................

29) ஒரு பூங்கொத்தில் மூன்று பூக்கள் வீதம் 12 பூங்கொத்துக்களில் எத்தனை பூக்கள் உள்ளன?

....................................................... (30 புள்ளிகள்)

❖ **இலக்கம் 30 தொடக்கம் 59 வரையுள்ள ஒவ்வொரு வினாவிற்கும் பொருத்தமான விடையைத் தெ செய்து அதன் கீழ்க் கோடிடுக.**

30) சூரிய நமஸ்காரத்தின் நான்காம் படிநிலை எது?

1)  2)  3) 

31) வடமாகாணத்தில் அமைந்துள்ள குளம்
1) அபயவாவி 2) இரணைமடுக்குளம் 3) பராக்கிரமபாகு சமுத்திரம்

32) உள் மூச்சு வாங்குதல் வெளி மூச்சு விடுதல் என்பது மனதை ஒருநிலைப்படுத்தும் செயற்பாட்ட எந்த படிமுறை ஆகும்?
1) திடசித்தம் 2) உதிப்பு 3) உடலைத் தளர்த்தல்

33) தேசிய இலச்சினையின் பூவிதழ் வட்டத்தின் மத்தியில் இருப்பது எது?
1) சூரியன் 2) வாளேந்திய சிங்கம் 3) நெற்கதிர்

34) பிரித்தானியர்களால் முழுமையாக இலங்கை கைப்பற்றப்பட்ட ஆண்டு எது?
1) 1976 2) 1851 3) 1815

35) வருடத்தின் முதல் மாதமும் இறுதி மாதமும் பூக்கும் பூக்கள் எவை?
1) இறப்பர், வேம்பு 2) இறப்பர், தாழம்பூ 3) பிறைப்பூ, நாவல்

## விடைகள்

18. 1) 6 2) 8
19. $\frac{3}{10}$
20. 1) 128, 130 2) 9, 6
21. 3, 6, 9, 12
22. 745
23. 455
24. 11100ml / 1100ml
25. ரூபாய் 144.00
26. 1) 190 2) 100 3) 290
27. 15 : 30
28. 5m 50cm / 550cm
29. 36 பூக்கள்
30. 1
31. 2
32. 3
33. 2
34. 3
35. 2

---

### CHANNEL-1

**20.10.2022**
**வியாழக்கிழமை**

| நேரம் | தரம் | |
|---|---|---|
| 05.15 | தரம்-06 | கணிதம் |
| 06.00 | தரம்-07 | விஞ்ஞானம் |
| 06.45 | தரம்-08 | விஞ்ஞானம் |
| 07.30 | தரம்-09 | விஞ்ஞானம் |
| 08.15 | தரம்-10 | புவியியல் |
| 09.00 | மாணவர்களுக்கானது | ஆலோசனை |
| 09.15 | க.பொ.த.உயர்தரம் | அரசியல் |
| 10.15 | க.பொ.த.உயர்தரம் | கணக்கீடு |
| 11.15 | க.பொ.த.உயர்தரம் | இரசாயனவியல் |
| 12.15 | General knowledge | General knowledge |
| 12.30 | 06 TO சாதாரணதரம் | English |
| 01.15 | க.பொ.த. சா.தரம் | English |
| 02.00 | க.பொ.த. சா.தரம் | தமிழ் |
| 02.45 | க.பொ.த. சா.தரம் | ICT |
| 03.30 | க.பொ.த சா.தரம் | புவியியல் |
| 04.15 | க.பொ.த. சா.தரம் | தமிழ் இலக்கியம் |
| 05.00 | A/Lவினாத்தாள் | Live Telecast கணிதம் |
| 06.00 | தரம்-05 | புலமைப்பரிசில் |
| 07.00 | A/Lவினாத்தாள் | மாதிரி வினாத்தாள் |
| | மறு ஒளிபரப்பு | மறுஒளிபரப்பு-LIVE கணிதம் |
| | | மறு ஒளிபரப்பு |
| | | அனைத்துப்பாடங்களும் |
| 08.00 | தரம்-05 | புலமைப்பரிசில் |
| | | மாதிரி வினாத்தாள் |
| 09.00 | க.பொ.த.உயர்தரம் | அரசியல் |
| 10.00 | க.பொ.த.உயர்தரம் | கணக்கீடு |
| 11.00 | க.பொ.த.உயர்தரம் | இரசாயனவியல் |
| 12.00 | 06 TO Learning English | English |
| 12.45 | க.பொ.தா சா.தரம் | English |
| 01.30 | க.பொ.தா சா.தரம் | தமிழ் |
| 02.15 | க.பொ.தா சா.தரம் | ICT |
| 03.00 | க.பொ.தா சா.தரம் | புவியியல் |
| 03.45 | க.பொ.தா சா.தரம் | தமிழ்இலக்கியம் |
| 04.30 | தரம்-10 | புவியியல் |

### CHANNEL - 2

**20.10.2022**
**வியாழக்கிழமை**

| நேரம் | தரம் | |
|---|---|---|
| 06.00 | பஞ்சபுராணம் | பஞ்சபுராணம் |
| 06.15 | நற்கருணை | நற்கருணை |
| 06.30 | திருக்குறள் பொருள | நாள் ஒரு திருக்குறள் |
| 06.45 | PLAY GROUP | கதை |
| 07.30 | முன்பள்ளி | ஆரம்பநிலை பாடங்கள் |
| 08.15 | தரம்-01 | தமிழ் |
| 09.00 | தரம்-02 | சமயம் |
| 09.45 | தரம்-03 | தமிழ் |
| 10.30 | தரம்-03 | சுற்றாடற்கல்வி - paper |
| 11.15 | தரம்-04 | தமிழ் |
| 12.30 | தரம்-04 | Computer |
| 01.15 | தரம்-05 | தமிழ் |
| 02.00 | தரம்-05 | சுற்றாடற்கல்வி - paper |
| 02.45 | புலமைப்பரிசில் பேப்பர் | புலமைப்பரிசில் பேப்பர் |
| 03.30 | PLAY GROUP | கதை |
| 04.15 | முன்பள்ளி | ஆரம்பநிலை பாடங்கள் |
| 05.00 | தரம்-01 | English Cartoom |
| 05.15 | தரம்-02 | சமயம் |
| 06.00 | தரம்-03 | தமிழ் |
| 06.45 | தரம்-03 | சுற்றாடற்கல்வி - paper |
| 07.30 | தரம்-04 | தமிழ் |
| 08.15 | தரம்-04 | Computer |
| 09.00 | தரம்-05 | தமிழ் |
| 09.45 | தரம்-05 | சுற்றாடற்கல்வி-paper |
| 10.30 | புலமைப்பரிசில் பேப்பர் | புலமைப்பரிசில் பேப்பர் |
| 11.15 | தரம்-03 | தமிழ் |
| 12.30 | தரம்-03 | சுற்றாடற்கல்வி - paper |
| 01.15 | தரம்-04 | தமிழ் |
| 02.00 | தரம்-04 | Computer |
| 02.45 | தரம்-05 | தமிழ் |
| 03.30 | தரம்-05 | சுற்றாடற்கல்வி - paper |
| 04.15 | புலமைப்பரிசில் பேப்பர் | புலமைப்பரிசில் பேப்பர் |
| 05.00 | English | CARTOON |
| 05.30 | English | பாட்டு |



# மரணித்தவருக்கு கண்ணீருடன் அஞ்சலி செலுத்தியது குரங்கு!

மட்டக்களப்பு, ஒக். 20

மட்டக்களப்பு தாளங்குடா பிரதேசத்தில் குரங்கு ஒன்று ஏஜமான் உயிரிழந்ததையடுத்து அவரின் சடலத்தின் மீது ஏறி அவரை கட்டியணைத்து அழுது புலம்பியதுடன் அவரின் இறுதி கிரிகை நடந்த மயானத்துக்குச் சென்று அவருக்கு அஞ்சலி செலுத்திய சம்பவம் நேற்றுமுன்தினம் அனைவரையும் கண்கலங்கவைத்ததுடன் பெரும் ஆச்சரியத்தையும் ஏற்படுத்தியுள்ளது.

தாளங்குடா பிரதேசத்தைச் சேர்ந்த 56 வயதுடைய இரு பிள்ளைகளின் தந்தையான பீதாம்பரம் ராஜன் காட்டிலிருந்து வந்த குரங்கு ஒன்றிற்கு உணவு வழங்கி வந்துள்ளார்.

குறித்த குரங்கு தினமும் அவரது வீட்டுக்கு வந்ததும் அவர் அதற்கு பிஸ்கட்டுகளை வழங்குவதுடன் அவரின் மாற்று ஆற்றலுள்ள பிள்ளையை அறையிலிருந்து குரங்கு இழுத்துவந்து அந்த பிள்ளையுடன் பிஸ்கட் சாப்பிடுவது வழக்கம்.

இந்த நிலையில் கடந்த திங்கட்கிழமை இரவு சுகயீனம் காரணமாக அவர் திடீரென உயிரிழந்ததையடுத்து அவரின் வீட்டில் இறுதிக் கிரியைகள் நேற்று முன்தினம் செவ்வாய்க் கிழமை நடந்தன. அங்கு வந்த குரங்கு அவர் சடலமாக இருப்பதைப் பார்த்து அவரின் பக்கம் சென்று மூச்சு உள்ளதா எனச் சோதித்து அவரின் சட்டையைப் பிடித்து இழுத்துப் பல முயற்சிகளைச் செய்தது.

ஆனால் அவர் படுக்கையிலிருந்து எழும்பாததையடுத்து குரங்கு கண்ணீர் விட்டு அழுததுடன் அவரின் காலை தொட்டுக் கும்பிட்டு அவரின் அருகில் அமர்ந்தது.

அங்கு இறுதிக் கிரிகையில் கலந்துகொள்ள வந்த உறவினர்கள் குரங்கின் செயலைக் கண்டு கண்ணீர்விட்டு அழுததுடன் குரங்கு அருகிலிருந்து செயற்பட்ட காட்சிகளைப் பார்த்து அனைவரும் ஆச்சரியமடைந்தனர்.

அதேவேளைச் சடலத்தைப் புதைப்பதற்காக மயானத்துக்குக் கொண்டு சென்றபோது குரங்கு அங்குச் சென்று தனக்கு உணவு தந்தவருக்கு நன்றி உணர்வுடன் அஞ்சலி செலுத்தியுள்ளது. (அ)

# வடக்கு-கிழக்குப் பல்கலைக்கழக தமிழ் மாணவர் ஒன்றியம் ஆரம்பம்

மட்டக்களப்பு, ஒக். 20

யாழ்.பல்கலைக்கழகமும் கிழக்கு பல்கலைக்கழகமும் இணைந்து வடக்கு-கிழக்கு பல்கலைக்கழக தமிழ் மாண வர் ஒன்றியம் என்னும் அமைப்பு கிழக்கு பல்கலைக் கழகத்தில் அங்குரார்ப்பணம் செய்துவைக்கப்பட்டுள்ளது.



யாழ்.பல்கலைக்கழக மாணவர்களுக்கும் கிழக்கு பல்கலைக்கழக மாணவர்களுக்கும் இடையில் நேற்று முன் தினம் செவ்வாய்க்கிழமை கிழக்கு பல்கலைக்கழகத்தில் நடைபெற்ற சந்திப்பைத் தொடர்ந்து இந்த அமைப்பு உருவாக்கப்பட்டுள்ளது.

வடக்கு - கிழக்கில் உள்ள பல்கலைக்கழகங்களை இணைத்து ஆரம்பிக்கப்பட் டுள்ள இந்த அமைப்பின் அங்குரார்ப்பணம் நேற்று முன் தினம் நடைபெற்றுள்ள நிலையில் ஏனைய மாவட் டங்களில் உள்ள வளாகங்களையும் இணைத்து இந்த ஒன்றியத்தை வலுப்படுத்தும் செயற்பாடுகளை முன்னெடுக்கவுள்ளதாக வடக்கு-கிழக்கு பல்கலைக்கழக தமிழ் மாணவர் ஒன்றியப் பிரதிநிதிகள் தெரிவித்தனர்.

வடக்கு-கிழக்கு பல்கலைக் கழக தமிழ் மாணவர் ஒன்றியத் தின் தலைவராக கிழக்குப் பல்கலைக்கழகத்தின் கலை கலாசார பீடத்தின் தலைவர் நி.தர்சன் தெரிவு செய்யப்பட் டதுடன் செயலாளராக யாழ். பல்கலைக்கழகத்தின் மாணவர் ஒன்றிய தலைவர் அ.விஜய குமாரும் பொருளாளராக யாழ். பல்கலைக்கழகத்தைச் சேர்ந்த பிரதீபனும் ஊடக பேச்சாள ராக யாழ். பல்க லைக்கத்தைச் சேர்ந்த இராசரெத்தினம் தர்ச னும் செயற்பாட்டு உறுப் பினராக கிழக்கு பல்கலைக் கழக மாணவி அனுஸ்திகாவும் தெரிவு செய்யப்பட்டனர்.

இந்த கட்டமைப்பானது வடக்கு-கிழக்கின் அனைத்து பல்கலைக்கழகத்தையும் உள்ளடக்கியதாக எதிர்காலத்தில் உருவாகவுள்ளதாக வடக்கு - கிழக்கு பல்கலைக் கழக தமிழ் மாணவர் ஒன்றியத்தின் தலைவர் நி.தர்சன் தெரிவித்தார்.

வடக்கு-கிழக்கில் உள்ள பல்கலைக்கழகங்களில் உள்ள அனைத்து தமிழ் மாணவர்களையும் ஒன்றிணைத்து பல் வாய்ந்த ஒரு அமைப்பாக இதனை உருவாக்கவுள்ளதாகவும் இது காலத்தின் கட்டாயம் கருதி உருவாக்கப்பட்டுள்ளதாகவும் அவர் கூறினார்.

இந்த நாட்டில் தமிழ் மக் கள் பல்வேறு பிரச்னைகளை எதிர்கொண்டுவரும் சூழ் நிலையிலேயே இந்த மாணவர் ஒன்றியம் உருவாக்கப்பட் டுள்ளதாகவும் தமிழ் மக்கள் எதிர் கொள்ளும் அனைத்து பிரச் னைகளுக்கும் குரல்கொடுக் கும் வகையிலும் மாணவர்கள் நலன்சார்ந்த வகையிலான செயற்பாடுகளையும் முன்னெடுக்கப் போவதாகவும் தலைவர் மேலும் கூறினார். (அ)



# தேசிய மட்டத்துக்கு தெரிவான மாணவன் அம்சாத் கௌரவிப்பு

அம்பாறை, ஒக். 20

கிழக்கு மாகாண கல்வித் திணைக்களம் நடத்திய மாகாண மட்டசமூக விஞ்ஞான போட்டியில் முதலிடம் பெற்று தேசிய மட்டத்துக்கு தெரிவான சம்மாந்துறை மஜீட்புர மகா வித்தியாலய மாணவன் கே.எம்.அம்சாத் கௌரிக்கப்பட்டார்.

சம்மாந்துறை வரையத்தில் மிகவும் பின்தங்கிய தனிமைப்படுத்தப்பட்ட கிராமமான மஜீட்புரத்திலுள்ள மகா வித்தியாலயத்தில் தரம் 12 இல் கல்வி கே. எம். அன்சாத் என்ற மாணவனே உயர்தரப் பிரிவிலே முதலிடத்தை பெற்று தேசிய மட்டத்துக்கு தெரிவாகினார் .

இவரை கௌரவிக்கும் நிகழ்வு நேற்று முன் தினம் செவ்வாய்க்கிழமை பாடசாலையில் நடைபெற்றது.

சம்மாந்துறை வலய கல்விப் பணிப்பாளர் எஸ் எம் எம் அமீரின் வழிகாட்டலில் பிரதிக் கல்விப் பணிப்பாளர் ஏஎல்ஏ. மஜீட் தலைமையில் இந்த கௌரவிப்பு நிகழ்வு இடம் பெற்றது.

மஜீட்புர மகா வித்தியாலய உயர்தர மாணவன் அம்சாத் சம்மாந்துறை வலயத்தில் இருந்து தெரிவான ஒரேயொரு மாணவராவார். அவருக்கு மாலை சூட்டி பாராட்டி கௌரவித்தனர்.

நிகழ்வில் உதவிக் கல்விப் பணிப்பாளர்களான ரியால் ,சகாதேவராஜா கோட்டக் கல்விப் பணிப்பாளர் சபூர்தம்பி வலயத்தில் சமூக விஞ்ஞானப்பிரிவுக்கு பொறுப்பான உத்தியோகத்தர்களான நிசார் , ஈசிபு உள்ளிட்ட அதிகாரிகளும் கலந்து கொண்டு சிறப்பித்தனர். (அ)

# அம்பாறை மாவட்ட இளைஞர், யுவதிகளுக்கு முரண்பாட்டு தீர்வுகள் குறித்து செயலமர்வு

அம்பாறை, ஒக். 20

சமூக அபிவிருக்கான நிறுவனத்தினால் அம்பாறை மாவட்டத்திலுள்ள இளைஞர் யுவதிகளுக்கு முரண்பாட்டு தீர்வுகள் தொடர்பான இரு நாள் செயலமர்வு காரைதீவு தனியார் மண்டபமொன்றில் இடம்பெற்றது.

சமூக அபிவிருக்கான நிறுவ னத்தின் பிராந்திய திட்ட உத்தியோகத்தர் எம்.எஸ்.ஜலீல் தலைமையில் நடைபெற்ற செயலமர்வில் இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் கல்முனை பிராந்திய இணைப்பாளர் ஏ.சி.ஏ.அஸீஸ் வளவாளராக கலந்துகொண்டார்.

# ஊடகவியலாளர் நிமலராஜன் நினைவேந்தல் மட்டக்களப்பில்



மட்டக்களப்பு, ஒக். 20

படுகொலை செய்யப்பட்ட ஊடகவியலாளர் மயில்வாகனம் நிமலராஜன் 22 ஆவது நினைவேந்தல் மட்டக்களப்பு காந்தி பூங்காவில் அமைந்துள்ள படுகொலை செய்யப்பட்ட ஊடகவியலாளர்களுக்காக அமைக்கப்பட்டுள்ள நினைவு தூபில் நேற்று புதன்கிழமை இடம்பெற்றது.

ஊடகவியலாளர்கள் மற்றும் அரசியல் பிரமுகர்கள் கலந்து கொண்டு அன்னாரின் திருவுருவ படத்திற்கு சுடர் ஏற்றி உணர்வு பூர்வமாக அஞ்சலி செலுத்தினர் .

மட்டக்களப்பு தமிழ் ஊடகவியலாளர் ஒன்றியத் தலைவர் பா.கிருஷ்ணகுமார் தலைமையில் இடம் பெற்ற இந்த நினைவேந்தலில் ஊடகவியலாளர்கள் முன்னாள் பாரளுமன்ற உறுப்பினர் பா.அரியேந்திரன், மட்டக்களப்பு மாநகரசபை முதல்வர் தி.சரவணபவான், மட்டக்களப்பு சர்வமத நல்லினக்கத்தின் செயலாளர் வணபிதா ஜேசுதாஸ் மற்றும் மனித நேய அமைப்புக்களைச் சோந்தவர்கள் கலந்துகொண்டு படுகொலை செய்யப்பட்ட ம.நிமலராஜன் திருவுருவ படத்திற்கு மலர் மாலை அணிவித்து சுடர் ஏற்றி மலர் தூவி இரண்டு நிமிட அஞ்சலி செலுத்தினர்.

# புலமைப்பரிசிலில் சித்தி பெற்றவர்களை பாராட்டி கௌரவித்த இஸ்லாமிய வங்கி

அம்பாறை, ஒக். 20



சம்மாந்துறை வலயத்துக்கு உட்பட்ட வீரமுனை இராமகிருஷ்ண மகா வித்தியாலய புலமையாளர்களை சம்மாந்துறை இஸ்லாமிய வங்கி பாராட்டி கௌரவித்தது.

சம்மாந்துறை மஸ்ரபுல் இஸ்லாமிய்யா சிக்கன கடன் கூட்டுறவுச் சங்கம் இவ்வாறு புலமைப் பரிசில் சித்தி பெற்ற மாணவர்களைக் கௌரவித்தது.

கல்லூரி அதிபர் திருமதி சத்யா செந்தமிழ்செல்வன் தலைமையில் நேற்று முன் தினம் ஆராதனை மண்டபத்தில் இந்த நிகழ்வு நடைபெற்றது.

பிரதம அதிதியாக வலய கூட்டுறவு அபிவிருத்தி உத்தியோகத்தர் அஷ்ரப், தலைமை கூட்டுறவு அபிவிருத்தி உத்தியோகத்தர் ஜலால்தீன், இஸ்லாமிய வங்கியின் தலைவர், முன்னாள் தவிசாளர் இப்ராஹிம் ,உதவிக் கல்விப் பணிப்பாளர் வி.ரி.சகாதேவராஜா, உறுப்பினர்களான ராசிக் ,அமீர் ஆகியோர் அதிதிகளாக கலந்து கொண்டார்கள்.

கடந்த புலமைப் பரிசில் பரீட்சையில் 130 புள்ளிகளுக்கு மேல் எடுத்த அனைத்து மாணவர்களுக்கும் பதக்கம், உண்டியல் ,புத்தகம் மற்றும் சான்றிதழ் வழங்கி கௌரவிக்கப்பட்டது. (அ)

# நிர்வாண கோலத்தில் 92 குடியேற்றவாசிகள்!

## துருக்கி - கிறீஸ் எல்லையில் மீட்பு விசாரணை நடத்த ஐ.நா. கோரிக்கை



ஸ்தான்புல், ஒக். 20

துருக்கி - கிறீஸ் எல்லையில் 92 குடியேற்றவாசிகள் நிர்வாண கோலத்தில் காணப்பட்டமை குறித்து விசாரணை நடத்துமாறு ஐநா வலியுறுத்தியுள்ளது.

துருக்கியுடனான எல்லையிலுள்ள அவ்ரோஸ் நதிக்கு அருகில் கடந்த வெள்ளிக்கிழமை 92 ஆண்கள் இவ்வாறு கண்டுபிடிக்கப்பட்டனர் என கிறீஸ் (கிரேக்கம்) தெரிவித்துள்ளது.

இவர்கள் துருக்கியிலிருந்து எவ்ரோஸ் நதியைக் கடந்து கிறீஸுக்குள் செல்ல நிர்ப்பந்திக்கப்பட்டவர்கள் என கிறீஸ் அரசாங்கம் கூறுகிறது. எனினும் துருக்கிய அரசாங்கம் இதை நிராாகரித்துள்ளது.

மேற்படி ஆண்களில் பெரும்பாலானோர் ஆப்கானிஸ்தான் மற்றும் சிரியா நாடுகளைச் சேர்ந்தவர்கள் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இக் குடியேற்றவாசிககளின் வருகையை ஐரோப்பிய எல்லைப் பாதுகாப்பு முகவரகமான ஃபுரொண்டெக்ஸ் உறுதிப்படுத்தியுள்ளது.

இக்குடியேற்றவாசிகள் ஏறத்தாழ நிர்வாணமாக காணப்பட்டனர் எனவும், சிலரின் உடலில் காயங்கள் காணப்பட்டதாகவும் ஃபுரொண்டெக்ஸ் அதிகாரிகள் தெரிவித்தனர் என அந்த முகவரகத்தின் பேச்சாளர் பவுலினா பகுலா தெரிவித்துள்ளார்.

அகதிகளுக்கான ஐ.நா தூதரகம் இது தொடர்பாக டுவிட்டரில் வெளியிட்ட பதிவில், ‘கிறீஸ் - துருக்கி எல்லையில் கணடுபிடிக்கப்பட்டதாக தெரிவிக்கப்படும், ஆடைகள் களையப்பட்ட 92 பேர் குறித்த அதிர்ச்சிகரமான தகவல்கள் படங்கள் தொடர்பில் நாம் ஆழ்ந்த கவலையடைந்துள்ளோம்’ எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேற்படி நபர்களுக்கு அவசர உதவிகளை வழங்குவதற்கு கிறீஸ் அதிகாரிகளுடன் ஃபுரண்டெக்ஸ் அதிகாரிகள் இணைந்து செயற்படுவதாக பவுலினா பகுலா தெரிவித்துள்ளார்.

உரிமை மீறல்கள் இடம்பெற்றிருக்கக்கூடிய சாத்தியம் குறித்து ஃபுரொண்டெக்ஸ் முகவரகத்தின் அடிப்படை உரிமைகள் தொடர்பான அதிகாரிக்கு அம்முகவரகம் அறிவித்துள்ளதாகவும் அவர் கூறியுள்ளார்.

குடியேற்றவாசிகள் தொடர்பாக கிரேக்கமும் துருக்கியும் பரஸ்பரம் குற்றச்சாட்டுகளை தொடர்ச்சியாக சுமத்தி வருகின்றன.

இந்நிலையில், சட்டவிரோத குடியேற்றத்தை துருக்கி தூண்டுவதாக கிரேக் கத்தின் பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் தாகிஸ் தியோடோரிகோஸ் கூறியுள்ளார்.

இரு நாடுகளுக்கும் இடையிலான எல்லையாகவுள்ள ஆற்றுக்கு, துருக்கியின் 3 இராணுவ வாகனங்களில் குடியேற்றவாசிகள் ஏற்றிவரப்பட்டதாக அக்குடியேற்றவாசிகளில் சிலர், புரொண்டெக்ஸ் முகவரகத்திடம் தெரிவித்தனர் எனவும் தொலைக்காட்சியொன்றில் அமைச்சர் தாகிஸ் தியோடோரிகோஸ் கூறியுள்ளார்.

ஆனால், கிரேக்கத்தின் குற்றச்சாட்டுகளை துருக்கி நிராகரித்துள்ளது.

துருக்கிய ஜனாதிபதி தாயீப் ஏர்தோகானின் உயர் ஊடக அதிகாரி பஹ்ரிதின் அல்துன் இது தொடர்பாக கூறுகையில், ‘அகதிகளை மோசமாக நடத்துவதையும் உடனடியாக கைவிடுமாறும் கிறீஸை நாம் வலியுறுத்துகிறோம்.

இந்த தோல்வியடைந்த, அபத்தான முயற்சிகளின் மூலம், ஒடுக்கப்பட்ட மக்களின் இப்படங்களை வெளியிட்டதனால், அகதிகளின் கௌரவத்தை தான் மதிக்கவில்லை என்பதை கிறீஸ் மீண்டும் வெளிப்படுத்தியுள்ளது’ எனக் குறிப்பிட்டுள்ளார்.

குடியேற்றவாசிகளை துருககிக்கு சட் டவிரோதமாக திருப்பி அனுப்புவதற்கு கிறீஸ் பல சந்தர்ப்பங்களில் முயற்சித்துள்ளதாகவும், சிலவேளைகளில் படைப்பலத்தை பிரயோகித்ததாகவும் அரச சார்பற்ற அமைப்புகளும் ஊடகங்களும் சுமத்தும் குற்றச்சாட்டுகளை கிறீஸ் அரசாங்கம் நிராகரித்து வருகிறது.

கடந்த மாதம் ஐ.நாவில் உரையாற்றிய துருக்கிய ஜனாதிபதி தாயீப் ஏர்தோகான், குடியேற்வாசிகள் தொடர்டபான ஒடுக்குமுறை கொள்கையின் மூலம் ஏஜியன் கடலை மயானாமாக கிறீஸ் மாற்றுவதாக குற்றம் சுமத்தினார்.

ஜேர்மனியின் பேர்லின் நகரை தளமாகக் கொண்ட மனித உரிமைகள் அமைப்பான மேரே லிபேரம் டுவிட்டரில் வெளியிட்ட பதிவில், எவ்ரோஜ் பிராந்தியத்தில் துருக்கி மற்றும் கிறீஸினால் மனித உரிமைகள் குற்றங்கள் நாளாந்த அடிப்படையில் இழைக்கப்படுகின்றன.

இக்குற்றங்கள் அரசாங்கங்களினால் பகிரங்கமாக கலந்துரையாடப்படும் போது, அது துருக்கிக்கும் கிறீஸுக்கும் இடையிலான நீண்ட கால பிரச்சினையில் எண்ணெய் ஊற்றுவதாக பயன்படுத்தப்படுகிறது, இடம் பெயரும் மக்களை பாதுகாப்பதற்கு அல்ல’ எனக் குறிப்பிட்டிருந்தது. (அ)

## I மணி நேரத்தில் 249 கோப்பை தேநீர் தயாரித்து பெண் கின்னஸ் சாதனை!

கேப்ரவுண், ஒக். 20

தென்னாபிரிக்காவைச் சேர்ந்த பெண் ஒருவர் சுமார் ஒரு மணி நேரத்தில் 249 கோப்பைகளில் தேநீர் தயாரித்து கொடுத்து கின்னஸ் சாதனை படைத்துள்ளார்.

வுப்பர்தல் நகரத்தைச் சேர்ந்த இங்கர் வலன்ரைன் என்ற பெண் மூலிகை தேநீரை தயாரித்து உள்ளூர் மாணவர்கள் மற்றும் குடியிருப்பு வாசிகளுக்கு வழங்கினார்.

ஒரு மணி நேரத்தில் 150 கோப்பைகளை தயாரிக்கலாம் என்று நினைத்த அந்த பெண் முடிவில் 249 கோப்பைகளில் தேநீரை தயாரித்து சாதனை படைத்துள்ளார். (அ)






## அமெ. விமானத்தில் பாம்பு!

நியூயோர்க், ஒக். 20

அமெரிக்காவின் புளோரிடா மாகாணத்தில் உள்ள தம்பா நகரில் இருந்து நியூ ஜெர்சிக்கு சென்ற விமானத்தில், பாம்பு இருந்ததைக் கண்டு பயணிகள் அச்சமடைந்தனர்.

கடந்த திங்கட்கிழமை யுனைட்டட் நிறுவனத்துக்கு சொந்தமான விமானம் நியூ ஜெர்சியில் தரையிறங்கிய போது, வணிக வகுப்பில் இருந்த பயணிகள், அங்கு பாம்பு இருந்ததைக் கண்டு கூச்சலிட்டுள்ளனர்.

உடனடியாக நெவார்க் லிபர்ட்டி சர்வதேச விமான நிலையத்தில் இருந்து தொழிலாளர்கள் வரவழைக்கப்பட்டு அந்த பாம்பு பிடிக்கப்பட்டுள்ளது.

இதில் பயணிகள் யாருக்கும் காயம் ஏற்படவில்லை என யுனைட்டட் எயார்லைன்ஸ் நிறுவனம் தெரிவித்துள்ளது. (அ)

## ஆங் சான் சூகிக்கு எதிரான ஊழல் வழக்கு தொடரும்!

### நீதிமன்றம் திட்டவட்டம்

நைபிடா, ஒக். 20

மியன்மார் ஜனநாயகக் கட்சித் தலைவரட் ஆங் சான் சூகிக்கு (வயது-77) எதிரான கடைசி ஊழல் வழக்கு தொடர்ந்து நடைபெறும் என்று அந்த நாட்டு நீதிமன்றம் கடந்த செவ்வாய்க்கிழமை திட்டவட்டமாகத் தெரிவித்தது.

ஆங் சான் சூகியின் ஆட்சியின்போது ஹெலிகொப்டர்கள் வாங்கிய விவகாரத்தில் அவருக்கு எதிராக 5 ஊழல் குற்றச்சாட்டுகள் பதிவு செய்யப்பட்டுள்ளன. அவற்றை கடந்த செவ்வாய்க்கிழமை ஆய்வு செய்த நீதிமன்றம், அரசுத் தரப்பிலிருந்து போதிய ஆதாரங்கள் தாக்கல் செய்யப்பட்டுள்ளதால் வழக்கை தொடர்ந்து நடத்துவதாக அறிவித்தது.

ஏற்கெனவே பல்வேறு வழக்குகளில் ஆங் சான் சூகிக்கு மொத்தம் 26 ஆண்டுகள் சிறைத் தண்டனை விதிக்கப்பட்டுள்ளது நினைவு கூரத்தக்கது.

கடந்த 2020 ஆம் ஆண்டு நடைபெற்ற தேர்தலில் முறைகேடுகள் நடைபெற்றாகக் கூறி ஆங் சான் சூகி தலைமையிலான அரசை ராணுவம் கடந்த ஆண்டு பெப்ரவரி 1 ஆம் திகதி கலைத்தது. அத்துடன், அவரைக் கைது செய்து பல்வேறு வழக்குகளை ராணுவம் தொடர்ந்துள்ளது. (அ)

## சுவீடனில் காலநிலை, சுற்றுச்சூழல் அமைச்சராக 26 வயது இளம் பெண்

ஸ்ரொக்ஹோம், ஒக். 20

சுவீடனில் 26 வயது இளம் பெண் ரோமினா பூர்மோக்தாரி காலநிலை மற்றும் சுற்றுச்சூழல் அமைச்சராக நியமிக்கப்பட்டுள்ளார். புதிதாக பொறுப்பேற்ற பிரதமர் உல்ப் கிறிஸ் டெர்ஸன் தலைமையிலான அமைச்சரவையில் ஈரான் வம்சாவளியை சேர்ந்த சுற்றுச்சூழல் ஆர்வலரான ரோமினா பூர்மோக்தாரி காலநிலை மற்றும் சுற்றுச் சூழல் அமைச்சராக நியமிக்கப்பட் டார்.

இவர் அமைச்சராக நியமிக்கப்பட்டதன் மூலம் சுவீடனின் 27 வயது இளம் அமைச்சர் என்ற இதற்கு முந்தைய அமைச்சர் ஒருவரின் சாதனையை முறியடித்துள்ளார். (அ)






# சுப்பர் 12 சுற்றுக்கு நுழையும் அணி எது?

மெல்பர்ன், ஒக். 20

ஐக்கிய அரபு எமிரேட்ஸுக்கு எதிராக இலங்கை அணி பெற்ற வெற்றியால் 'ஏ' பிரிவில் இருந்து சுப்பர் 12 சுற்றுக்கு முன்னேற கடும் போட்டி நிலவும் சூழ்நிலை உருவாகியுள்ளது.

இந்தப் பிரிவில் நெதர்லாந்து மோதிய இரு போட்டிகளிலும் வெற்றி பெற்று 4 புள்ளிகளுடன் முதலிடத்தில் உள்ளது. இதற்கு அடுத்தபடியாக இலங்கை, நமீபியா அணிகள் தலா 2 புள்ளிகள் பெற்றுள்ளன.

இந்த இரு அணிகளும் தலா ஒரு வெற்றி, ஒரு தோல்வியை பதிவு செய்துள்ளன. இலங்கை தனது கடைசி லீக் போட்டியில் நெதர்லாந்தை சந்திக்கிறது.

இதேவேளை, நமீபியா, ஐக்கிய அரபு எமிரேட்ஸை எதிர்கொள்கிறது. இலங்கை அணி நெதர்லாந்தை வீழ்த்தும் பட்சத்திலும், நமீபியா அணி ஐக்கிய அரபு எமிரேட்ஸை வீழ்த்தும் பட்சத்திலும் நிகர ஓட்ட சராசரியே சுப்பர் 12 சுற்றுக்கு முன்னேறும் இரு அணிகளை தீர்மானிக்கும். ஏனெனில், மேற்கூறியபடி முடிவுகள் கிடைக்கப்பெற்றால் இலங்கை, நெதர்லாந்து, நமீபியா ஆகிய 3 அணிகளுமே தலா 4 புள்ளிகளுடன் லீக் சுற்றை நிறைவு செய்யும். (ஐ)

# வடக்கின் சமர் உதைபந்தில் இன்று

யாழ்ப்பாணம், ஒக். 20

யாழ். உதைபந்தாட்ட லீக்கின் அனுசரணையில் ஊரெழு றோயல் விளையாட்டு கழகம் வடக்கின் சமர் உதைபந்தாட்ட சுற்றுப் போட்டியை நடத்துகிறது.

உரும்பிராய் இந்துக் கல்லூரி மைதானத்தில் நடக்கும் இந்தத் தொடரின் இரண்டாவது சுற்றுப் போட்டிகளின் இன்று,

பிற்பகல் 3.30 மணிக்கு இளவாலை சென். லூட்ஸ் அணியை எதிர்த்து ஆனைக்கோட்டை கலைஒளி மோதுகிறது.

மாலை 4.30 மணிக்கு மயிலங்காடு ஞானமுருகன் அணியை எதிர்த்து அராலி பாரதி அணி ஆடுகின்றது. (ஐ)

# ஐக்கிய அரபு எமிரேட்ஸை வெற்றிகொண்டது இலங்கை

மெல்பர்ன், ஒக். 20

ஐக்கிய அரபு எமிரேட்ஸ் அணிக்கு எதிரானபோட்டியை 79 ஓட்டங்களால் முக்கியமான வெற்றியை பெற்றது இலங்கை அணி.

இருபது - 20 உலகக் கிண்ணத்தின் முதல் சுற்றுப் போட்டி அவுஸ்திரேலியாவில் நடக்கிறது. இதில், நேற்று முன்தினம் மெல்பர்னில் நடந்த போட்டியில் இலங்கை - ஐக்கிய அரபு எமிரேட்ஸை எதிர்த்தது.

முதலில் துடுப்பெடுத்தாடிய இலங்கை 20 ஓவர்களில் 8 விக்கெட்களை இழந்து 152 ஓட்டங்களைப் பெற்றது.

3 வீரர்கள் மாத்திரமே இரு வரிசை இலக்க எண்ணிக்கைகளைப் பெற்றனர். ஆரம்ப வீரர் பதும் நிஸங்க அரைச்சதம் அடித்தார். குசல் மெண்டிஸ்/டன் ஆரம்ப விக்கெட்டில் 28 பந்துகளில் 42 ஓட்டங்களைப் பகிர்ந்த பதும் நிஸங்க, 2ஆவது விக்கெட்டில் தனஞ்சய டி சில்வாவுடன் 39 பந்துகளில் சரியாக 50 ஓட்டங்களைப் பகிர்ந்தார். குசல் மெண்டிஸ் 18 ஓட்டங்களையும் தனஞ்சய டி சில்வா 33 ஓட்டங்களையும் பெற்றனர்.

ஒரு கட்டத்தில் 117 ஓட்டங்களுக்கு 2 விக்கெட்களை மாத்திரம் இழந்திருந்த இலங்கை, கணிசமான மொத்த எண்ணிக்கையைப் பெறும் என எதிர்பார்க்கப்பட்டது. ஆனால், அதன் பின்னர் 35 ஓட்டங்கள் வித்தியாசத்தில் கடைசி 8 விக்கெட்களை இலங்கை இழந்தமை ரசிகர்கள் மத்தியில் பெரும் ஆச்சரியத்தை ஏற்படுத்தியது.

ஐக்கிய அரபு எமிரேட்ஸுக்காக விளையாடிய தமிழரான சுழல்பந்துவீச்சாளர் கார்த்திக் மெய்யப்பன் "ஹட்ரிக்"கை பதிவு செய்து வரலாறு படைத்ததுடன் இலங்கை அணியை நெருக்கடிக்குள்ளாக்கினார். பானுக ராஜபக்ஷ (5), சரித் அசலங்க (0), தசூன் சானக (0) ஆகிய மூவரை 15ஆவது ஓவரின் கடைசி 3 பந்துகளில் ஆட்டமிழக்கச் செய்தார்.

இலங்கை அணியின் மத்தியவரிசை துடுப்பாட்டக்காரர்களான வனிந்து ஹசரங்க டி சில்வா (2), சாமீக கருணாரட்ன (2), பிரமோத் மதுஷான் (1) ஆகியோரும் துடுப்பாட்டத்தில் கோட்டை விட்டனர்.

மறுபக்கத்தில் நிதானம் கலந்த வேகத்துடன் கடைசி ஓவர் வரை துடுப்பெடுத்தாடிய பதும் நிஸங்க 60 பந்துகளில் 6 பௌண்ட்ரிகள், 2 சிக்ஸர்களுடன் 74 ஓட்டங்களைப் பெற்றுஆட்டமிழந்தார்.

ஐக்கிய அரபு இராச்சிய பந்துவீச்சில் கார்த்திக் மெய்யப்பன் 4 ஓவர்களில் 19




ஓட்டங்களுக்கு 3 விக்கெட்களையும் ஸஹூர் கான் 26 ஓட்டங்களுக்கு 2 விக்கெட்களையும் அயன் அப்ஸால் கான் 16 ஓட்டங்களுக்கு ஒரு விக்கெட்டையும் கைப்பற்றினர்.

153 ஓட்டங்கள் என்ற வெற்றி இலக்கை நோக்கி பதிலுக்கு துடுப்பெடுத்தாடிய ஐக்கிய அரபு இராச்சியம் 17.1 ஓவர்களில் சகல விக்கெட்களையும் இழந்து 73 ஓட்டங்களைப் பெற்று தோல்வி அடைந்தது.

பிரமோத் மதுஷான் வீசிய முதலாவது பந்திலும் நான்காவது பந்திலும் இரண்டு கடினமான பிடிகள் நழுவிப்போயின. எனினும், இலங்கையின் துல்லியமான பந்துவீச்சுகளுக்கு ஈடுகொடுக்க முடியாமல் திணறிய ஐக்கிய அரபு எமிரேட்ஸ் 3ஆவது ஓவரிலிருந்து சீரான இடைவெளியில் விக்கெட்களை இழந்து தோல்வியைத் தழுவியது.

துடுப்பாட்டத்தில் அயன் அப்ஸால் கான் (19), ஜ/னைத் சித்திக் (18), சிராக் சூரி (14) ஆகிய மூவரே 10 ஓட்டங்களுக்குமேல் பெற்றனர்.

இலங்கையின் பந்துவீச்சில் வனிந்து ஹசரங்க டி சில்வா 4 ஓவர்களில் 8 ஓட்டங்களுக்கு 3 விக்கெட்களையும் துஷ்மன்த சாமீர 3.5 ஓவர்களில் 15 ஓட்டங்களுக்கு 3 விக்கெட்களையும் மஹீஷ் தீக்ஷன 15 ஓட்டங்களுக்கு 2 விக்கெட்களையும் கைப்பற்றினர். (ஐ)

# ஸ்கொட்லாந்தை வீழ்த்தி அயர்லாந்து அபார வெற்றி!

பெலேரிவ், ஒக். 20

பரபரப்பை ஏற்படுத்திய போட்டியில் ஸ்கொட்லாந்து அணியை 6 விக்கெட்களால் வெற்றிகொண்டது அயார்லாந்து.

ஸ்கொட்லாந்து அணி அதிரடியாக நிர்ணயித்த 177 ஓட்டங்கள் என்ற கடினமான வெற்றி இலக்கை நோக்கி துடுப்பெடுத்தாடிய அயர்லாந்து 19 ஓவர்களில் 4 விக்கெட்களை மாத்திரம் இழந்து 180 ஓட்டங்களைப் பெற்று அமோக வெற்றியீட்டியது.

கேர்ட்டிஸ் கெம்ஃபர், ஜோர்ஜ் டொக்ரெல் ஆகிய இருவரும் பிரிக்கப்படாத 5ஆவது விக்கெட்டில் பகிர்ந்த பெறுமதிமிக்க 119 ஓட்டங்கள் அயர்லாந்தின் வெற்றியை சுலபப்படுத்தியது.

அயர்லாந்து 10 ஓவது ஓவரில் 4 விக்கெட்டை இழந்தபோது மொத்த எண்ணிக்கை 61 ஓட்டங்களாக இருந்தது. இதனால் ஸ்கொட்லாந்து அணியினர் பெரும் உற்சாகம் அடைந்தனர். ஆனால், அதன் பின்னர் கேர்ட்டிஸ் கெம்ஃபரும் ஜோர்ஜ் டொக்ரெலும் அபாரமாகத் துடுப்பெடுத்தாடி அயர்லாந்தின் வெற்றியை உறுதிசெய்தனர்.

அதிரடி வேகத்தில் துடுப்பெடுத்தாடிய கெம்ஃபர் 32 பந்துகளில் 7 பௌண்ட்ரிகள், 2 சிக்ஸர்களுடன் 72



ஓட்டங்களைக் குவித்து ஆட்டமிழக்காதிருந்தார்.

டொக்ரெல் 27 பந்துகளில் 4 பௌண்ட்ரிகள், ஒரு சிக்ஸர்கள் அடங்கலாக ஆட்டமிழக்காமல் 39 ஓட்டங்களைப் பெற்றார்.

இவர்களை விட லோர்க்கன் டக்கர் 20 ஓட்டங்களையும் அணித் தலைவர் அண்டி பெல்பேர்னி, ஹரி டெக்டர் ஆகிய இருவரும் தலா 14 ஓட்டங்களையும் பெற்றனர்.

முன்னதாக இந்தப் போட்டியில் முதலில் துடுப்பெடுத்தாடத் தீர்மானித்த ஸ்கொட்லாந்து 20 ஓவர்களில் 5 விக்கெட்களை இழந்து 176 ஓட்டங்களைப் பெற்றது.

ஆரம்ப வீரர் மைக்கல் ஜோன்ஸ் குவித்த அதிரடி அரைச் சதமும் அணித் தலைவர் றிச்சி பெறிங்டனின் அதிகப்பட்ச பங்களிப்பும் ஸ்கொட்லாந்தை பலமான நிலையில் இட்ட போதிலும் அவர்களது முயற்சி இறுதியில் வீண் போனது. இருவரும் 3ஆவது விக் கெட்டில் 77 பெறுமதிமிக்க ஓட்டங்களைப் பகிர்ந்து அணியை பலமான நிலையில் இட்டனர்.

மைக்கல் ஜோன்ஸ் 55 பந்துகளை எதிர்கொண்டு 6 பௌண்ட்ரிகள், 4 சிக்ஸர்களுடன் 86 ஓட்டங்களைக் குவித்தார். பெறிங்டன் 37 ஓட்டங்களையும் மெத்யூ க்ரொஸ் 28 ஓட்டங்களையும் மைக்கல் லீஸ்க் ஆட்ட மிழக்காமல் 17 ஓட்டங்களையும் பெற்றனர்.

பந்துவீச்சில் கேர்ட்டிஸ் கெம்ஃபர் 9 ஓட்டங்களுக்கு 2 விக்கெட்களைக் கைப்பற்றினார்.

# மக்களின் வருமானத்தில் 75 வீதம் உணவுக்கு செலவு

## தேசிய பேரவையின் துணைக்குழு சுட்டிக்காட்டு

கொழும்பு, ஒக். 20

**நாட்டின் மொத்த சனத்தொகையில் ஐந்தில் நான்கு பேர் சரியான ஊட்டச்சத்தான உணவைப் பெறுவதில்லை என்றும் மக்களின் வருமானத்தில் 75 வீதம் உணவுக்காகவே செலவிடப்படுவதாகவும் தேசிய பேரவையின் துணைக் குழு வெளிப்படுத்தியுள்ளது.**

பொருளாதார ஸ்திரப்படுத்தல் தொடர்பான குறுகிய மற்றும் நடுத்தர கால வேலைத் திட்டங்களை அடையாளம் காணும் தேசிய பேரவையின் உப குழு நாடாளுமன்றத்தில் அதன் தலைவர் பாராளுமன்ற உறுப்பினர் பாட்டலி சம்பிக்க ரணவக்க தலைமையில் கூடியது.

தற்போதைய பொருளாதார நெருக்கடியுடன் பத்து வருடங்களாக நாட்டில் போசாக்கு குறைபாடு நிலைமை அதிகரித்துள்ள நிலையில், அந்த நிலைமையை களைவதற்கு மேற்கொள்ளக் கூடிய குறுகிய மற்றும் நடுத்தர கால நடவடிக்கைகள் குறித்து இதன்போது கலந்துரையாடப்பட்டது.

2019ஆம் ஆண்டுக்குப் பின்னர் வருமானம் மற்றும் வீட்டுச் செலவு குறித்த கணக்கெடுப்பு நடத்தப்படவில்லை என்பது தெரியவந்துள்ளதாக இதன்போது தெரிவிக்கப்பட்டது.

இதனிடையே, தற்போதைய நிலவரத்தை கருத்திற்கொண்டு, பாடசாலைகளுக்கு வரும் மாணவர்கள் பற்றாக்குறையாக உள்ளதாக கணக்கெடுப்பில் தெரியவந்துள்ளதாகவும் இதன்போது கூறப்பட்டது.

பேராதனைப் பல்கலைக் கழகத்தின் பொருளாதாரம் மற்றும் புள்ளிவிபரவியல் திணைக்களத்தினால் 300 ஆசிரியர்களைப் பயன்படுத்தி இந்த கணக்கெடுப்பு நடத்தப்பட்டதாக பேராசிரியர் வசந்த அத்துகோரல குறித்த குழுவுக்கு விளக்கமளித்துள்ளார். (அ)





# 3 ஆய்வு நூல்களின் வெளியீட்டுவிழா நேற்று யாழ். பல்கலைக்கழகத்தில்

யாழ்ப்பாணம், ஒக். 20

யாழ்ப்பாணப் பல்கலைக் கழக வேந்தர் தகைசார், வரலாற்றுத்துறைப் பேராசிரியர் சி. பத்மநாதன் எழுதிய திருக்கேதீஸ்வரம், திருக்கோணேஸ்வரம் பற்றிய மூன்று ஆய்வு நூல்களின் வெளியீட்டு விழா நேற்று புதன்கிழமை முற்பகல் 9.30 மணியளவில் யாழ். பல்கலைக்கழக கைலாசபதி கலையரங்கில் நடைபெற்றது.

யாழ்ப்பாணப் பல்கலைக் கழக இந்து கற்கைகள் பீடத்தின் இந்து நாகரிகத்துறை ஏற்பாட்டில் துணைவேந்தர் பேராசிரியர் சி.சிறிசற்குணராஜா தலைமையில் இடம்பெற்ற இந்த நூல் வெளியீட்டு விழாவில், யாழ். பல்கலைக் கழகத் தமிழ்துறை முன்னாள் பேராசிரியர்

சி.சிவலிங்கராஜா, வரலாற்றுத்துறை முன்னாள் பேராசிரியர் ப.புஸ்பரட்ணம், யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலைப் பணிப்பாளர், மருத்துவர் த.சத்தியமூர்த்தி ஆகியோர் கருத்துரைகளை வழங்கினர்.

தொடர்ந்து நூலாசிரியர் சி.பத்மநாதன் இந்து கற்கைகள் பீடத்தினரால் மாலை அணிவிக்கப்பட்டு கௌரவிக்கப்பட்டார்.

நூலாசிரியரும் பேராசிரியருமான சி.பத்மநாதனால் மூன்று நூல்களும் வெளியிட்டு வைக்கப்பட்டதுடன் நூலின் பிரதிகளை யாழ். பல்கலைக்கழகத் துணைவேந்தர் பேராசிரியர் சி.சிறிசற்குணராஜா, தமிழ்த்துறை முன்னாள் பேராசிரியர் சி.சிவலிங்கராஜா, வரலாற்றுத்துறை முன்னாள் பேராசிரியர் ப. புஸ்பரட்ணம், யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலைப் பணிப்பாளர், மருத்துவர் த. சத்தியமூர்த்தி ஆகியோர் பெற்றுக் கொண்டனர். (அ)

# பொருளாதார நெருக்கடி நீடித்தால் தனியார் நிறுவனங்களுக்கு பாதிப்பு

கொழும்பு, ஒக். 20

இலங்கையில் பொருளாதார நெருக்கடி நீடித்தால் அல்லது மோசமடைந்தால், அது தனியார் நிறுவனங்களை கடுமையாக பாதிக்கலாம் என பிட்ச் ரேட்டிங்ஸ் தெரிவித்துள்ளது.

நுகர்வுப் பொருட்கள், மின் உற்பத்தி, கட்டட பணிகளில் ஈடுபட்டுள்ள நிறுவனங்களே அதிகம் பாதிக்கப்படும் அந்த அறிவிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

தேவை மற்றும் லாபத்தை பாதிக்கும் குறிப்பிடத்தக்க செலவு பணவீக்கம், இறக்குமதி கட்டுப்பாடுகள் மற்றும் அதிக வட்டி விகிதங்கள் என்பன அடுத்த 12-18 மாதங்களில் நிறுவனங்கள் எதிர்கொள்ளும் முக்கிய அபாயங்கள் என்றும் சுட்டிகாட்டியுள்ளது.

அடுத்த 12-18 மாதங்களில் பொருளாதார நிலைமைகள் மோசமடைந்தால், மதிப்பட்டதன்படி சுமார் 50 விகிதமான நிறுவனங்கள் பாதிக்கப்படும் என்றும் பிட்ச் ரேட்டிங்ஸ் சுட்டிக்காட்டியுள்ளது. (அ)

# இரத்மலானை விமான நிலையம் விமானப் பாடசாலையாக மாறும்

கொழும்பு, ஒக். 20

இரத்மலானை விமான நிலையத்தை விமானப் பாடசாலையாகவும் தனியார் விமான நிலையமாகவும் மாறவுள்ளதாக துறைமுகங்கள், கப்பல் மற்றும் விமானப் போக்குவரத்து அமைச்சர் நிமல் சிறிபால டி சில்வா தெரிவித்தார். பாராளுமன்றத்தில் நேற்று புதன்கிழமை எதிர்க் கட்சிகள் எழுப்பிய கேள்விக்கு பதிலளிக்கும்போதே அமைச்சர் இதனைக் குறிப்பிட்டார். (அ)

# திலினி பிரியமாலிக்கு விளக்கமறியல் நீடிப்பு

கொழும்பு, ஒக். 20

நிதி மோசடி தொடர்பான வழக்கில் கைது செய்யப்பட்ட திலினி பிரியமாலியை தொடர்ந்தும் விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவிடப்பட்டுள்ளது.

கோட்டை நீதவான் நீதிமன்றில் ஸ்கைப் தொழில்நுட்பத்தின் ஊடாக நேற்று புதன்கிழமை இடம்பெற்ற விசாரணைகளின்போதே இந்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

அதன்படி அவரை எதிர்வரும் நவம்பர் 2ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

உலக வர்த்தக மையத்தில் இயங்கி வரும் நிதி நிறுவனத்தில் பல பாரிய நிதி மோசடிகளில் ஈடுபட்டதாக திலினி பிரியமாலி மீது குற்றம் சுமத்தப்பட்டுள்ளது.

மேலும் வர்த்தகர்கள் மற்றும் உயரதிகாரிகளிடம் இருந்தும் பணத்தை மோசடி செய்ததாகவும் அவர் மீது குற்றம் சுமத்தப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (அ)

# மோட்டார் சைக்கிள் திருட்டு; 13 வயது சிறுமி தடுத்துவைப்பு

கொழும்பு, ஒக். 20

மோட்டார் சைக்கிள் திருடப்பட்ட சம்பவம் தொடர்பாக கைது செய்யப்பட்ட 13 வயதுச் சிறுமியை காலி கிதுலாம்பிட்டிய சிறுவர் தடுப்பு நிலையத்தில் வைத்து கைது செய்யுமாறு காலி நீதவான் லக்மினி விதானகமகே உத்தரவிட்டுள்ளார்.

இதன்படி, அடுத்த வருடம் முதலாம் திகதி வரை குறித்த சிறுமி அங்குத் தடுத்து வைக்கப்படுவார்.

காலி-யக்கலமுல்ல பிரதேசத்தில் மோட்டர்சைக்கிளை களவாடிச் சென்ற குற்றச்சாட்டில் குறித்த சிறுமியும் மற்றுமொரு இளைஞனும் பிரதேசவாசிகளால் பிடிக்கப்பட்டுள்ளனர். இளைஞர் தப்பியோடியுள்ளார்.

பிரதான சந்தேகநபர் சிறுமியின் தாயுடன் தொடர்பில் இருந்தமை பின்னர் தெரிய வந்தது. (அ)

# யக்கலமுல்லையில் துப்பாக்கிச் சூடு!

## குழந்தை உட்பட மூவர் காயம்

கொழும்பு, ஒக். 20

யக்கலமுல்லையில் இடம்பெற்ற துப்பாக்கிச் சூட்டு சம்பவத்தில் குழந்தை உட்பட மூவர் காயமடைந்துள்ளனர்.

யக்கலமுல்லை களுவலகல பகுதியில் நேற்று புதன்கிழமை முற்பகல் 11.30 மணியளவில் இந்தத் துப்பாக்கிச் சூடு நடத்தப்பட்டுள்ளதுடன், இதன்போது 3 வயது குழந்தையே காயமடைந்துள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

மோட்டார் சைக்கிளில் வந்த இருவர் துப்பாக்கிச் சூடு நடத்திவிட்டு தப்பிச் சென்றுள்ளதாகவும் பொலிஸார் கூறினர். துப்பாக்கிச் சூடு நடத்தப் பட்டதற்கான காரணம் குறித்து இதுவரையில் கண்டறியப்படாத நிலையில், பொலிஸார் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர். (அ)

# இரத்தக் காயங்களுடன் ஆண் ஒருவரின் சடலம்!

கொழும்பு, ஒக். 20

கொழும்பில் இரத்தக் காயங்களுடன் அடையாளம் தெரியாத ஆண் ஒருவரின் சடலம் மீட்கப்பட்டுள்ளது.

கொள்ளுப்பிட்டி, சி அவென்யு பகுதியிலிருந்து நேற்று காலை குறித்த சடலம் மீட்கப்பட்டுள்ளது.

119 என்ற அவசர தொலைபேசி இலக்கத்துக்குக் கிடைத்த தகவலையடுத்து சடலம் மீட்கப்பட்டது என்று பொலிஸ் ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது. சடலம் சுமார் 40 முதல் 50 வயது மதிக்கத்தக்க ஆண் என்று பொலிஸார் தெரிவித் துள்ளனர்.

சடலம் தற்போது கொழும்பு தேசிய வைத்தியசாலையின் பிரேத அறையில் வைக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பான மேலதிக விசாரணைகளைக் கொள்ளுப்பிட்டி பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (அ)

## கடன்...

இழக்க நேரிடும். வருமானத்தை அதிகரிக்காமல் பொருளாதாரத்தை பலப்படுத்த முடியாது. நாட்டை மீட்பதற்கு கடினமான தீர்மானங்களை எடுக்க வேண்டியுள்ளது.

இதைவிட மிகக் கடினமான காலத்தை எதிர்காலத்தில் சந்திக்க நேரிடும். இந்தக் கடன்களைப் பெற்று கடன் மறுசீரமைப்புத் திட்டத்தை செயல்படுத்த வேண்டும். 2019 நவம்பரில் வரிகள் குறைக்கப்பட்டு ஒப்பந்தத்திற்கு முரணாக செயற்பட்டமையால் சர்வதேச நாணய நிதியம் உதவி வழங்க மறுத்தது. அந்த ஆண்டு 700 மில்லியன் ரூபாய் வருமானம் இழக்கப்பட்டது.

நாம் தற்போது கடினமான கால கட்டத்திலேயே இருக்கிறோம். இது போன்ற கடினமான காலத்தில் நாம் கடினமான முடிவுகளையும் எடுக்க நேரிடும். கடன் மறுசீரமைப்பை வெற்றிகரமாக முன்னெடுத்து முறையாக பொருளாதாரத்தை நிர்வகிக்க அரசாங்கம் தயாராக உள்ளது.

நேரடி வரிகளை உயர்த்தி, நாட்டின் வருமானத்தை அதிகரிக்காவிட்டால், மீண்டும் வரியில் காத்திருக்கும் யுகம் உருவாகலாம். கடன் மறுசீரமைப்பை வெற்றிகரமாக முன்னெடுத்து சரியான பொருளாதார முகாமைத்துவத்தை உருவாக்க அரசாங்கம் தயாராக இருக்கிறது. நாட்டின் வருமானத்தை அதிகரிக்காமல் பொருளாதாரத்தை பலப்படுத்த முடியாது. நாட்டை மீட்பதற்கு கடினமான தீர்மானங்களை எடுக்க வேண்டியுள்ளதாகவும் தெரிவித்தார்.

மேலும், சர்வதேச நாணய நிதியத்தின் உத்தரவாதம் கிடைக்காமல் போனால், உலக வங்கி, ஆசிய அபிவிருத்தி வங்கி உள்ளிட்ட சர்வதேச நிறுவனங்கள் மற்றும் உதவி வழங்குவதாக கூறும் நாடுகளிடமிருந்து எமக்கு உதவிகள் கிடைக்காமல் போய்விடும். அவ்வாறு நிகழ்ந்தால், மீண்டும் வரிசைகளில் காத்திருக்கும் யுகத்துக்கே நாம் செல்ல நேரிடும்.

இதைவிடவும் மிகக் கஷ்டமான காலத்தை எமக்கு எதிர்காலத்தில் சந்திக்க நேரிடும். இந்தக் கடன்களைப் பெற்றுக் கொண்டு, கடன் மறுசீரமைப்பு திட்டத்தை நாம் செயல்படுத்த வேண்டும். இவற்றை நாம் விரும்பிச் செய்யவில்லை. விருப்பமில்லாவிட்டாலும் கூட சில விடயங்களை எமக்கு செய்ய நேரிடுகிறது. என்றாலும் அந்த முடிவுகளை நாம் அவ்வப்போது பரிசீலித்து வருகின்றோம்.

கடன் மறுசீரமைப்புத் திட்டத்தை வெற்றிகரமாக முன்னெடுக்கும். அதே நேரம், பெரும்போகத்தில் மிகச் சிறந்த அறுவடையும் கிடைக்குமாக இருந்தால், அதன் மூலம் சிறந்த பொருளாதார நன்மைகளை ஈட்டிக்கொண்டு நாம் முன்னோக்கிச் செல்ல முடியும். அப்போது எமக்கு ஏற்பட்டிருக்கும் பொருளாதார அழுத்தம் குறைவடையும்.

இதேபோன்று நாம் வெளிநாட்டுக் கையிருப்பை அதிகரித்துக் கொள்வது தொடர்பிலும் கலந்துரையாடியுள்ளோம். இந்தச் செயல்பாடுகள் யாவற்றையும் முன்னெடுப்பதன் மூலம் எமக்கு முன்னோக்கிச் செல்லக்கூடியதாக இருக்கும். நாங்கள் தற்போது கடினமான கால கட்டத்திலேயே இருக்கிறோம். இது போன்ற கடினமான காலத்தில் நாம் கடினமான முடிவுகளையும் எடுக்க நேரிடும். வேறு யாரும் முன்வராத நிலையிலேயே நான் இந்த கடினமான பொறுப்பை ஏற்றிருக்கிறேன். எனவே தான், இது தொடர்பில் அனைவருக்கும் விளக்கமளிக்க வேண்டியது எனது கடமையென்பதை நான் உணர்ந்தேன். இது தொடர்பில் மேலும் பேச்சுகளை நடத்த அரசாங்கம் தயாராக உள்ளது.

வரிக் கொள்கை தொடர்பில் ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க நேற்று விடுத்த விசேட அறிக்கையிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார். (ஐ)

## புலிகள்...

டும் என்ற கோரிக்கையை ஆளும் கட்சியான பாரதிய ஜனதா முன்வைத்துள்ளோம்.

- இவ்வாறு ஜனநாயகப் போராளிகள் கட்சியின் ஊடகப் பேச்சாளர் க. துளசி தெரிவித்துள்ளார்.

ஜனநாயக போராளிகள் கட்சியின் ஐவர் அண்மையில் இந்தியா சென்று திரும்பினர். அவர்களின் இந்திய பயணம் குறித்து அந்தக் கட்சியின் பேச்சாளரும் இந்திய பயணத்தில் இடம்பெற்றவருமான துளசி நேற்று யாழ்ப்பாணத்தில் செய்தியாளர் சந்திப்பு ஒன்றை நடத்தினார். அதிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

மேலும், நாங்கள் டில்லியில் பா. ஜ. கவின் முக்கியஸ்தர் ஒருவரை சந்தித்த போது, மாகாண சபை தேர்தல் விரைவில் நடத்தப்படவேண்டும், வடக்கு - கிழக்கு பகுதிகளில் தொல்லியல் திணைக்களத்தின் பெயரால் தொடர்ச்சியாக பிரச்னைகள் ஏற்படுத்தப்படுகின்றன, கிழக்கு பகுதிகளில் இஸ்லாமிய மக்கள் தமிழர்களின் காணிகளை அபகரித்து திட்டமிட்ட குடியேற்ற நடவடிக்கைகளை முன்னெடுக்கின்றமை நிறுத்த வேண்டும்.

தேர்தல் அரசியலுக்கு வந்திருக்கின்ற விடுதலைப் புலிகள் ஜனநாயக வழிமுறைகளை ஏற்றுள்ளனர். எனவே, புலிகள் மீதான தடையை நீக்கவேண்டும் என கோரிக்கையை நாம் வைத்தோம். தெற்காசிய பிராந்தியத்தில் முக்கிய வல்லரசான இந்தியா புலிகளின் தடையை நீக்கவேண்டும்.

அத்துடன், தமிழர்களுக்கான ஒரு சமஷ்டி அடிப்படையில் தீர்வு வழங்கப்பட வேண்டும். 1987இல் இலங்கையில் கொண்டுவரப்பட்ட 13ஆவது திருத்த சட்டம் நடைமுறைப்படுத்தப்பட வேண்டும். இந்தியா 13ஐ நடைமுறைப்படுத்தக் கோரி ஐ. நா. சபையில் வலியுறுத்தியதுபோல, இலங்கையில் நடைமுறைப்படுத்தப்பட வேண்டும் என்ற கோரிக்கையையும் வலியுறுத்தியுள்ளோம் - என்றார். (ஐ)

## பல தரப்பு...

ஐ. நா. மனித உரிமைகள் சபையின் வெளிப்புற (சர்வதேச - கலப்பின) பொறிமுறையை தடுப்பதற்காக உள்நாட்டு பொறிமுறை அவசியம் - என்றும் கூறியுள்ளார்.

நேற்று பாராளுமன்றத்தில் உரையாற்றிய வெளிவிவகார அமைச்சர் அலி சப்ரி,

நியாயமற்ற முறையில் குற்றஞ்சாட்டப்பட்டவர்கள் மற்றும் வருத்தப்பட்டவர்கள் உள்நாட்டு பொறிமுறையின் கீழ் முன்வந்து வழக்குகளை தொடுக்க முடியும். நாம் இதை செய்யாவிடின் பொறிமுறை நமது கையை விட்டுப் போகலாம்.

உலகம் முழுவதும் வாழும் அனைத்து இலங்கையர்களையும் எமது தேசத்தை கட்டியெழுப்ப- இன வேறுபாடின்றி அழைக்கிறோம்.

வெளிப்புற ஆதாரங்களை சேகரிக்கும் பொறிமுறையையும் தீர்மானத்தையும் நாம் நிராகரிக்கிறோம். ஏனெனில் இது எமது அரசமைப்புக்கு முரணானது. எந்தவொரு வெளிப்புற பொறிமுறைக்கும் இணைங்கப் போவதில்லை. இதை நாம் ஐ. நா. மனித உரிமைகள் பேரவையில் தெரிவித்துள்ளோம். ஐ. நா. மனித உரிமைகள் பேரவை தீர்மானத்தை பாதிக்கு மேற்பட்ட நாடுகள் தீர்மானத்தை ஆதரிக்கவில்லை. ஏழு நாடுகள் எதிராக வாக்களித்தன - என்றும் கூறினார். (ஐ)

## பலாலி விமான...

படுமா? என்று நேற்று பாராளுமன்றத்தில் புத்திக பத்திரண எம். பி. கேள்வி எழுப்பினார். இதற்கு பதிலளித்தபோதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

மேலும், யாழ்ப்பாணம் விமான நிலையம் சர்வதேச விமான நிலையமாக மாற்றப்பட்டதன் பின்னர் சில இந்திய விமான நிறுவனங்கள் சேவைகளை முன்னெடுப்பதாக அறிவித்திருந்தன. எனினும், வான் போக்குவரத்து சார்ந்த தொழில்நுட்ப சிக்கல்களை காரணம் காட்டி அந்த நிறுவனங்கள் தொடர்ந்தும் அதனை பிற்போட்டு வருகின்றன.

இந்த மாத இறுதிக்குள் சில விமானங்கள் யாழ்ப்பாணம் விமான நிலையத்துக்கு சேவையை முன்னெடுப்பதாக தெரிவித்துள்ளன. நாட்டின் நிலைமை கருதி, இந்திய சுற்றுலா பயணிகளை அதிகளவில் இலங்கைக்கு வரவழைக்க நடவடிக்கை எடுக்கப்படுகிறது.

இந்த விமான நிலையத்தின் மேலதிக அபிவிருத்திக்காக இந்தியா அரசாங்கம் நிதியுதவி வழங்கியுள்ளது. தற்போது சிறிய விமானங்களை மாத்திரமே அங்கு தரையிறக்க முடியும். இந்த நிதியில், பெரிய விமானங்களை தரையிறக்கக்கூடிய வகையில் ஓடு பாதைகளை விரிவாக்கம் செய்யஎதிர்பார்க்கப்பட்டுள்ளது. இது தொடர்பில் இந்திய அரசாங்கத்துடன் பேச்சு இடம்பெறுகிறது - என்றார். (ஐ)

## இலங்கை...

ளோம். நலிவடைந்த நிலையில் உள்ள மக்கள், வறியவர்கள்மீதான தாக்கம் குறித்தே நாம் ஆழ்ந்த கவலை கொண்டுள்ளோம். கொள்கையின் அடிப்படையில் நெருக்கடியான தருணத்தில் இலங்கைக்கு உதவ அர்ப்பணிப்புடன் உள்ளோம் என்றும் அவர்கள் தெரிவித்தனர். (ஐ)

## எரிபொருளுக்கு...

ரஷ்யாவுக்கான இலங்கை தூதுவர் பேராசிரியர் ஜனிதா ஏ. லியனகே, ரஷ்யாவின் பிரதி நிதி அமைச்சர் மஸ்கி மோகவ் திமுர், இலங்கைக்கான ரஷ்ய தூதுவர் லெவன் ஜகர்யான் மற்றும் ஏனைய நிதி மற்றும் வெளிநாட்டலுவல்கள் அமைச்சின் அதிகாரிகளின் பங்கேற்புடன் இந்த கலந்துரையாடல் இடம்பெற்றுள்ளது.

இதன்போது இந்த இக்கட்டான நேரத்தில் எரிபொருளைக் கொள்வனவு செய்வதற்கு, இவ்வாறான கடனுதவிகளின் முக்கியத்துவத்தை ரஷ்யாவுக்கான இலங்கை தூதுவர் பேராசிரியர் ஜனிதா ஏ.லியனகே வலியுறுத்தியுள்ளார்.

மேற்கூறிய கடன் திட்டத்தின் கீழ் ரஷ்யாவிடமிருந்து எரிபொருளை கொள்வனவு செய்வதற்கான வழிமுறைகள் தொடர்பில் அந்நாட்டின் நிதி அமைச்சருடன் நீண்ட தீர்க்கமான கலந்துரையாடல் முன்னெடுக்கப்பட்டது.

## பரந்தன்...

தந்த போதே அவர் இதனை தெரிவித்தார்.

திரவ குளோரின், ஹைட்ரோகுளோரிக் அமிலம், துத்தநாக குளோரைட் மற்றும் பெரிக் குளோரைட் ஆகிய வற்றை மூலப்பொருளாகப் பயன்படுத்தி 1954ஆம் ஆண்டில் பரந்தன் தொழிலசாலையில் இரசாயன உற்பத்தி நடைபெற்றது.

போர் காரணமாக 1985இல் தொழிற்சாலையின் உற்பத்தி நிறுத்தப்பட்டது. நாட்டின் தேவைகளுக்கான இரசாயனங்கள் இறக்குமதி செய்யப்படுகின்றன.

நாட்டின் இறக்குமதியை குறைப்பது அரசாங்கத்தின் கொள்கையாக உள்ளது.

முதல் கட்டமாக, காஸ்டிக் சோடா, குளோரின் ஹைட்ரோகுளோரிக் அமிலம், அலுமினியம் குளோரைட் ஆகிய வற்றை உற்பத்தி செய்வதற்கான ஆரம்ப நடவடிக்கைகள் எடுக்கப்படும்.

மலசலகூடம், குளியலறை சுத்தமாக்கி திரவங்கள், பாத்திரம் கழுவும் சவர்க்காரம், வாகனங்கள் கழுவும் திரவம், யூரியா உரம் தயாரிப்பது, சல்பூரிக் அமிலம், நைத்ரிக் அமிலம் மற்றும் சோடியம் கார்பனைற் ஆகிய வற்றை உற்பத்தி செய்வதற்கான சாத்தியக்கூறு தொடர்பில் ஆய்வு செய்யப்படும் என்றும் அமைச்சர் இதன்போது தெரிவித்தார். (ஐ)

## தமிழ்...

தார்.

"பொதுமன்னிப்பில் விடுதலையாகும் எண்மரும் பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டு நீதிமன்றத்தால் ஐந்து வருடம் முதல் 200 வருடங்கள் வரை தண்டனை வழங்கப்பட்டவர்கள். இவர்களின் விடுதலை தொடர்பாக சிறைச்சாலை திணைக்களத்தினரிடம் நான் தொடர்பு கொண்ட போது குறித்த 8 பேரை விடுவிப்பதற்கான கடிதம் கிடைத்திருக்கின்றது - தீபாவளி தினத்தன்று இவர்கள் விடுதலை செய்யப்படுவர் என்று தெரிவிக்கப்பட்டது.", என்றும் சார்ள்ஸ் நிர்மலநாதன் எம். பி. கூறினார். (ஐ)

## கடனை...

இதன்போது ஜனாதிபதி, இலங்கைக்கு அமெரிக்க அரசாங்கம் தொடர்ச்சியாக வழங்கி வரும் ஆதரவைப் பாராட்டியதுடன் நன்றியும் கூறினார்.

இலங்கையில் அமைதியான சூழலை ஏற்படுத்தியதற்காக ஜனாதிபதிக்கு வாழ்த்து தெரிவித்த உதவி இராஜாங்கச் செயலாளர், ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க, சவால்களை வெற்றிகொண்டு நாட்டில் பொருளாதார ஸ்திரத்தன்மையை ஏற்படுத்துவதற்கு மிகவும் பொருத்தமானவர்.

இந்த இக்கட்டான காலகட்டத்தில், இலங்கைக்கும் அதன் மக்களுக்கும் சகலவிதமான ஆதரவையும் வழங்க எதிர்பார்ப்பதாகவும் ஜனநாயக நிறுவனங்களை வலுப்படுத்துவதற்கும் நாடுகளுக்கு இடையில் நல்லிணக்கத்தை கட்டியெழுப்புவதற்கும் ஜனாதிபதி எடுத்த முயற்சிகளை பாராட்டுவதாகவும் டொனால்ட் லு தெரிவித்தார். (ஐ)

## 22ஆம்...

22ஆவது அரசமைப்பு திருத்தச் சட்ட மூலம் தொடர்பில் கலந்துரையாடுவதற்கான ஆளும் கட்சி எம். பிக்கள் கூட்டம், ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தலைமையில் பாராளுமன்ற கட்டடத் தொகுதியில் நடைபெற்றது.

இதன்போது, ஜனாதிபதியின் அதிகாரங்களை குறைக்கும் எந்தவொரு திருத்தத்தையும் ஆதரிக்கப் போவதில்லை என முன்னாள் அமைச்சர் எஸ். பி. திஸாநாயக்க தெரிவித்தார்.

19ஆவது அரசமைப்பு திருத்தத்துக்கு எதிராக வாக்களித்த நான் 22ஆவது திருத்தத்துக்கு எதிராகவும் வாக்களிக்கவுள்ளேன் என்று முன்னாள் அமைச்சர் சரத் வீரசேகர குறிப்பிட்டார்.

மேலும், 22ஆவது திருத்தம் வேடிக்கையானது என்று தெரிவித்த கட்சியின் செயலாளர் சாகர காரியவசம், பொதுஜன பெரமுனவின் எம்.பிக்கள் பலர் அதற்கு எதிராக வாக்களிக்கவுள்ளனர் - என்றார். (ஐ)

(தொடர்புடைய செய்தி பக்கம் - 5இல்)

ஈழநாடு
Eelanadu

# ஐ.நா. மனித உரிமைகள் பேரவையை கடுமையாக சாடுகின்றார் அலி சப்ரி!

கொழும்பு, ஒக். 20

**ஐ.நா. மனித உரிமைகள் பேரவையில் இலங்கைக்கு எதிராக வாக்களித்த நாடுகளின் நடத்தையை வெளிவிவகார அமைச்சர் அலி சப்ரி கடுமையாக விமர்சித்துள்ளார்.**

இலங்கையின் பலத்த எதிர்ப்பையும் மீறி அண்மைய தீர்மானம் நிறைவேற்றப்பட்டதாக அமைச்சர் அலி சப்ரி கூறினார்.

பாராளுமன்றில் நேற்று புதன்கிழமை உரையாற்றிய அவர், மனித உரிமைகள் பேரவையின் இந்த நடவடிக்கை அரசியல் பின்புலத்தை கொண்டது என்றும் சுட்டிக்காட்டினார்.



ஐ.நா மனித உரிமைகள் பேரவை சில நாடுகளின் அரசியல் தேவைகளுக்கு ஏற்ப செயற்படுவதாகவும் அவர் குற்றம் சாட்டினார்.

எவ்வாறாயினும் இலங்கையில் நடந்ததாகக் கூறப்படும் மீறல்கள் தொடர்பாக, உள்ளக பொறிமுறை ஊடான விசாரணையையே அவசியம் என்றும் அலி சப்ரி வலியுறுத்தினார். மேலும் இலங்கை மக்களின் உரிமைகளை பாதுகாக்க அரசாங் கம் நடவடிக்கை எடுத்து வருகின்றது என்றும் அவர் குறிப்பிட்டார். (அ)



## சிவில் சமூகப் பிரதிநிதிகளை நேற்று சந்தித்த டொனால்ட் லூ

கொழும்பு, ஒக். 20

இலங்கைக்கு விஜயம் மேற்கொண்டுள்ள தெற்கு மற்றும் மத்திய ஆசிய விவகாரங்களுக்கான அமெரிக்க உதவி இராஜாங்க செயலாளர் டொனால்ட் லூ நேற்று சிவில் சமூக பிரதிநிதிகளைச் சந்தித்து கலந்துரையாடினார்.

பொறுப்புக்கூறலை உறுதிப்படுத்தல் மற்றும் தற்போதைய சவால்களை வெற்றி கொள்வதற்கு எவ்வாறு இணைந்து பணியாற்றலாம் என்பது குறித்து இந்த சந்திப்பின்போது கலந்துரையாடப்பட்டுள்ளது.

ஓரங்கட்டப்பட்ட சமூகங்களுக்கு சேவை செய்வதற்கும் அவர்களுக்கு ஆதரவாக குரல் கொடுப்பதற்கும் வலுவான சிவில் சமூகம் முக்கியமானது என இலங்கைக்கான அமெரிக்கத் தூதுவர் ஜூலி சுங் தெரிவித்துள்ளார். (அ)

## போதைக்கு அடிமையான மகனை திருத்தித் தருமாறு கோப்பாய் பொலிஸ் நிலையத்தில் ஒப்படைத்த தாய்!

யாழ்ப்பாணம், ஒக். 20

கோப்பாய் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட உடும்பிராய் மேற்கு பகுதியைச் சேர்ந்த 17 வயது இளைஞர் ஒருவரை அவரது தாயார் நேற்று கோப்பாய் பொலிஸ் நிலையத்தில் ஒப்படைத்தார்.

கடந்த இரண்டு வருடங்களாக போதைப்பொருளுக்கு அடிமையாகி உள்ள அவரை திருத்தித் தருமாறு கோப்பாய் பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரியிடம் இளைஞரின் தாயார் கூறியுள்ளார்.

ஒப்படைக்கப்பட்ட இளைஞன் க.பொ.த சாதாரண பரீட்சைக்கு தோற்றிய பின் வீட்டில் இருப்பதாகவும், கடந்த 2 வருடங்களுக்கு மேலாக போதைப்பொருள் பாவனையில் ஈடுபட்டு வருவதன் காரணமாக நேரத்துக்கு ஒழுங்காகச் சாப்பிடுவதில்லை,இரவில் தூக்கமின்மை போன்ற பல இடர்பாடுகளுக்கு முகம் கொடுத்து வருவதாகவும் தாயார் கூறினார்.

எனவே தனது மகனைத் திருத்தித் தருமாறு கோரி அவர் கோப்பாய் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரியிடம் ஒப்படைத்துள்ளார்.

பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்ட குறித்த இளைஞன் இன்று நீதிமன்றத்தில் பாரப்படுத்தப்பட உள்ளதாக கோப்பாய் பொலிஸ் நிலையத் தகவல்கள் தெரிவித்தன. (அ)

## பாராளுமன்றத்துக்கு வெளியே மக்கள் சபை நிறுவ முடியாது!

### கூறுகிறார் அமைச்சர் சுசில்



கொழும்பு, ஒக். 20

இந்த நாட்டில் எந்தவொரு நபரும் பாளுமன்றத்தைப் போன்று பொது சபையையோ அல்லது வேறு எந்த நிறுவனத்தையோ நிறுவ முடியாது என அமைச்சர் சுசில் பிரேமஜயந்த நேற்று பாராளுமன்றத்தில் தெரிவித்தார்.

சபை நடவடிக்கைகளை ஆரம்பித்து வைத்து உரையாற்றும்போதே அமைச்சர் மேற்கண்டவாறு கூறினார்.

பாராளுமன்றத்துக்கு நிகரான மக்கள் பேரவையொன்றை ஸ்தாபிக்க தயாராகி வருவதாக ஊடகங்களில் செய்திகள் வெளியாகியுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டார்.

பாராளுமன்றத்தால் கூட இவ்வாறான நிறுவனங்களை நிறுவ முடியாது என தெரிவித்த அமைச்சர், நாட்டு மக்களின் விருப்பத்திற்கேற்ப பாராளுமன்ற உறுப்பினர்கள் நியமிக்கப்படுவதாகவும் தெரிவித்தார். (அ)

## பேருந்து கட்டணத்தைக் குறைப்பதற்கு சுகாதார அமைச்சின் பரிந்துரை தடை

கொழும்பு, ஒக். 20

கோவிட் காலத்தில் உயர்த்தப்பட்ட பஸ் கட்டணத்தை குறைக்க சுகாதார அமைச்சின் 'கோவிட்' பரிந்துரைகள் தடையாக உள்ளதாக போக்குவரத்து அமைச்சின் மூத்த அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

'கோவிட்' காலப்பகுதியில், இருக்கைகளின் எண்ணிக்கைக்கு மாத்திரம் பயணிகளை ஏற்றிச் செல்வது உட்பட பல நிபந்தனைகளின் கீழ் பஸ் கட்டணம் 20 சதவீதத்தால் அதிகரிக்கப்பட்டது,

ஆனால் தனியார் பஸ்கள் இருக்கை எண்ணிக்கை வரம்பை பின்பற்றாத காரணத்தால், மீதமுள்ள 10 சதவீத பஸ் கட்டணத்தை குறைக்க வேண்டும், ஆனால் சுகாதார அமைச்சகம் வெளியிட்டுள்ள 'கோவிட்' சுற்றறிக்கை காரணமாக . பஸ் கட்டணத்தை குறைக்க முடியாத நிலை ஏற்பட்டுள்ளதாக, அந்த அதிகாரி மேலும் கூறினார். (அ)

## பஸ் சங்கங்கள் எச்சரிக்கை

கொழும்பு, ஒக். 20

குத்தகை தவணையை செலுத்த கால அவகாசம் வழங்கப்படாவிட்டால், எதிர்வரும் 25ஆம் திகதிக்கு பின்னர் வேலை நிறுத்தத்தில் ஈடுபடவுள்ளதாக பஸ் சங்கங்கள் அறிவித்துள்ளன.

கொழும்பில் நேற்று புதன்கிழமை இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்ட அகில இலங்கை தனியார் பஸ் நிறுவனங்கள் சம்மேளனத்தின் பொதுச் செயலாளர் அஞ்சன பிரியஞ்சித் இதனைத் தெரிவித்தார். எதிர்வரும் டிசெம்பர் மாதம் வரை குத்தகை தவணையை செலுத்த கால அவகாசம் வழங்கப்படாவிட்டால், இவ்வாறு வேலைநிறுத்தத்தில் ஈடுபடவுள்ளதாக அவர் குறிப்பிட்டார். (அ)













இப்பத்திரிகை 707, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் அமைந்துள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் நிறுவனத்தினரால் 20.10.2022 அன்று ஏ9 வீதி, நாவற்குழியில் உள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.